26 பக்கங்கள்
விலை ரூபா 25.00
# உதயன்
www.onlineuthayan.com
சுடர் 28 கதிர் 057 வள்ளுவர் ஆண்டு 2044 தை 09 செவ்வாய்க்கிழமை (22/01/2013) UTHAYAN - A Lively National Tamil Daily



இங்கே இப்படி! அங்கே அப்படி 23
சீன விமானப் படையினர் எந்நேரமும் உஷார் நிலையில் 09
தீவிரவாத சதிச் செயல்களின் பின்னணியில் இந்து அமைப்புகள்? 08

# வடக்கில் வலுக்கிறது சிங்களக் குடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜனவரி 22
வடக்கு மாகாணத்தின் எல்லையில் அமைந்துள்ள வவுனியா தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் விவசாயிகள் என்ற போர்வையில் 2 ஆயிரம் சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றும் திட்டம் ஒன்று படையினரின் ஆதரவுடன் அரசினால் திரை மறைவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான வேலைகள் முழு மூச்சாக முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் குடியேற்றப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு ஏக்கர் காணி வீதம் வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

மனிதாபிமான விவசாய உற்பத்தி நடவடிக்கைச் செயற்றிட்டத்தின் கீழ், வவுனியா தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 2 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில்
பார்க்க பக்கம் 04

''விவசாயிகள் என்ற போர்வையில் 2,000 பெரும்பான்மையினர் குடும்பங்களை படையினரின் பாதுகாப்பில் குடியமர்த்துவதற்கு அரசு திரைமறைவில் திட்டம்.''



## 1,200 புலிகள் இன்னும் மறைந்துள்ளனராம்

கொழும்பு,ஜன.22
பாதுகாப்பு படையினரிடம் சரணடையாத மற்றும் கைது செய்யப்படாத நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச்சேர்ந்த இன்னும் 1,200 பேர் இருக்கின்றனர் என்று பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

புலிச் சந்தேக நபர்கள் 400 பேர் வடக்கு-கிழக்கு உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களிலும் இருப்பதாகவும் பாதுகாப்புத் தரப்பினர் கூறியுள்ளனர்.

வடக்கு பாதுகாப்புப்பிரிவினரினால்கடந்த
பார்க்க பக்கம் 04

## பல்கலை. மாணவர் இருவர் இன்று விடுவிக்கப்படுவர்





யாழ்ப்பாணம், ஜன.22
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரில் இருவர் இன்று விடுவிக்கப்படவுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் மாணவர்கள் இருவர் இன்று விடுதலையாகின்றனர் என்பதை உறுதிப்படுத்தினார்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் வி.பவானந்தன், உறுப்பினர் எஸ்.சொல
பார்க்க பக்கம் 04

## இந்தியாவின் கொள்கை மாற்றமுற வேண்டும்

### கூட்டமைப்பு கோரிக்கை

கொழும்பு,ஜன 22
தமிழீழ விடுதலைப் புலிகள் இல்லாத நிலையில் இலங்கை தொடர்பான தனது கொள்கையை புதிய நிலைமைக்கேற்ப இந்தியா விரைவில் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டுமெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

இது தொடர்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்ததாவது:-

புலிகளுக்கு எதிரான போரின்போது இந்தியா இரகசியமாகவும் வெளிப்படையாகவும் இலங்கைக்கு ஆதரவளித்தது. போர் முடிந்த பின், தமிழ்ச் சமுதாயத்தின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பது தொடர்பாக இந்திய தலைவர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை இலங்கை மீறியுள்ளது.

சீனாவின் ஆதரவு கிடைப்பதனால் ஜனநாயக நாடுகளுக்கு எதிராக நிற்கும் துணிவை இலங்கை பெற்றுள்ளது. இலங்கை அரசு அமெரிக்காவையோ ஐரோப்பா
பார்க்க பக்கம் 04

## கொக்குவிலில் மருத்துவர் கொலை
### நகைகள் கொள்ளை

யாழ்ப்பாணம்,ஜன.22
தனித்திருந்த மருத்துவர் ஒருவர் கொலை செய்யப்பட்டு அவரது வீட்டிலிருந்த 5 பவுண் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்குவில், பொற்பதி வீதியில் திங்கட்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த துரைச்சாமி ஜெயரட்ணம் (வயது-63)
பார்க்க பக்கம் 04

## துப்பாக்கிச் சூட்டில் பெண் சிப்பாய் படுகாயம்

யாழ்ப்பாணம்,ஜன.22
துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த இராணுவப் பெண் சிப்பாய் ஒருவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் அச்செழு இராணுவ முகாமில் நேற்று
பார்க்க பக்கம் 04

## வடக்குத் தேர்தல் குறித்து அரசு இந்தியாவுக்கு விளக்கம்

கொழும்பு, ஜன.22
அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள விவகாரம் தொடர்பிலும் வடமாகாணசபைத் தேர்தல் குறித்தும் இலங்கை அரசு இந்தியாவுக்கு விரிவான விளக்கத்தை அளிக்கும் என அரச உயர்மட்ட வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது.

இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், அந்நாட்டு உயர்மட்ட அதிகாரிகளுடனான சந்திப்பின்போதே அரசமைப்பு மாற்றம் உள்ளிட்ட விடயங்களை எடுத்துரைப்பார் என்றும் அவ்வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது.

மூன்று நாள்கள் உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், இன்று டில்லியில் நடைபெறும் இரு நாடுகளுக்கிடையிலான கூட்டு ஆணைக்குழுவின் எட்டாவது கூட்டத்திலும் கலந்துகொள்வார்.
பார்க்க பக்கம் 04

## ஜெனிவாவில் இலங்கைக்கு மரணப் பொறி தீர்மானிக்கும் சக்தி இந்தியாவின் கைகளில்

### தமிழருக்குத் தீர்வு வழங்கும் எண்ணம் எதுவும் டில்லியிடம் இல்லை; எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.22
ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைப் சபையின் கூட்டத்தொடர் இலங்கைக்கு மரணப் பொறியாக அமையும் அபாயம் அதிகமாகவே உள்ளது. சர்வதேச நாடுகளின் கடுமையான அழுத்தங்கள் இந்தக் கூட்டத்தொடரின்போது இலங்கை அரசுக்கு எதிராக பிரயோகிக்கப்படும். இதைத் தீர்மானிக்கும் சக்தி இந்தியாவின் கைகளிலேயே உள்ளது என எதிர்க்கட்சிகள் தெரிவித்தன.

தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற எண்ணம் இந்தியாவிடம் இல்லை என்றும் அவை குற்றஞ்சாட்டின.

கடந்த ஜெனிவாக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானமொன்றை நிறைவேற்றி கடுமையான அழுத்தங்களைப் பிரயோகித்த அமெரிக்கா, மார்ச் மாதக் கூட்டத் தொடரிலும் பிரேரணையொன்றைக் கொண்டு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்ற நிலையில், சர்வதேச நாடுகளும் இலங்கை அரசின் நடவடிக்கைகள் குறித்து கடுமையான அதிருப்தி வெளியிட்டு வருகின்றன.
பார்க்க பக்கம் 04

### பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைதாகி

## 5 வருடங்களை சிறையில் கழித்தவர் நிரபராதி என்று நேற்று விடுதலை

யாழ்ப்பாணம், ஜன.22
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர் வழங்கியதாகக் கூறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்டு யாழ்.மேல் நீதிமன்றினால் நிரபராதி என்று விடுதலை செய்யப்பட்டார்.

யாழ்.மேல் நீதிமன்றில் ஆணையாளர் ஜே.விஸ்வ
பார்க்க பக்கம் 04

## மிதிவெடியில் சிப்பாய் காயம்

யாழ்ப்பாணம்,ஜன.22
பலாலியில் மிதிவெடியில் சிக்கிய இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக [illegible] சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
பார்க்க பக்கம் 04

EXPOAIR
your friend in the skies...
வண்ணமயமான கொழும்பு நகரத்திற்கான சுற்றுலாவில் மகிழுங்கள்...
உங்களுக்கு பிரியமானவர்களுடன் நீங்கள் கொழும்பு நகரத்தினை சுற்றிப்பார்க்கவும் அறிந்து கொள்ளவும் உங்களால் நம்பமுடியாத ஒரு சந்தர்ப்பத்தினை நாங்கள் உங்களுக்கு வழங்குகின்றோம்,
உங்களது பதிவுகளுக்கு இப்பொழுதே முந்துங்கள்.
EXPO AVIATION (PVT) LTD.
No 141 F, Palaly Road, Thirunelvely, Jaffna.
Tel: +94 21 2223891 / 2223790
Fax : +94 21 2226297 - Mobile : 0773 788795
Email : jaffna@expoavi.com - Website: www.expoavi.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர் ஊடுருவலைத் தடுக்கப் பல வருடங்கள் ஆகும்

## றுகுணு பல்கலைக்கழக துணைவேந்தர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஜன.22

பாக்கு நீரிணையில் இந்திய இழுவைப் படகுகளால் வடபகுதிக் கடற்றொழிலாளர்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு 5 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரை தேவைப்படும்.

இந்தப் பிரச்சினையைத் தேசியப் பிரச்சினையாகக் கருதி விஞ்ஞான பூர்வமான முறையில், அறிவியல் சார்ந்த முறையில் அணுகவேண்டும் என றுகுணு பல்கலைக் கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சுசரித்த மெண்டிஸ் தெரிவித்தார்.

பாக்கு நீரிணையில் இந்திய இழுவைப் படகுகளால் இலங்கை வடபகுதி கைத்தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்றுக் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. அதன் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே பேராசிரியர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:-

இந்தப் பிரச்சினை தேசிய மட்டத்தில் பரிணமித்து இருப்பதால் தேசிய பிரச்சினையாக கருதி நடவடிக்கை எடுக்க வேண்டி உள்ளது.

றுகுணு பல்கலைக்கழகத்தின் பங்களிப்போடு கல்வியியலாளர்கள் என்ற முறையில் வடக்கில் உள்ள கல்வியியலாளர்களுடன் அறிவியல் சார்ந்த உறவை மேம்படுத்தி அதன் மூலமாக மக்களுடனான தொடர்புகளை வளர்க்க நாம் முன் வருகிறோம். இதன் மூலமாக இனங்களுக்கிடையே இருக்கின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும், இனங்களுக்கிடையே உறவுகளை வலுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். வடக்கிலுள்ள, தெற்கிலுள்ள கல்வியியலாளர்கள் ஒன்றிணைந்து தமது பங்களிப்பை முழுமையாகச் செயற்படுத்துவதன் மூலமாக இந்தத் தேசிய பிரச்சினைகளுக்கு எம்மால் பங்களிப்புச் செய்யமுடியும்.

இது நீண்ட காலமாக இருந்து வருகின்ற பிரச்சினை. இதற்கு குறுகிய காலத் தீர்வு, இடைக்காலத் தீர்வு ,நீண்ட காலத் தீர்வு என மூன்று கட்டங்களில் தீர்வுகாண வேண்டியுள்ளது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண 5 தொடக்கம் 10 வருடங்கள் எடுக்கும். நீண்ட காலத் தீர்வுக்கே இந்தளவு காலம் எடுக்கும். இது இலங்கை, இந்திய அரசுகளுக்கிடையே பேசித்தீர்க வேண்டிய பிரச்சினை மட்டுமன்றி மக்கள் பிரச்சினையாகவும், மீனவர்களிடம் பேச வேண்டிய பிரச்சினையாகவும், அரச மட்டத்தில் இறுதியாகப் பேசித் தீர்க்க வேண்டிய பிரச்சினையாகவும் உள்ளது.

இதனை வெறும் அரசியல் பிரச்சினையாக மட்டும் கருதாது சமூகப் பிரச்சினையாகவும், மனிதாபிமான பிரச்சினையாகவும் கருதி பொருத்தமான முறையில் அணுக வேண்டியுள்ளது. பின்னர் இறுதித் தீர்மானத்துக்கு வர வேண்டும். அது வரை மௌனமாக இருப்பது என்பதல்ல.

அதற்கு இடைக்காலத் தீர்வு ஒன்றைக்காண வேண்டும். படிபடியாக வளர்ச்சியடைந்து அது நீண்டகாலத் தீர்வாக முதிர்ச்சி அடைய வேண்டும்.

நீண்ட காலத் தீர்வு புவியியல் சார்ந்த சூழலைச் சார்ந்த முறைகளையும் அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்க வேண்டும் என்றார் .

வலி.வடக்கில் வலித்தூண்டல், மாதகல்,முல்லைத்தீவு நாயாறு பகுதிகளில் தென்னிலங்கையிலிருந்து வரும் மீனவர்கள் படையினருடன் தங்கியிருந்து மீன் பிடிப்பது அதிகரித்துள்ளது. நாயாறு பகுதியில் முன்னர் 38 படகுகளும் படையினரால் அனுமதி வழங்கப்பட்டது. தற்போது அது 160 படகுகளாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தமிழ் மீனவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என செய்தியாளர்கள் பேராசிரியரிடம் வினவிய போது, பருவகால பெய்ர்வு அடிப்படையிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறுகின்றன. இதுபோர்க் காலத்தின் பின்னர் ஏற்பட்ட ஒரு நிலமை. எனவே இதனை உள்ளூர் அரசியல் தலைவர்கள் அரசுடன் பேசித் தீர்க்க வேண்டும் என்றார். (த-4)

### இலங்கையைக் கைவிடோம் ஜப்பான் கூறுகிறது

கொழும்பு,ஜன 22

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஜப்பான் அரசு தொடர்ந்தும் ஆதரவு வழங்கும் என ஜப்பானின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தடங்கல் ஏற்படாத வகையில் ஜப்பான் அரசு ஆதரவு வழங்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடனான சந்திப்பின் போது ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்படும் திவிநெகும தேசிய வேலைத் திட்டம் வெற்றிப் பாதையில் செல்வதாகப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் இதன்போது ஜப்பான் வெளிவிவகார அமைச்சருக்கு தெரிவித்துள்ளார். (த)

# அநுராதபுர கால சந்திரவட்டக்கல் ஏலத்துக்கு வருகிறது பிரிட்டனில்

லண்டன்,ஜன 22

பிரிட்டனில் ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ள சந்திரவட்டக்கல் புராதன நகரமான அநுராதபுரத்தில் காணப்படுபவை போலவுள்ளதாகவும் இதனால் பிரிட்டனிலுள்ள இலங்கைத் தூதுவர் அது இலங்கைக்குச் சொந்தமானதென ஆராயும் முயற்சியாக இது பற்றி இலங்கைப் புதைபொருள் ஆராய்ச்சி நிலையத்துக்கு அறிக்கையொன்றை அனுப்பிவைத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

8 அடி நீளமான கருங்கல்லில் செதுக்கப்பட்ட புத்த கோயில் படியான இக்கல், பல வருடங்களுக்கு முன்னர் இலங்கை தேயிலைத் தோட்டத் துரையாகவிருந்த ஒருவருக்குச் சொந்தமாக விருந்த தோட்டத்தில் காணப்பட்டுள்ளது.

இவ்வீட்டை வாங்கியிருந்தவர்கள் வேறு வீட்டுக்கு மாறிச்செல்லும்போது, 50,000 பவுண் மதிப்புள்ள இந்தச் சந்திரவட்டக்கல்லை விற்பனை செய்யத் தீர்மானித்தனர். இது 1,300 ஆண்டுகள் பழமையானதென நிபுணர்கள் கூறியுள்ளனர்.

டெவொன் என்னும் இடத்திலுள்ள வீடொன்றின் உரிமையாளர் அண்மைக் காலம்வரை மிதிகல்லாக இதைப் பயன்படுத்தி வந்துள்ளார். இப்போது இவ் வீட்டை விட்டு வேறிடம் செல்லவுள்ளதால் இதை ஏலமிடத் தீர்மானித்தார்.

இது மிகவும் பழமையானதாக இருப்பினும் நல்ல நிலைமையிலுள்ளதென ஏல விற்பனையாளர் கூறினார்.

இக்கல்லில் சிங்கங்கள், குதிரைகள், யானைகள், பறவைகள் ஊர்வலம் போவது போன்ற கலை வேலைப்பாடுகள் செதுக்கப்பட்டுள்ளன.

இக்கல் அநுராதபுரக் காலத்துக்குரியது. இது அநேகமாக 8ஆம் அல்லது 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாமென தொல்பொருள் நிபுணரான அலிஸ் பெய்லி கூறினார். இக்கல்லில் பாசி வளர்ந்துள்ளது. இதை நாம் சுத்தம் செய்வோமெனவும் அவர் கூறினார்.

இக்கல் ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி பிரிட்டனில் ஏலத்தில் விற்பனை செய்யப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (த)

### சட்டவிரோத மணல் அகழ்வு அரச அதிபருக்கு நேற்று மனு

அரியாலை கிழக்கில் சட்டவிரோதமாக மணல் அகழப்பட்டு எடுத்துச் செல்வது யாழ். அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதாக நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் அ.இரவீந்திரதாசன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

அரியாலை கிழக்கில் நடைபெறும் சட்டவிரோத மணல் அகழ்வை உடன் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இதில் சம்பந்தப்பட்டோரை உடன் கைது செய்து சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்துமாறு பொலிஸாருக்கு அறிவிக்கப்படும் என்றும் அரச அதிபர் உறுதியளித்தார்.

இதேசமயம் நேற்று நண்பகல் இந்தப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து கொண்டு சென்ற ஒரு உழவு இயந்திரத்தை உடனடியாகப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்ததாக பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார். (த-17)

# இந்திய புடைவை வியாபாரிகள் மீது இனி மாநகரசபை நடவடிக்கை

## இந்திய தூதரகம் ஆதரவு

யாழ்ப்பாணம்,ஜன.22

இந்தியாவில் இருந்து வந்து யாழ்ப்பாணத்தில் புடைவை வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகளை இனங்கண்டால் உடனடியாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்தியத் துணைத் தூதுவர் யாழ்.மாநகர சபைக்கு அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.வணிகர் கழகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வணிகர் கழகத் தலைவர் ஆர். ஜெயசேகரம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

இந்தியாவிலிருந்து யாழ். மாவட்டத்துக்குள் புடைவை வியாபாரிகள் அனுமதி பெறாமல் கிராமப் புறங்களுக்குச் சென்று வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். இதன் காரணமாக யாழ்.மாவட்ட புடைவை வியாபாரிகள் உட்பட வர்த்தகர்களும் பாதிப்பை எதிர்கொள்கின்றனர். இது தொடர்பாக இந்தியத் துணைத்தூதுவருக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இந்தியப் புடைவை வியாபாரிகள் அனுமதி பெறாமல் யாழ்ப்பாணத்துக்கு உள் நுழைவது தொடர்பில் எமக்கு எந்தத் தொடர்பும் இல்லை. அவர்களின் அத்துமீறிய வியாபாரத்தைத் தடுப்பதற்கான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு இந்திய அரசு சகலவிதமான ஒத்துழைப்பையும் வழங்கும் எனத் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் புடைவை வியாபாரிகள் விற்பனையில் ஈடுபட்டால் அது தொடர்பான தகவல்களை வணிகர் கழகம் ஊடாக வர்த்தகர்கள் அறிவித்தால் யாழ். மாநகர சபை அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது . இது தொடர்பாக வணிகர் கழகத்துக்கு கடிதம் ஒன்றுமாநகர சபையால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது -என்றார். (ஜ-14)

### மினிபஸ் - இராணுவ பஸ் விபத்து: மூவர் காயம்

யாழ்ப்பாணம்,ஜன.22

மினிபஸ் - இராணுவ பஸ் மோதி விபத்துக்குள்ளானதில் மினிபஸ்ஸில் பயணித்த 3 பேர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் புன்னாலைக்கட்டுவனில் நேற்று பிற்பகல் இடம்பெற்றது. சம்பவத்தில் மினிபஸ்ஸில் பயணித்த குரும்பசிட்டி கிழக்கு, தொல்புரத்தைச் சேர்ந்த செல்வரத்தினம் பத்மராணி (வயது-38), சுன்னாகத்தைச் சேர்ந்தவர்களான குணரட்னம் ரசிராஜ் (வயது-29), ஜெயகணேஸ் (வயது-35) ஆகியோரே காயமடைந்தனர். மினிபஸ் கண்ணாடி நொருங்கி பலத்த சேதத்துக்குள்ளாகியது.பொலிஸார் விசாரணையை மேற்கொண்டனர்.

(ஐ-4-86)

# வடக்கில் இராணுவ ஆட்சி குமுறுகிறது சோஷலிசக் கட்சி

யாழ்ப்பாணம்,ஜன.22

பொதுக்கூட்டத்தை நடத்த தடைவிதிக்கப்பட்டதன் மூலம் வடக்கில் இராணுவ ஆட்சி நிலவுகின்றது என்பது உறுதியாகியுள்ளது.

இந்த நாட்டிலுள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் தொழிலாளர்கள் வர்க்கம் ஐக்கியப்பட்டு சோஷலிச அரசு ஒன்றை அமைக்கப்போராட வேண்டும் என்று சோஷலிச சமத்துவக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர். பி.ரி. சம்பந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது கட்சி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்த பொதுக்கூட்டத்தை நடத்த மண்டப நிர்வாகத்தினரால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதனால் மண்டபத்துக்கு வெளியே எமது கூட்டத்தை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

மண்டபத்தில் நாம் கூட்டம் நடத்த 5 நாள்களுக்கு முன்பாக நாம் அனுமதி பெற்றிருந்தோம்.

பாதுகாப்பு அமைச்சிலிருந்து வருவதாகத் தம்மை அறிமுகப்படுத்திய இரண்டு அதிகாரிகள் வீரசிங்கம் மண்டபத்தில் இந்தக் கூட்டம் நடத்த அனுமதிக்க வேண்டாம் என்று கூறியுள்ளனர். என்று மண்டபத்துக்கு பொறுப்பாக இருந்த ராஜாராம் என்பவர் எம்மிடம் கூறினார். பதிவு செய்த கட்சிக்கு மட்டுமே அனுமதி வழங்குவதாக ராஜாராம் தெரிவித்தார். எமது கட்சி பதிவு செய்யப்பட்டது என்பதைக் கூறிய போதும் அனுமதி வழங்கப்படவில்லை.

வடக்கில் இராணுவ ஆட்சி நடப்பதன் வெளிப்பாடாகவே இந்தத் தடையை பார்க்க வேண்டியுள்ளது. இது ஜனநாயக விரோதச் செயல். ஒரு கட்சி மட்டுமா இங்கு ஆள முடியும்? ஜன [illegible] அராஜகத்தை எதிர்ப்பர்-என்றார்.

(த-4)

### கிளிநொச்சியில் வெடிக்காத ஷெல் மீட்பு

கிளிநொச்சி,ஜன.22

கிளிநொச்சி, புனித திரேசாள் பெண்கள் கல்லூரியில் வெடிக்காத நிலையில் ஷெல் ஒன்று இனங்காணப்பட்டு நேற்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலைக்கு ஆசிரியர் விடுதி அமைப்பதற்காக அத்திபாரம் வெட்டப்பட்டபோதே ஷெல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

உடனடியாகத் தகவல் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டதையடுத்து கண்ணிவெடி அகற்றும் பிரிவினரின் உதவியுடன் ஷெல் மீட்கப் [illegible] செயலிழக்கச் செய்யப்பட்டதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-6)

# வதிரி கொலைச் சம்பவம்; 2 ஆவது நபருக்குப் பிணை

யாழ்ப்பாணம்,ஜன.22

வடமராட்சி வதிரிப் பகுதியில் கடந்த வருடம் ஒருவரை அடித்துக் கொலை செய்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இரண்டாவது நபரும் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.

யாழ். மேல் நீதிமன்றில் ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் சந்தேகநபர் தொடர்பான பிணை மனு நேற்றுப் பரிசீலிக்கப்பட்டது.

வதிரி மெத்தப் பிள்ளையார் கோயிலை அண்மித்து சிவஞானம் சிவரூபன் என்பவர் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் பொல்லால் அடித்துக் கொலை செய்யப்பட்டார்.

இந்தக் குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் ரவிச்சந்திரன், வேலாயுதம் சுதாகரன் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர். பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இவர்களில் கிருஷணன் ரவிச்சந்திரன் கடந்த வாரம் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

வேலாயுதம் சுதாகரன் என்பவரின் பிணை விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு பிணை அனுமதி நேற்று வழங்கப்பட்டது.

இதன் அடிப்படையில் அவரை தலா இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையில் விடுவித்து மன்று மாதாந்தம் இறுதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 நண்பகல் 12 மணிக்கும் இடையில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் அவர் ஒப்பம் இட வேண்டும் என்றும் மன்று நிபந்தனை விதித்தது. (ஐ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசின் 40 மில்லியன் ரூபா நிதியில் குருநகர் வலைத் தொழிற்சாலை புனரமைப்பு

## இந்தியத் துணைத் தூதுவர் தகவல்

யாழ்ப்பாணம், ஜன.22

இந்திய அரசால் குருநகரில் 40 மில்லியன் ரூபா நிதியுதவியில் மீன்பிடி வலைத் தொழிற்சாலை புனரமைப்புச் செய்யப்பட்டு எதிர்வரும் மார்ச் மாதம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இந்தியன் வங்கியின் இரண்டாம் ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு மாதிரிக் கிராம அபிவிருத்தித் திட்ட ஆரம்ப விழா நேற்று யாழ்.இந்தியன் வங்கிக் கிளை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:-

106 வருடங்கள் பழைமை வாய்ந்த இந்தியன் வங்கி இரண்டாயிரத்து 225 கிளைகளை விரிவுபடுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இரண்டு ஆண்டுகள் தனது சேவையை வழங்கி வருகிறது. இந்தச் சேவையில் கடந்த வருடம் முதல்கட்டமாக வட்டு. மேற்கு கிராமத்தில் 142 பேருக்கு வாழ்வாதாரக் கடன் உதவிகளை வழங்கியுள்ளது. இதுபோன்று மேலும் பல கிராமங்களை அபிவிருத்தி செய்ய இந்தியன் வங்கி நடவடிக்கை எடுக்கும்.

வடமாகாணத்தின் அபிவிருத்திக்காக இந்திய அரசால் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ளன. அவற்றில் குறிப்பாக இரண்டாம் கட்டமாக 42 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன. இதில் 11 ஆயிரம் வீடுகள் முதற்கட்டமாக எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாகக் கட்டிக் கொடுக்கப்படும்.

இதனைவிட ஏற்கனவே கடந்த வருடம் 41 ஆயிரம் வீடுகளை இந்திய அரசு கட்டிக் கொடுத்தது. அத்துடன் 2009, 2010 ஆம் ஆண்டுகளில் 80 ஆயிரம் விவசாய உபகரணங்களையும் மன்னாரில் 350 குடும்பங்கள் பயன்பெறக் கூடிய வகையில் 175 படகுகளையும் வழங்கியுள்ளது.

இந்த வருடம் 40 மில்லியன் ரூபா நிதியுதவியில் மீன்பிடி வலைத் தொழிற்சாலையை குருநகரில் புனரமைப்புச் செய்து மார்ச் மாதம் திறந்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அத்துடன் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையை புனரமைப்புச் செய்வதற்கும் உதவி வழங்கியுள்ளது.

இதற்கமைவாக பல்வேறு வேலைத் திட்டங்களை இந்திய அரசு வடமாகாணத்தில் முன்னெடுக்கும். பிரதேசத்தின் அபிவிருத்திக்கு மட்டுமல்லாது மக்களும் இதன் மூலம் பயன்பெறுவர்- என்றார். (ம-14)

# தெல்லிப்பழை திருட்டு தொடர்பில் சந்தேகநபர் மறியலில்: நகை மீட்பு

**சந்தேகநபரின் வீட்டில் இருந்த பிள்ளை ஆசிரியருக்குத் தகவல் வழங்கியுள்ளது.**

வலி.வடக்கு,ஜன 22

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவில் உள்ள ஆசிரியர் வீட்டில் இடம் பெற்ற முப்பது பவுண் நகைத் திருட்டுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் தெல்லிப்பழை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த நான்கு நாள்களுக்கு முன்னர் வீட்டின் குசினி புகைக்கூட்டின் வழியாக உள் நுழைந்து கைப்பையில் வைக்கப்பட்டு இருந்த நகைகள் கைப்பையுடன் திருடிச் செல்லப்பட்டு இருந்தது. இந்த நிலையில் குறிப்பிட்ட சந்தேக நபரின் வீட்டில் உள்ள சிறிய பிள்ளை பாடசாலை ஆசிரியையின் நகைகளைத் தனது தந்தை வைத்திருந்ததைக் கண்டதாக தெரிவித்திருந்தது. இதன் அடிப்படையில் குறிப்பிட்ட நபரை பொலிஸார் கைது செய்து விசாரித்தனர்.

அதைத் தொடர்ந்து அவரிடம் இருந்து நகைகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த நபர் மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டதை அடுத்து அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம-86)

## விபத்தில் மூவர் காயம்

தென்மராட்சி,ஜன.22

விபத்துக்களில் சிக்கி காயமடைந்த மூவர் நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மீசாலை புத்தூர் சந்திக்கு அருகில் வீதியில் போடப்பட்டிருந்த கற்களில் மோட்டார் சைக்கிள் சில்லு சறுக்கியதில் வரணி-இயற்றாலையைச் சேர்ந்த செல்லத்துரை பாஸ்கரன் (வயது36) என்பவரும் கொடிகாமம் பகுதியில் மோட்டார் சைக்கிளினால் மோதுண்டு கொடிகாமம் ரயில் நிலைய வீதியைச் சேர்ந்த சிவலிங்கம் பிரதாபன் (வயது 28) என்பவரும் பளை பகுதியில் வீதியின் குறுக்கே சென்ற மாட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் பளை முல்லையடியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கண்ணப்ப மூர்த்தி (வயது 58) என்பவருமே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர்.

இதேவேளை, நேற்று முன்தினம் இரவு வீதியில் நடந்து சென்ற வேளையில் பாம்பால் கடியுண்ட பூநகரி நான்காம் கட்டையடியைச் சேர்ந்த செல்வநாயகம் செல்வநாதன் (வயது-36) என்பவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)

# வட்டுக்கோட்டை பயனாளிகளுக்கு இந்த வருடம் 24.61 மில்.ரூபா கடன்

## இந்தியன் வங்கி வழங்கத் தீர்மானம்

*யாழ்ப்பாணம், ஜன.22*

*இந்தியன் வங்கி இந்த வருடம் வட்டுக்கோட்டை வடக்குக் கிராமத்தைச் சேர்ந்த 282 பயனாளிகளுக்கு 24.61 மில்லியன் ரூபா நிதியைக் கடனாக வழங்கவுள்ளது. ஏற்கனவே வட்டுமேற்கு கிராமத்தைச் சேர்ந்த 142 பயனாளிகளுக்கு 10.45 மில்லியன் ரூபா கடன் உதவிகளை கடந்த வருடம் வழங்கியிருந்தது.*



இந்தியன் வங்கியின் யாழ். கிளை முகாமையாளர் எஸ்.சந்திரசேகர் இவ்வாறு தகவல் தெரிவித்தார்.

இந்தியன் வங்கியின் இரண்டாவது ஆண்டுநிறைவு தினத்தை முன்னிட்டு மாதிரி கிராம அபிவிருத்தித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று யாழ். கிளை அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் திட்டம் தொடர்பாக விளக்கவுரை நிகழ்த்தும் போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:-

106 வருடங்கள் கொண்ட பாரம்பரிய வங்கியாக இந்தியன் வங்கி யாழ்.நகரில் கடந்த 2011 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தியாவில் கிராமப்புற வளர்ச்சியில் முன்னிலை வகிக்கும் இந்தியன் வங்கி யாழ். மக்களின் பொருளாதார முன்னேற்றத்தை நோக்காகக் கொண்டு இங்கும் வங்கிச் சேவையை ஆரம்பித்து வைத்துள்ளது.

கடந்த வருடம் வலிகாமம் மேற்கு கிராமத்தை வங்கி தத்தெடுத்து மாதிரிக் கிராம அபிவிருத்தித் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இரண்டு ஆண்டுகளில் 426 பயனாளிகளுக்கு வாழ்வாதாரக் கடனாக 41 மில்லியன் ரூபாவை வழங்கி கிராமத்தை அபிவிருத்தி செய்யத் திட்டமிட்டு இதுவரை 142 பயனாளிகளுக்கு 10.45 மில்லியன் ரூபா கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

விவசாயம், கால்நடை, சிறு தொழில், வியாபாரம், கல்வி மற்றும் கடற்றொழில்களுக்கான வாழ்வாதாரக் கடன் உதவிகளை வழங்கியுள்ளது. இந்தக்கடன்உதவிகளைப்பெற்ற 99.5 வீதமானவர்கள் கடன்களை மீளச்செலுத்தியுள்ளனர்.

இந்த வருடம் வட்டு வடக்கில் முதல் கட்டமாக 77 பேருக்கு 4.23 மில்லியன் ரூபா கடன் உதவிகளை வழங்கியுள்ளது.- என்றார்.

இந்தியத் துணைத்தூதுவர் வி.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் கொழும்பு இந்தியன் வங்கி உதவிப் பொதுமுகாமையாளர் எஸ். ரவி, வலிகாமம் மேற்கு பிரதேச சபைச் செயலாளர் ஆர்.சோதிநாதன், இந்தியன் வங்கியின்யாழ்.கிளைசிரேஷ்ட முகாமையாளர் மணிமாறன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-14)

## தவறி வீழ்ந்து படுகாயம்

வலி.வடக்கு,ஜன.22

மோட்டார் சைக்கிளின் பின்புறம் இருந்து சென்றவர் தவறி வீழ்ந்ததில் பலத்த காயங்களுக்கு ஆளானார்.

இந்தச் சம்பவம் சனிக்கிழமை இரவு கே.கே.எஸ். வீதியில் பங்களாவடி பகுதியில் இடம்பெற்றது.

தவறி வீழ்ந்தவர் தலை, முகம் என்பவற்றில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-86)

## சம்பாவெளி விநாயகருக்கு சித்திரத் தேர்

தென்மராட்சி, ஜன.22

மிருசுவில் விடத்தற்பளை சம்பாவெளி வீரகத்தி விநாயகர் ஆலயத்துக்கு 85 லட்சம் ரூபா செலவிலான புதிய சித்திரத் தேர் நிர்மாணிக்கப்படவுள்ளது.

புதிய சித்திரத் தேருக்கான அச்சு வைத்தல் விழா நாளை புதன்கிழமை காலை 8.36 மணிக்கு இடம்பெறும்.

ஆலய தேர்த் திருப்பணிச் சபைத் தலைவர் வைத்தியர் வி.ஆறுமுகம் தலைமையில் நடைபெறும் கால்கோள் விழா ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ நடராஜக் குருக்களின் விசேட கிரியைகளை அடுத்து இடம்பெறும். (ம-9)

### குடாநாட்டில் கடந்த வருடத்தில்

## 19 ஆயிரத்து 500 பேருக்கு சாரதி அனுமதிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன.22

யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் 19 ஆயிரத்து 500 பேர் வரையில் சாரதி அனுமதிப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர் என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் போக்குவரத்துப் பொலிஸாரின் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இதனால், சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு விண்ணப்பிப்போர் தொகை அதிகரித்துள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் 19 ஆயிரத்து 500 பேர் வரையில் சாரதி அனுமதிப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.

2011 ஆம் ஆண்டு 19 ஆயிரம் பேர் வரையில் சாரதி அனுமதிப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். இது கடந்த ஆண்டு மேலும் அதிகரித்துள்ளது.

சாரதி அனுமதிப் பரீட்சைக்குத் தோற்றுபவர்களில் பெரும்பாலானவர்கள் தனியார் சாரதிப் பயிற்சிப் பாடசாலைகள் ஊடாகவே தோற்றுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-5)

### வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில்

## கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து ஏலத்தில் விற்பதற்கு நடவடிக்கை

**மாடுகளைப் பிடிப்பதற்கு நிய மிக்கப்பட்டவரைத் தவிர ஏனையோர் மாடுகளைப் பிடித்தால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.**

வலி.தென்மேற்கு,ஜன.22

வலிகாமம் மேற்கு பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகளைக் கட்டுப்படுத்த வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி. என்.ஐங்கரன் முன்வந்துள்ளார். இந்தக்கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து ஏலத்தில் விற்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

வலிகாமம் மேற்கு பிரதேசத்தில் சவுக்கடி, சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம் மேற்கு ஆகிய பிரதேசங்களில் கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகளின் தொல்லையால் விவசாயிகளுக்கும் பெரும் நட்டம் ஏற்படுகின்றது.

இந்த நிலை குறித்து விவசாயிகளால் பிரதேச சபைத் தலைவரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அதனைத் தொடர்ந்து கட்டாக் காலிகளாகத் திரியும் கால்நடை குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் மூலம் மாடுகளைப் பிடிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார்.

வளர்ப்பு மாடுகளைக் கட்டி வளர்க்குமாறு தெரிவித்துள்ள தலைவர் மாடுகளைப் பிடிப்பதற்கு நியமிக்கப்பட்டவரைத் தவிர ஏனையோர் மாடுகளைப் பிடித்தால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிடிக்கப்படும் மாடுகள் ஏலத்தில் விற்கப்படும் என்றும் கூறியுள்ளார். (ம-155)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 வருடங்கள்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

நாதன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடந்த 2007ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து கடற்படையினருக்கு எதிராகத் தாக்குதல் நடத்தியமை உட்பட இரண்டு குற்றச்சாட்டுகள் இவர் மீது சுமத்தப்பட்டன.

திருகோணமலையைச் சேர்ந்த மோகனசுந்தரம் சுகுமார் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அந்த வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ்.மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது.

விசாரணையின்போது அவர் வழங்கியதாகக் கூறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூல உண்மை விளம்பலின்போது அது நிராகரிக்கப்பட்டது. அவருக்கு எதிராக வேறு எந்த ஆதாரமும் இல்லாததால் குற்றச்சாட்டுகளில் இருந்து விலக்கி நிரபராதி என இனங்கண்டு அவரை விடுதலை செய்தது மன்று.

(ஐ-4)

## துப்பாக்கி..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் சுமித்திரா (வயது -33) என்ற சிப்பாயே படுகாயமடைந்தவராவார்.

சக பெண் சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்தமையாலேயே இவர் படுகாயமடைந்ததாக இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.

(த-4)

## கொக்குவிலில்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளார். அவர் ஓய்வு பெற்ற ஆயுள்வேத மருத்துவராவார்.

அவரும், அவரது மனைவியும் வீட்டில் வசித்து வருகின்றனர். மனைவி சுன்னாகம் பிரதேச சபையில் பணி புரிந்து வருகிறார். நேற்றுக் காலை அலுவலகம் சென்ற மனைவி பிற்பகல் 5.15 மணியளவில் வீடு திரும்பிய போது கணவரான மருத்துவர் சடலமாகக் காணப்பட்டார்.

வீட்டில் தொலைக்காட்சி இயங்கிய வண்ணமிருந்துள்ளது. மருத்துவரின் கழுத்து கம்பியினால் சுற்றப்பட்டு இறுக்கப்பட்டுள்ளது. அத்துடன் வீட்டில் இருந்த 5 பவுண் நகைகளும் கொள்ளையிடப்பட்டிருந்தன.

அவரைக் கொலை செய்துவிட்டு நகைகள் கொள்ளையடிக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. (த-5)

## மிதிவெடி..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் இராணுவப் பொறியியல் பிரிவைச் சேர்ந்த லலித் தாமர (வயது 27) என்பவரே படுகாயமடைந்தார்.

மிதிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே அது வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.(த-4)

## 1,200..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வாரம் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்ட தகவல் வெளியாகியுள்ளதாகப் பி.பி.ஸியின் சிங்கள சேவையான சந்தேஷிய தெரிவித்துள்ளது.

அந்த 1200 பேரிலும் 400 பேர் வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாட்டின் பல மாகாணங்களில் வசிப்பதாகவும் ஏனையோர் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறைந்திருக்கின்ற அல்லது கைது செய்யப்படாமல் இருக்கின்ற புலிச் சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை உரிய பிரிவினர் எடுப்பது தொடர்பிலும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (த)

## பல்கலை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மன் ஆகியோரே இன்று விடுவிக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த நவம்பர் மாதம் யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வுகளையடுத்து யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் சிலர் விடுவிக்கப்பட நான்கு மாணவர்கள் மட்டும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக வெலிக்கந்தை முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இந்த நான்கு மாணவர்களும் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட பின்னரே விடுவிக்கப்படுவர் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் அவர்களில் இருவர் இன்று விடுவிக்கப்படவுள்ளனர் என்று யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

ஏனைய மாணவர்களான யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் தர்ஷானந், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் ஜெனமேஜெயந் ஆகியோர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (த)

## வடக்கில்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

30 வருடப் போரின் பின்னர் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தும் பொருட்டே வடக்கில் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா தெற்கு பிரதேச பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதவியா, சம்பத்நகர், போகஸ்வெவ ஆகிய கிராமங்களில் படையினரின் 56 ஆவது படைப்பிரிவின் அனுசரணையுடன் ஆயிரம் சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன.

மேலும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் படையினரின் 72 ஆவது படைப்பிரிவின் அனுசரணையுடன் ஆயிரம் சிங்களக் குடும்பங்களும் குடியேற்றப்பட்டுள்ளன.

ஏற்கனவே திட்டமிட்டுக் குடியேற்றப்பட்ட சிங்களக் குடும்பங்களுக்கு வவுனியா தெற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள 2 ஆயிரம் ஏக்கர் காணியை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் முகமாக ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒவ்வொரு ஏக்கர் காணி வீதம் 2 ஆயிரம் குடும்பங்களுக்கும் காணிகள் பங்கிட்டு வழங்கப்படவுள்ளன.

இந்தக் குடியேற்ற நடவடிக்கைக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள 2 ஆயிரம் சிங்களக் குடும்பங்களுக்கும் படையினராலும், ஏனைய அரச நிறுவனங்களினாலும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான நவீன உபகரணங்கள், விதைகள் என்பனவும் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக விவசாய அபிவிருத்தி அமைச்சர் மஹிந்தயாப்பா அபயவர்த்தனவால், குடியேற்றப்படும் மக்களின் அடிப்படை வசதிகளுக்காக 10 மில்லியன் ரூபா நிதியும் உடனடியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் என்ற போர்வையில் சிங்களக் குடியேற்றங்களை வடக்கில் அதிகரிப்பதற்கே அரசு முனைப்புடன் செயற்படுவதாகத் தெரிவிக்கிப்படுகிறது.

(த-5-2)

## இந்தியாவின்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வையோ கணக்கில் எடுப்பதில்லை. தம்மால் இந்தியாவையும் சமாளிக்க முடியுமென் அவர்கள் கூறுகின்றனர்.

சீனா தம்மோடு நிற்பதனால் ஐ.நா.வையும் சமாளிக்க முடியுமென அவர்கள் நினைக்கின்றனர். உட்கட்டமைப்பு விருத்தி பற்றி அவர்கள் பெரிதாகக் கூறுகின்றனர். ஆனால், வீதிகள் அமைக்கப்படுவதும் மீள் வழங்கப்படுவதும் இராணுவ முகாம்களுக்காகவே தமிழர்கள் இவற்றால் நன்மையடைவதில்லை.

**தமிழர்கள் யாவரும் சந்தேகநபர்கள் ஆக்கப்பட்டுள்ளனர்**

விடுதலைப் புலிகளோடு இருந்தவர்களுக்கு புனர்வாழ்வு அளித்து விடுத்த பின்னர் இப்போது மீண்டும் அவர்களை கைது செய்கின்றனர். எங்கு பார்த்தாலும் இராணுவச் சோதனைச்சாவடிகள் காணப்படுகின்றன.

தமிழ் இளைஞர்களை அரசு துரத்திவிட நினைக்கின்றது. தமிழர்கள் யாவரும் சந்தேக நபர்களாக்கப்பட்டுள்ளனர். இதை நாம் கூறினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதையும் பெரிதுபடுத்துவதாகக் கூறுகின்றனர். வடமாகாணம் பலஸ்தீனம் போல ஆகிவிட்டது. அது எதிரிகளிடமிருந்து பிடிபட்ட இடமாகிவிட்டது.

தமிழ்த் தலைவர்களையும் இலங்கை அரசையும் ஒன்றுபட வைக்கும் தென்னாபிரிக்காவின் முயற்சிக்கு இலங்கை ஆதரவளிப்பது போல நடிப்பது, சர்வதேச சமூகத்துக்குத் தாம் பிரச்சினையைத் தீர்க்க விரும்புவது போல காட்டுவதற்கு மட்டும் தான் என நாம் நம்புகின்றோம்.

இலங்கை அரசு தமிழ்ப் பிரதிநிதிகளுடன் மனப்பூர்வமாகப் பேசுவதில்லை என்பதே உண்மை. அவர்கள் எம்மோடு பேச விரும்பவில்லை. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் எமது பிரச்சினைகளை முன்வைக்கும்படி கூறுகின்றனர்.

ஆனால், இந்தக் குழு சிங்களக் கட்சிகளின் ஆதிக்கத்தில் உள்ளது. அவர்கள் எமக்கு எதையும் தரப்போவதில்லை. நேரிடையாகக் கூறினால் இதய சுத்தியோடு அவர்கள் பேச விரும்புவதில்லை-என்றார். (த)

## வடக்கு..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இந்தக் கூட்டத்தொடரின்போது இரு நாட்டு மீனவர் பிரச்சினை, பாதுகாப்பு ஒத்துழைப்பு, இராஜதந்திர உறவு, முதலீடு உள்ளிட்ட பொருளாதார உதவிகள், இலங்கையில் கட்டப்படும் இந்திய வீடமைப்புத் திட்டம் உட்பட முக்கிய பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளன என்று இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்கூட்டத்தொடரில் கலந்துகொள்ளும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்துடனான இரு தரப்பு பேச்சின்போது வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், இலங்கையின் சமகால அரசியல் நிலைவரங்கள் சம்பந்தமாக அவருக்குத் தெளிவுபடுத்துவார் என வெளிவிவகார அமைச்சு வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

குறிப்பாக, பதவிநீக்கப்பட்டுள்ள பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை விவகாரம், சர்ச்சையைக் கிளப்பிவிட்டுள்ள 13ஆவது அரசமைப்புத் திருத்தம், இனப் பிரச்சினை விவகாரம், புதிய அரசமைப்பு மாற்றம் ஆகிய விடயங்களுக்கு முன்னுரிமை வழங்குவது குறித்து விரிவான விளக்கத்தை இந்திய வெளிவிவகார அமைச்சருக்குப் பீரிஸ் வழங்குவார் என்றும் மேற்படி வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

அதேவேளை, அரசமைப்புத் திருத்தத்தின்போது 13ஆவது பிரிவுப் பொலிஸ், காணி உள்ளிட்ட முக்கிய அதிகாரங்களை உள்ளடக்குவது தொடர்பில் தமது அரசு தீவிர கவனம் செலுத்திவருகிறது என்றும், அது குறித்து பங்காளிக் கட்சிகளின் யோசனை கோரப்பட்டுள்ளது என்றும் இந்தியத் தரப்பிடம் அமைச்சர் பீரிஸ் எடுத்துரைப்பார் என அரச உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அத்துடன், மார்ச் மாதம் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் குறித்தும் இக்கூட்டத்தில் கருத்து பரிமாற்றங்கள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கிடையில், இலங்கை விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு குறித்து சல்மான் குர்ஷித், இலங்கை வெளிவிவகார அமைச்சருக்கு தமது சந்திப்பின்போது அறிவிப்பார் என அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங் உள்ளிட்ட அரச உயர்மட்ட புள்ளிகளுடனான சந்திப்புகளின்போதும் அமைச்சர் பீரிஸ் மேற்படி விடயங்கள் தொடர்பிலேயே கலந்துரையாடுவார் என நம்பப்படுகின்றது.

இவற்றுப் புறம்பாக இந்திய அரசின் உதவியுடன் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் தற்போதைய பெறுபேறுகள் சம்பந்தமாகவும் இந்திய பயணத்தின்போது பீரிஸ் விளக்கவுள்ளார்.

(ந-ரி)

## ஜெனிவாவில்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இவ்வாறான நெருக்கடியான சூழ்நிலையில் நடக்கவிருக்கின்ற ஜெனிவா சமர் இலங்கைக்கு எவ்வாறு அமையும் என்பது தொடர்பில் எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் வெளியிட்ட சூடான கருத்துகள்:

**லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி.**

நடக்கவிருக்கும் ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராகக் கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படலாம். இதனைத் தீர்மானிக்கும் சக்தி இந்தியாதான். அதன் கைகளிலேயே யாவும் தங்கியுள்ளன.

ஏனெனில், 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதி போரின்போது தமக்கு எதுவும் தெரியாததுபோல மேலே பார்த்துக் கொண்டிருந்த இந்தியா, இப்போதும் அவ்வாறான போக்கையே கடைப்பிடித்து வருகின்றது.

கடந்த வருடம் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் கொண்டுவரப்பட்டது போன்றே இம்முறையும் இலங்கைக்கு எதிராகப் பிரேரணையொன்று கொண்டுவரப்படலாம்.

ஆனால் இலங்கை அரசை சர்வதேச ரீதியில் சவாலுக்குட்படுத்தும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்தியா அதனைக் காப்பாற்றிவிடுகிறது. தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியாவுக்கு அக்கறையில்லை. மாறாக இலங்கையைக் கொண்டு தமது பொருளாதாரத்தைச் வலுப்படுத்தவே அது நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை சிபார்சுகளின் அமுலாக்கம், பிரதம நீதியரசரின் பதவிநீக்கல் விவகாரம், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கைது ஆகிய விடயங்கள் ஜெனிவாக் கூட்டத்தொடரில் சர்வதேச நாடுகள் இலங்கை அரசுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க ஏதுவாக அமையும்.

எனினும், அங்கு பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள் எவ்வாறமையும் என்பது இந்தியாவின் தீர்மானத்தில்தான் இருக்கிறது என்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல.

**நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன**

பொறுப்புக்கூறும் கடப்பாட்டிலிருந்து நழுவிச் செல்லும் இலங்கை அரசுக்கு ஜெனிவாக் கூட்டத் தொடர் சோதனைக்களமாக அமையும்.

மனிதாபிமானத்தை இல்லாதொழிக்கும் இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச நாடுகளுள் ஏதாவது ஒரு நாடு பிரேரணையொன்றைக் கொண்டுவரவேண்டும். எவரிடமிருந்தாவது எமக்கு நன்மை கிடைக்கவேண்டும். தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கவேண்டும்.

இம்மாத இறுதியில் இலங்கைக்கு வருகை தரவுள்ள அமெரிக்க உயர்மட்ட இராஜதந்திரிகள் குழுவுடன் பேச்சு நடத்துவதற்கு அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவதற்கான அமைப்பு திட்டமிட்டுள்ளது. இலங்கை அரசுக்கு எதிராகப் பிரேரணையைக் கொண்டு வந்து அதைப் பாதுகாக்கும் அமெரிக்காவின் நடவடிக்கைகள் குறித்து நாம் அந்தக் குழுவிடம் எடுத்துரைக்கவுள்ளோம்.

அரசின் தொடர்ச்சியான அடக்குமுறைகளால் தமிழ், முஸ்லிம் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். எனவே, இவர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க சர்வதேச நாடுகளின் ஏதாவது ஒரு நாட்டின் மூலமாவது நன்மை கிடைக்கவேண்டும்.

**ஐக்கிய சோசலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய**

அரசின் சமகால நடவடிக்கைகள் தொடர்பில் அதிருப்தி வெளியிட்டு வருகின்ற சர்வதேச நாடுகள், ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கைக்குப் பல வழிகளிலும் அழுத்தம் கொடுக்கும்.

எனவே, நடக்கவிருக்கின்ற ஜெனிவா கூட்டத்தொடர் அரசுக்குப் பேராபத்தானதாகவே அமையும்.

ஜெனிவா கூட்டத் தொடரில் சர்வதேச நாடுகள் தொடுக்கும் கேள்விகளுக்கு எப்படிப் பதிலளிப்பது என்பது தெரியாமல் அரசு தடுமாறிக்கொண்டிருக்கின்றது. இவ்வாறான நிலையில் ஜெனிவா கூட்டத்தொடருடாகமட்டும் அரசுக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படவேண்டும் என நாம் பார்த்துக்கொண்டிருக்கக்கூடாது.

அரசுக்கு எதிராக மாபெரும் மக்கள் கிளர்ச்சியை நாட்டில் ஏற்படுத்தவேண்டும். அரசுக்கு எதிராகத் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் மக்கள் போராட்டங்களும் ஜெனிவாத் தொடரில் சர்வதேச நாடுகள் அரசுக்கு அழுத்தங்கொடுக்க ஏதுவாக அமையும்.

அரசின் சட்டவிரோத நடவடிக்கைகளை நன்கு அவதானித்து வருகின்ற ஐ.நா. மற்றும் சர்வதேச நாடுகள் மார்ச் மாத ஜெனிவா கூட்டத் தொடரில் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும்.

(ந-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் தேவையை நிறைவேற்ற முஸ்லிம் தலைவர்கள் முன்வருவரா?

மனிதன் நிம்மதியாக வாழ வழிகாட்டுபவை மதங்கள். ஆனால் இன்று மதங்களின் பெயரால், இனங்களின் பெயரால் மக்களின் நிம்மதியைக் குலைக்கும் அரசியல் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. 2009இல் போர் முடிவுக்கு வந்ததையடுத்து, இந்த நாடு பொருளாதார வளர்ச்சி கண்ட நாடாக மாறும் என்று நம்பப்பட்டது. நாட்டில் இன ஐக்கியம் வலுப்பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

மூன்று தசாப்த காலப் போர் அரசியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் நாட்டின் வளர்ச்சிக்குப் பாதிப்பை ஏற்படுத்தியது. எட்டு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் புலம்பெயர்ந்தனர். 80 ஆயிரம் முதல் ஒரு லட்சம் வரையான பொது மக்கள் உயிரிழக்க நேர்ந்தது. போர் முடிவடைந்துவிட்டதாக அரசு பிரகடனம் செய்த அந்தக் கடைசிக் காலப்பகுதியில் 40 ஆயிரம் தமிழ்ப் பொதுமக்கள் உயிரிழந்தனர் என்று குற்றச்சாட்டுகள் எழுந்தன.

நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்குப் பெரும்பான்மை பௌத்த சிங்கள மக்களுக்கும் சிறுபான்மை சமூகங்களான தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் இடையில் நல்லிணக்கம் ஏற்படவேண்டியதன் அவசியம் அப்போது உணரப்பட்டது. ஆனால் எதிர்பார்க்கப்பட்டவாறு இன்று வரை இனங்களுக்கு இடையேயான நல்லிணக்கம் ஏற்படவேயில்லை. நல்லிணக்கத்துக்குப் பதிலாக வன்முறைகள் மூலம் இனங்களுக்கு இடையேயான நல்லுறவைச் சீரழிக்கும் முயற்சிகள் தீவிரமடைந்து வருகின்றன. சிங்கள பௌத்த கடும் கோட்பாட்டாளர் குழுமங்கள் முஸ்லிம்களுக்கு எதிராக இனவாதத்தைத் தூண்டுகின்றன. அத்தரப்புகளது எத்தனங்களுக்கு ஊக்கமளிப்பது போன்று இவ்விதம் வன்முறையைத் தூண்டுவோருக்கு எதிராகப் பொலிஸார் நடவடிக்கை எடுக்கத் தயங்குகின்றனர்.

நாட்டின் பொருளாதார, சமூகப் பிரச்சினைகள் இன்று தீவிரம் அடைந்துள்ள நிலையில், அவற்றைத் திசைதிருப்புவதற்காக அரசு சிறுபான்மையினருக்கு எதிரான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன.

ஆனால் உண்மையில், முஸ்லிம் குடிப்பரம்பலின் அதிகரிப்பு வேகம், நாட்டின் வர்த்தகத்துறையில் அவர்கள் செலுத்தும் ஆதிக்கம் ஆகியவையே இதற்கான அடிப்படைக் காரணம் என்பதே உண்மை. இன்னும் சில தசாப்த காலங்களில், தமது குடிப்பரம்பல் வேகம் காரணமாக முஸ்லிம்கள் நாட்டின் பொருளாதாரத்துறையில் மட்டுமன்றி, அரசியல் துறையிலும் பெரும் ஆதிக்கம் செலுத்தும் நிலை ஏற்படலாம் என்று பௌத்த சிங்களவர்கள் அஞ்சுகின்றனர். 2050ஆம் ஆண்டில் இந்நாட்டில் முஸ்லிம் ஒருவர் ஜனாதிபதியாகிவிடக்கூடும் என்றுகூட சிங்கள பௌத்தர்கள் மத்தியில் நச்சுவிதை விதைக்கப்படுகிறது.

இதன் விளைவுதான் தற்பொழுது முஸ்லிம்களுக்கு எதிராகத் தூண்டிவிடப்பட்டுள்ள மத ரீதியிலான வன்முறைகள். பொதுபல சேனா, சிங்கள ராவய, ஜாதிக ஹெல உறுமய போன்ற சிங்கள கடும் கோட்பாட்டுத் தரப்புகள் மிகவும் நுட்பமாகத் திட்டமிட்டு முஸ்லிம்கள் மீதான எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

இத்தகைய அமைப்புக்களின் திட்டமிட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளில் கடைசியாகக் குறிவைக்கப்பட்டதுதான் மஹரகமவில் உள்ள 'நோலிமிட்' ஆடை விற்பனை நிலையம். 'நோலிமிட்' வர்த்தக நிலையத்தை மூடுமாறும், முஸ்லிம்களுக்குக் காணிகளை விற்கவேண்டாம் எனவும், கடைகள், வீடுகளை வாடகைக்கு வழங்க வேண்டாம் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துள்ளனர்.

முஸ்லிம்களுக்கு எதிராகக் கலவரத்தைத் தூண்டிவிட்டு முஸ்லிம் மக்களின் சொத்துகளைச் சூறையாடும் சதித்திட்டம் நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மேல் மாகாண சபையின் ஐ.தே.க. உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் அண்மையில் முன்வைத்த குற்றச்சாட்டை அலட்சியம் செய்துவிட முடியாது. தம்புள்ளை பள்ளிவாசலில் முஸ்லிம்களின் தொழுகைக்கு இடையூறு விளைவிக்கப்பட்ட வேளை கலகக்காரர்களுக்கு எதிராக அரசு கடும் நடவடிக்கை மேற்கொண்டிருந்தால், தற்போதைய மோசமான நிலைமை ஏற்பட்டிருக்க வாய்ப்பு உருவாகியிருந்திருக்காது.

முற்று முழுதாக சிங்கள பௌத்தர்களின் வாக்குப் பலத்தில் தங்கியுள்ள இந்த அரசினால் நாட்டின் சிறுபான்மையினத்தவரைப் பாதுகாக்க இயலாது என்பது நிரூபணமாகிவருகிறது. பௌத்தர்களுக்கும் அவர்களது வாழ்க்கை முறைமைக்கும் முஸ்லிம்கள் அச்சுறுத்தலாக இருப்பது போன்றதொரு தோற்றப்பாட்டை உருவாக்குவதில் பொதுபலசேனா போன்ற சிங்கள பௌத்த கடுங்கோட்பாட்டுத் தரப்புகள் இன்று ஓரளவுக்கு வெற்றி கண்டு வருகின்றன என்பதே யதார்த்தம்.

நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெறும் இத்தகைய சம்பவங்கள் குறித்து அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் தலைவர்கள் கவனம் எதுவும் செலுத்துவதாகத் தெரியவில்லை. வெறுமனே கண்டன அறிக்கைகள் விடுவதுடன் ஓய்ந்துபோய் ஒதுங்கிக் கொள்கின்றனர்.

முஸ்லிம் மக்களுக்கு எதிரான தற்போதைய வன்முறை நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தும் பலம் அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அமைச்சர்களுக்கு உண்டு என்பதில் சந்தேகம் கிடையாது. ஆனால் அவர்களுக்கு அதற்கான துணிச்சல் உண்டெனக் கருதமுடியவில்லை.

அதாவது, முஸ்லிம் இனத்தவர் குறித்து அவர்களது சிந்தனையில் மாற்றம் அவசியம். அத்தகைய மாற்றத்தைத் தமது தலைவர்கள் மத்தியில் ஏற்படுத்தும் பொறுப்பு முஸ்லிம் பொது மக்களின் கையிலேயே முழுக்க முழுக்கத் தங்கியிருக்கிறது. முஸ்லிம்களுக்கு எதிரான இத்தகைய வன்முறை நடவடிக்கைகள் தொடருமானால் மீண்டும் நாட்டில் உள்நாட்டுக் குழப்பத்துக்கும், அமைதியின்மைக்கும் அடிகோலப்படுவதாகவே அமையும்.

முஸ்லிம் மக்கள் மீதான இத்தகைய திட்டமிட்ட வன்முறைகளைத் தடுத்து நிறுத்தும் தமது வரலாற்றுப் பொறுப்பை முஸ்லிம் அரசியல் தலைவர்கள் இவ்வேளையில் தட்டிக்கழித்துவிடக் கூடாது. 1915ஆம் ஆண்டில் மதரீதி அடிப்படையில் சிங்கள பௌத்தர்களுக்கும் முஸ்லிம் இனத்தவர்களுக்கும் இடையில் உருவான மோதல் பின்னர் பெரும் கலவரமாக உருமாறி விளைவித்த நட்டங்களை மனதில் கொண்டாவது முஸ்லிம் அரசியல்தலைவர்கள் இன்றைய நிலையில் துணிச்சலுடன் செயற்பட வேண்டியது முக்கியமானதாகும். தமது பதவிகளையும் அதிகாரங்களையும் தக்கவைத்துக் கொள்வதற்காக இன்றைய தேவையை உதாசீனம் செய்தால் காலம் அவர்களைத் தண்டிக்கும் என்பதை உணரவேண்டும்.

# தனியார் பஸ்களின் பிரச்சினைகளை ஜனாதிபதிக்கு அறிக்கையிட முடிவு

யாழ்ப்பாணம்,ஜன.22

யாழ்ப்பாணத்தில் இருந்து தென்னிலங்கைக்கு சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக அறிக்கை ஒன்று துறைசார்ந்த அமைச்சின் ஊடாக ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு உட்பட தென்பகுதிக்குச் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் ஊழியர்கள் அடிக்கடி தாக்கப்படுவதும், ஏனைய பஸ் சாரதிகளுடன் முரண்படுவதும் என்று நாளாந்தம் பிரச்சினைகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

சட்ட ரீதியாக பதிவு செய்து சேவையில் ஈடுபடும் போதும் குறைந்தளவு வருமானத்தை பெற வேண்டிய நிலையில் உள்ளனர்.

பஸ் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று கொழும்பில் நடைபெற்றது. இதன்போது பஸ் உரிமையாளர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்ட துறைசார்ந்த அமைச்சுகள் உடனடியாக பஸ் உரிமையாளர் தமது பிரச்சினைகளை யாழ்.மாவட்ட பஸ் சங்கங்களின் இணையத்திடம் தெரிவித்து அது தொடர்பான அறிக்கை ஒன்றை அமைச்சிடம் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

அதற்கமைவாக யாழ்.மாவட்ட பஸ் சங்கங்களின் இணையத்தின் ஊடாக யாழ்ப்பாணத்தில் இருந்து தென்னிலங்கைக்கு சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் தொடர்பாக பிரச்சினைகள் அறிக்கையிடப்படவுள்ளன.

குறிப்பாக வழி அனுமதிப் பத்திரம் இல்லாத தனியார் சொகுசு பஸ்கள் சேவையின் போது இடையில் குறுந்தூர பயணிகளை ஏற்றுதல், குறைந்த கட்டணத்துடன் பயணச்சிட்டை இல்லாமல் பயணிகளை ஏற்றுதல், வழி அனுமதிப்பத்திரம் இல்லாமல் சேவையில் ஈடுபடுதல், ஏனைய சேவையில் ஈடுபடுகின்ற பஸ் சாரதி, நடத்துநர்களுடன் முரண்படுதல், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் அறவிடப்படும் வரி, பணம் அதிகரிப்பு போன்ற பிரச்சினைகள் உள்ளடங்கலாக அறிக்கை ஒன்றைத் தயாரித்து துறைசார்ந்த அமைச்சின் ஊடாக ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப் படவுள்ளது என்றும் கூறப்பட்டது. (ம-14)

## யாழ்.போதனா வைத்தியசாலை ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை

யாழ்ப்பாணம்,ஜன.22

யாழ்.போதனா வைத்தியசாலை சாமுண்டீஸ்வரி சமேத ஞான வைரவர் ஆலய புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 8.06 மணி தொடக்கம் 8.32 மணி வரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது.

பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இடம்பெறும்.

இந்த கும்பாபிஷேகத்தை உரும்பிராய் ஞான வைரவர் ஆலய குருக்கள் சிவஸ்ரீ செ.வைரவநாதக் குருக்கள் பிரதம குருவாக இருந்து நடத்தி வைப்பார்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார். (ம-8)

## கொழும்பு மாநகர சபையின் வரி வருவாய் அதிகரிப்பு

கொழும்பு,ஜன.22

கொழும்பு மாநகர சபையால் இலக்கு வைக்கப்பட்ட 308 கோடி வரி சேகரிப்பு வருவாயில் கடந்த ஆண்டில் 248 கோடி ரூபா சேகரித்துக்கொள்ள அது திறன் பெற்றிருந்ததாக நகரசபைப் பொருளாளர் கே.ரி.சித்ரபால தெரிவித்துள்ளார்.

எஞ்சியுள்ள 60 கோடி ரூபா கொண்ட வரி அறவீட்டுத் தொகை சேகரிக்கப்பட வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆண்டொன்றில் சேகரித்துக் கொள்ளப்பட்டுள்ள அதிகூடிய வரிவருவாய் இதுவே என்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விதிக்கப்பட்டுள்ளதற்கு அமைய தொடர்ச்சியாக வரிகளைச் செலுத்தும் நகரமக்களைப் பாராட்டுதல், வரிக்கட்டணங்களுக்கு கழிவுகளை வழங்குதல் மற்றும் பல்வேறு விதமான சலுகைகளை வழங்குதல் என்பன இந்த நிலைப்பாட்டுக்கு காரணமாயுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-22)

## சுதந்திர தினத்தை கொண்டாடுமாறு சுற்றறிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.22

இலங்கையின் 65 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு எதிர்வரும் மூன்றாம், நான்காம் திகதிகளில் சகல அரச திணைக்கள அலுவலகங்களிலும் சிறப்பாக கொண்டாட ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறு அரச பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பீ.வி.அபேகோன் சுற்றறிக்கை மூலம் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார்.

தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு அரச அலுவலகங்களாக பேணப்படுகின்ற சகல கட்டடங்களையும் விழாக்கோல ஒளி விளக்குகளால் அலங்கரிப்பதற்கும் அந்தக் கட்டடங்களில் தேசியக் கொடி பறக்கவிடுவதற்கும் அரசு தீர்மானித்துள்ளதாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-9)

## கால்கோள் விழாவில் மக்கள் வங்கியால் புதிய கணக்கு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.22

தென்மராட்சி பிரதேசத்தில் தரம் ஒன்றில் மாணவர்களை இணைக்கும் கால்கோள் விழா நிகழ்வில் சாவகச்சேரி மக்கள் வங்கியினர் புதிய மாணவர்களுக்கு புதிய கணக்குகளை ஆரம்பித்ததுடன் அவர்களுக்கு பெறுமதியான பரிசுப் பொருள்களையும் வழங்கினர்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தரம் ஒன்றில் மாணவர்களை இணைக்கும் கால்கோள் விழாவில் மக்கள் வங்கியில் கணக்கு ஆரம்பித்த மாணவர்களில் 500 ரூபாவுக்கு உட்பட்ட தொகையை வைப்புச் செய்த மாணவர்களுக்கு வைப்புத் தொகை அளவு தொகையையும் 500 ரூபாவுக்கு மேல் வைப்புச் செய்த மாணவர்களுக்கு 500 ரூபாவையும் அவர்களின் கணக்குகளில் மக்கள் வங்கி வைப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் புதிதாக இணைந்த மாணவர்களுக்கு தொப்பி, குடிதண்ணீர் போத்தல், புத்தகப்பை, கொப்பி ஆகியவையும் வழங்கப்பட்டன.

வங்கிக் கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கால்கோள் விழா நடைபெற்ற இடங்களுக்கு வங்கி உத்தியோகத்தர்கள் நேரில் சென்று பரிசுப் பொருள்களை வழங்கினர். (ம-9)

# இடமாற்ற அறிவிப்பு இல்லை என தீவக வலய ஆசிரியர்கள் விசனம்

யாழ்ப்பாணம்,ஜன.22

தீவக கல்வி வலயத்திலிருந்து இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள் தொடர்பான விவரங்கள் கல்வி வலயத்தில் காட்சிப்படுத்தவில்லை. தனிப்பட்ட ரீதியிலும் ஆசிரியர்களுக்கு அறிவிக்கப்படவில்லை. இதனால் இடமாற்றத்துக்கு விண்ணப்பித்த ஆசிரியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கல்வி வலயங்களால் இடமாற்றத்துக்கு காலங்கள் பூர்த்தி செய்யப்பட்ட ஆசிரியர்களின் விவரங்கள் வடமாகாண கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பங்களை மீள் பரிசீலனை செய்த வடமாகாண கல்வித் திணைக்களம் 2013 ஆம் ஆண்டுக்கான இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் விவரங்களைக் கல்வி வலயங்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

இது கடந்த வாரம் ஒவ்வொரு கல்வி வலயங்களிலும் காட்சிப் படுத்தப்பட்டது.

ஆனால் இதுவரைக்கும் தீவக கல்வி வலயத்தில் இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் விவரங்கள் காட்சிப்படுத்தப்படாததையிட்டு ஆசிரியர்கள் விசனம் தெரிவித்தனர்.

இடமாற்றம் கோரி நிராகரிக்கப்பட்ட ஆசிரியர்கள், மேன்முறையீடுகள் செய்ய இருப்பின் கடந்த 19 ஆம் திகதிக்கு முன்னர் மேன்முறையீடுகளைச் செய்திருக்க வேண்டும்.

இந்த நிலையில் தமது இடமாற்றம் ஏற்றுக்கொள்ளப்பட்டதா? இல்லையா? என்பது தெரியாமல் தமது மேன்முறையீடுகளைச் செய்ய முடியாமல் தவிக்கின்றனர் தீவக கல்வி வலய ஆசிரியர்கள்.

எனவே, இதற்கு உரிய நடவடிக்கை எடுத்து தமக்குரிய பதிலையும், இடமாற்ற மேன்முறையீட்டுக்கான காலத்தையும் வழங்க வேண்டும் என்று அந்தப் பகுதி ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பில் சந்தை அமைக்கும் முயற்சி மீண்டும் கைவிடப்பட்டது

## பொதுமக்களின் எதிர்ப்பை அடுத்து

புதுக்குடியிருப்பு, ஜன.22

பொது மக்களின் ஆட்சேபனையை அடுத்து புதுக்குடியிருப்புச் சந்தையை அமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வு இரண்டாவது தடவையாகவும் கைவிடப்பட்டுள்ளது.

இதனால் பொது நிறுவனம் ஒன்றினால் சந்தை அமைப்பதற்கென ஒதுக்கப்பட்ட 30 இலட்சம் ரூபா நிதி பயன்படுத்தப்படாமல் முடங்கிக் கிடக்க வேண்டிய அவல நிலை தோன்றியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் வசதி கருதி நிறுவனம் ஒன்றின் 30 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் பொதுமக்களால் வழங்கப்பட்ட காணியில் பொதுச் சந்தை அமைப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அரசுக்குச் சொந்தமில்லாத காணியில் சந்தை அமைப்பது சட்டவிதிகளுக்கு முரணானது என்ற காரணத்தால் இது நிறுத்தி வைக்கப்பட்டது.

**ஒதுக்கப்பட்ட 30 இலட்சம் ரூபா நிதி பயன்படுத்தப்படாமல் முடங்கிக் கிடக்க வேண்டிய அவல நிலை..**

இதை அடுத்து கோம்பாவில் கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஏ-35 வீதியில் பஸ் நிலையத்துக்கு முன்பாக பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட ஒன்றரை ஏக்கர் காணியில் பொதுச் சந்தை அமைப்பதற்கான வேலைகளைப் பிரதேச சபை மேற்கொண்டது.

இந்த நிலையில் மேற்படி இடத்தில் சந்தை அமைக்கப்படுவதை ஆட்சேபித்த மக்கள் போருக்கு முன்னர் சந்தை இயங்கி வந்த இடத்தில் தனிநபர்களால் கூட்டாக வழங்கப்பட்ட காணியில் சந்தை அமைக்கவேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர். இதனால் சந்தை அமைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி இரண்டாவது தடவையாகவும் கைவிடப்பட்டது. தனிநபர்களால் வழங்கப்பட்ட காணியை பிரதேச செயலகம் சுவீகரித்து பிரதேச சபைக்கு வழங்கும் வரை சந்தை அமைப்பது நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

(க-155)

# குழப்பத்தில் முடிவடைந்தது மன்னார் நகரசபைக் கூட்டம்

## சபை உறுப்பினர்கள் வெளிநடப்பு

மன்னார்,ஜன.22

மன்னார் நகரசபையின் இந்த ஆண்டுக்கான முதலாவது கூட்டம் குழப்பத்தில் முடிவடைந்துள்ளது.

நேற்றைய தினம் நகர சபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் மன்னார் நகர சபையின் இந்த ஆண்டுக்கான முதலாவது கூட்டம் ஆரம்பமானது. இதில் உபதலைவர் ஜேம்ஸ் யேசுதாஸ் உட்பட ஆளும் தரப்பு, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

கூட்டம் ஆரம்பமானதும் ஆளும்கட்சி உறுப்பினர்களான இரட்ணசிங்கம் குமரேஸ், மற்றும் மெரினஸ் பெரேரா ஆகியோர் எழுந்து கடந்த 20 மாதங்களாக சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை செயல்படுத்துவதில் சபையின் செயலாளர் அசமந்தமாக இருப்பதாகக் குற்றம் சாட்டியதுடன் கடும் விசனத்தையும் வெளியிட்டனர். இதற்குப் பல்வேறு உதாரணங்கள் அவர்களால் கூறப்பட்டது.

குறிப்பாக தினச்சந்தை வியாபாரிகளை அங்கிருந்து வெளியேற்றுவதில் ஏற்பட்டு வரும் காலதாமதம் தொடர்பாக அவர்கள் எடுத்துக் கூறினர். மேலும் ஓட்டோக்களுக்கு அடையாள ஸ்ரிக்கர் ஒட்டுவதில் வீணான காலதாமதம் ஏற்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அப்போது குறுக்கிட்ட எதிர்க்கட்சி உறுப்பினரான என்.நவ்சீன் செயலாளருக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்தார். இதனால் சபையில் கடும் வாக்குவாதம் நிகழ்ந்தது.

இதனைத் தொடர்ந்து தலைவர், உபதலைவர், சபையின் செயலாளர் நீங்கலாக சபை உறுப்பினர்கள் சபையைவிட்டு வெளிநடப்புச் செய்தனர்.

பின்னர் தலைவரும், உபதலைவரும் வெளியேறினர். இறுதியில் சபையின் செயலாளரும், ஆளும்தரப்பு உறுப்பினருமாகிய என்.நவ்சீன் ஆகியோர் மட்டுமே சபையில் அமர்ந்திருந்தனர்.

அப்போது கருத்துத் தெரிவித்த செயலாளர், தம்மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவதாகவும், தாம் சபைக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் எப்போதுமே மதிப்பளித்து வருவதாகவும் கண்ணீர் மல்கத் தெரிவித்ததாகக் கூறப்பட்டது. (க-12)

# 'வாழ்வின் எழுச்சி' குறித்து கூட்டங்கள் வவுனியா வடக்கிலும் ஒட்டுசுட்டானிலும்

நெடுங்கேணி,ஜன.22

வாழ்வின் எழுச்சி தொடர்பான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் வவுனியா வடக்கு, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்றுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வாழ்வின் எழுச்சித்திட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த 18 ஆம் திகதி வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் பண்பாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் க.பரந்தாமன் தலைமையில் இடம்பெற்றது. இதில் விவசாயம், கைத்தொழில், மீன்பிடி ஆகிய விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

கமக்கார அமைப்புகள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் அரச திணைக்களங்களின் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டனர்.

இங்கு மக்களின் அபிவிருத்தி தொடர்பாக முக்கியமாகக் கலந்துரையாடப்பட்டது. பிரதமவிருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக், வடமாகாண ஆளுநரின் பிராந்திய ஆணையாளர் எம்.மொகைடீன், வவுனியா வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். 300 க்கு மேற்பட்ட பொதுமக்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இதைப் போன்றதொரு கூட்டம் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய கேட்போர் கூடத்தில் பிரதேச செயலர் தி.திரேஸ்குமார் தலைமையில் இடம்பெற்றது.

அமைச்சர் றிசாத் பதியுதீன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இங்கு ஆயிரத்து 500 சமுர்த்திப் பயனாளிகளுக்கு பணமும், வங்கிப் புத்தகங்களும் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கூட்டத்தில் ஒட்டுசுட்டான் அபிவிருத்திக் குழுவின் இணைப்பாளர் பி.வன்னியசிங்கம், திட்டமிடல் பணிப்பாளர் திருமதி வில்வராசா மற்றும் இராணுவ அதிகாரி, பொலிஸ் அதிகாரி ஆகியோரும் கலந்து கொண்னர்

(க-435)

# முல்லையிலிருந்து கடத்தப்படும் மரங்கள்

முல்லைத்தீவு,ஜன.22

முல்லைத்தீவிலிருந்து வெளிமாவட்டங்களுக்கு நாளாந்தம் மரங்கள் கடத்தப்படுவதாக அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

தாம் வீடுகளை அமைப்பதற்கு தடிகளைக் கூட வெட்டக் கூடாது என்று தடை விதித்து விட்டு இவ்வாறு பெருந்தொகை மரங்களைக் கடத்திச் செல்வது தமக்கு வேதனையை அளிப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பெறுமதி வாய்ந்த பாலை, முதிரை போன்ற மரங்களே கடத்தப்படுவதாகவும் இவர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை தமது வீடுகளுக்குத் தேவையான பலகைகளை அதிக விலை கொடுத்து வாங்குவதாகவும் இவர்களால் தெரிவிக்கப்பட்டது. (க-500)

# முல்லைத்தீவு மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தில் பெரும் பாதிப்பு

## தென்னிலங்கையிலிருந்து வருபவர்களால் இந்த நிலை

முல்லைத்தீவு,ஜன.22

தென்னிலங்கையிலிருந்து வருகை தருபவர்களால் முல்லைத்தீவு மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

பெருமளவு தென்னிலங்கை வியாபாரிகள் இங்கு வருகை தந்து பல்வேறு வகையான வியாபார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் இங்குள்ள வர்த்தகர்கள் தமது வர்த்தகத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

மேலும் பொருள்கள் விற்பனையாகாது தேங்கிக் கிடப்பதால் தமது வியாபார நடவடிக்கைகளுக்கெனப் பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் தாம் அவலப்படுவதாகவம் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

**இதேவேளை தென்னிலங்கையைச் சேர்ந்த ஒப்பந்தகாரர்களே வீதி மற்றும் கட்டட வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர்.**

இதேவேளை தென்னிலங்கையைச் சேர்ந்த ஒப்பந்தகாரர்களே வீதி மற்றும் கட்டட வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர்கள் வேலையாள்களைத் தம்முடன் அழைத்து வருவதோடு வாகனங்களையும் கொண்டு வருகின்றனர். இதனால் உள்ளூர் மக்கள் வேலை வாய்ப்பின்றி வறுமையில் முடங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் வாகன உரிமையாளர்களும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். குத்தகை அடிப்படையில் வாகனங்களைக் கொள்வனவு செய்தவர்கள் தவணைக் கட்டணங்களைச் செலுத்த முடியாத நிலையில் உள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க-500)




இலங்கை இந்துப் பேரவையும், சைவ மங்கையர் கழகமும் இணைந்து செரண்டிப் சிறுவர் இல்லத்தின் அனுசரணையுடன் செட்டிகுளத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு மற்றும் படைகைகளை வழங்குகின்றனர். (க-402)

# இதுவரை மீள்குடியமராதோருக்கு சலுகைகளை வழங்க வேண்டாம்

## முத்துஜயன்கட்டு, மன்னாகண்டல் மக்கள் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜன.22

மன்னா கண்டல் முத்துஜயன்கட்டு பகுதியில் மீள்குடியமராதவர்களுக்கு சலுகைகளை வழங்க வேண்டாமென மீள்குடியமர்ந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

முத்துஜயன்கட்டு இடது கரையிலுள்ள மன்னாகண்டல் பகுதியில் மீள்குடியமர்வதற்கு பல குடும்பங்கள் வராமையால் மீள்குடியமர்ந்த குடும்பங்கள் பல்வேறு இன்னல்களை எதிர் நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

போருக்கு முன்னர் மன்னாகண்டல் பகுதியில் உள்ள 300 காணித்துண்டுகளில் 300 குடும்பங்கள் வசித்து வந்தன. ஆனால் தற்போது 90 குடும்பங்களே மீள்குடியமர்ந்துள்ளன. இந்தக் குடும்பங்களும் அங்கொன்றும் இங்கொன்றுமாக வாழ்ந்துவருகின்றன. இதனால் இடையில் உள்ள காணிகள் காடாக மாறிக் காணப்படுகின்றன. இதனால் இங்கு மீள்குடியமர்ந்தவர்கள் கால்நடைகளை வளர்க்கவோ அல்லது பயிர்ச் செய்கையை மேற்கொள்ளவோ முடியாத நிலையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. காட்டு விலங்குகளாலும், விஷ ஐந்துக்களாலும் இவர்கள் அச்சமடைய வேண்டியுள்ளது. இந்தக் காணி உரிமையாளர்கள் புதுக்குடியிருப்பு, வவுனியா ஆகிய பகுதிகளில் இருந்து கொண்டு சலுகைகளைப் பெறுவதோடு சிறு போக மற்றும் காலபோக செய்கையின்போது பங்கைப் பெற்று [illegible] வேறு ஆட்களுக்கு விற்றுவிட்டுச் சென்றுவிடுகின்றனர்.

இத்தகைய காணிகள் வெட்டித் துப்புரவு செய்யப்பட்டு செய்கைக்கு உட்படுத்தப்படல் வேண்டும். அல்லது இவற்றை காணி இல்லாதவர்களுக்கு வழங்க வேண்டும் என மீள்குடியமர்ந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

குடியிருக்காத எவருக்கும் எந்தச் சலுகையும் வழங்கக் கூடாது எனவும் அவர்கள் தெரிவித்தனர். மேலும் இங்குள்ள கூட்டுறவுக் கிளை முன்னர் முத்துஜயன்கட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்பட்டது. இதனால் இங்குள்ள மக்கள் இலகுவாக பொருள்களைப் பெற முடிந்தது. ஆனால் தற்போது அது இயங்குவதில்லை. இதனால் அதிக தூரம் சென்று பொருள்களைக் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. எனவே இந்தக் கிளையை மீண்டும் இயங்க வைக்க வேண்டும் எனவும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வீட்டுத் திட்டப் பணிகள் மன்னார் முசலியில் ஆரம்பம்



மன்னார், ஜன.22

இந்திய வீட்டுத்திட்ட வேலைகள் மன்னார் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்திய அரசினால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள 50 ஆயிரம் வீட்டுத்திட்டத்தின் ஒரு பகுதி வீட்டுத் திட்ட வேலைகளே தற்போது மன்னார் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போரினால் பாதிக்கப்பட்ட முசலி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சில கிராமங்களில் 105 வீடுகள் அமைப்பதற்கான தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது இவற்றை அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

பண்டாரவெளி கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட வெள்ளிமலை, பண்டாரவெளி ஆகிய கிராமங்களில் தற்போது இந்திய வீடுகள் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-12)

## கலைத்தூது அழகியற் கல்லூரியில் கற்கைகளுக்கு விண்ணப்பிக்கலாம்

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியில் 2013 ஆம் ஆண்டுக்கான புதிய வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வாய்ப்பாட்டு, நடனம், வீணை, வயலின், புல்லாங்குழல், மிருதங்கம், ஓகன், ட்றம், சித்திரம், நாடகமும் அரங்கியலும் போன்ற கவின் கலைப் பாடங்களுக்கும், கூத்து, கண்டிய நடனம், யோகாசனம், அழகுக் கலை, பண்பாடு போன்ற சிறப்புப் பாடங்களுக்கும், துணைப்பாடமான ஆங்கிலத்துக்கும் விரும்பியோர் விண்ணபிக்க முடியும் என்று கலைத்தூது அழகியற் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

கற்கை நெறிகளைப் பயில ஆர்வமுள்ளோர் இல.128, டேவிட் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள குறித்த கல்லூரியில் விண்ணப்பங்களைப் பெற்று 31.01.2013 இற்கு முன்னர் ஒப்படைக்குமாறு அவர் தெரிவித்துள்ளார். (ங)

## போக்குவரத்தில் சிரமங்களை எதிர்கொள்ளும் ஸ்கந்தபுரம் விநாயகர் குடியிருப்பு மக்கள்

கிளிநொச்சி, ஜன.22

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் விநாயகர் குடியிருப்பு மக்கள் போக்குவரத்தில் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் விநாயகர் குடியிருப்பு கிராமத்தில் சுமார் 100 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்தக் கிராமத்தில் போதிய அடிப்படை வசதிகள் எவையும் வழங்கப்படாத நிலையில் இங்கு வசிக்கும் மக்கள் இவற்றைத் தேடி வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர்.

மேலும் இங்குள்ள பிரதான வீதியில் அமைந்துள்ள மரப்பாலம் சேதமடைந்து ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது. வீதியும் சேதமடைந்து காணப்படுகின்றது. அதுமட்டுமன்றி இந்தக் குடியிருப்பில் அமைந்துள்ள ஏனைய வீதிகளும் மக்களின் உபயோகத்துக்கு உதவாத நிலையில் காணப்படுகின்றன.

இதனால் மிகவும் பின் தங்கிய நிலையிலுள்ள இந்தக் குடியிருப்பில் வசிக்கும் மக்கள் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர். (க-6)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
இ.ஸ்ரீநிவாசன் அவர்களின் அன்புத்தாய்
திருமதி
இந்திரகுமாரி இராமகிருஷ்ணர்
அவர்களின் மறைவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாடசாலை சமூகம் (யா/வேலணை கிழக்கு ம.வி.)

## மரண அறிவித்தல்

### திருமதி இந்திரகுமாரி இராமகிருஷ்ணர்



பருத்தித்துறை, தும்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமகிருஷ்ணர் இந்திரகுமாரி நேற்று (21.01.2013) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகேந்திரம் - மனோன்மணி தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சு.இராமகிருஷ்ணரின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்) அன்பு மனைவியும், ஸ்ரீநிவாசன் (ஆசிரியர், வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்), ரகுராம் (ஊழியர் - பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம்), வெங்கடரமணா (பொறியியல் மாணவர் - City&guilds - London) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான இளமுருகனார், மருள்நீக்கியார் மற்றும் பரஞ்சோதியார், வைத்தியநாதன், குமாரகுலசிங்கம் (ஜேர்மனி), குகன், திருமதி தி.சாருமதி (கிராமசேவகர்), திருமதி அம்பிகை -வாசன், விவேகானந்தன் ஆகியோரின் மைத்துனியும், சந்திரகுமாரன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ர.கிருஷாந்தி, கலையரசி ஆகியோரின் அன்பு மாமியும், அனுஷ்கா, அட்ஷயன், அம்புயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-01-2013) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் கோரையடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தும்பளை மேற்கு,
பருத்தித்துறை. (28457) (6.7.2)

தகவல்:
சு.இராமகிருஷ்ணர் (கணவர்)

வவுனியா சிதம்பரபுரம் மலையடிவாரத்தில்

## சட்டவிரோத கல் அகழ்வால் மண்சரிவு ஏற்படும் அபாயம்

### அச்சம் தெரிவிக்கின்றனர் குடியிருப்பாளர்கள்

வவுனியா, ஜன.22

வவுனியா சிதம்பரபுரம் மலையடிவாரத்தில் கல் அகழ்வு தொடர்ந்து இடம்பெறுவதால் எதிர்காலத்தில் மண்சரிவு போன்ற பாதிப்புகள் ஏற்படக் கூடுமென இங்கு வசிக்கும் மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

திருப்பழனி முருகன் ஆலயம் சிதம்பரபுரம் மலையின் உச்சியில் அமைந்துள்ளது. இங்கு பக்தர்களும், உல்லாசப் பயணிகளும் தினமும் வருகை தருகின்றனர். இதேவேளை இயற்கை எழில் வாய்ந்த வவுனியாவின் வரலாற்றுப் பெருமை வாய்ந்த இடமாகவும் இந்த மலை திகழ்கிறது.

இதன் அடிவாரத்தில் குடியேற்றங்கள் காணப்படுகின்றன. ஆனால் தொடர்ச்சியான கல் அகழ்வு மற்றும் உடைப்புச் சம்பவங்கள் இந்த மலையில் இடம்பெறுகின்றன. கட்டடங்களை அமைக்கவென சட்டத்துக்கு முரணான வகையில் கற்கள் உடைக்கப்படுவது தொடர்பாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் இந்த மலையில் இருந்து கற்கள் உடைத்து எடுக்கப்படுவதால் எதிர்காலத்தில் மண்சரிவு ஏற்பட்டு ஆபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளதாகவும் மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

மலையடிவாரத்தில் அகழ்ந்து எடுக்கப்படும் கற்கள் ஓமந்தை, புளியங்குளம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மல்லாவி, மாங்குளம், துணுக்காய் ஆகிய பகுதிகளுக்கு டிப்பர்கள் மூலம் கொண்டு செல்லப்படுகின்றன என்றும் தெரியவருகின்றது.

ஏ-9 வீதியூடாக அனுமதி இல்லாது கற்கள் கொண்டு செல்லப்படுவது தொடர்பாக பொலிசார் உரிய நடவடிக்கை எடுத்து தடுத்து நிறுத்தினால் எதிர்காலத்தில் மலைக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களைத் தவிர்க்க முடியும் என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர். (க-402)

## ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் டெங்கு பரவும் அபாயம்

முல்லைத்தீவு, ஜன.22

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் டெங்கு பரவும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பிரதேசத்திலுள்ள முத்துஐயன்கட்டு முத்துவிநாயகபுரம் முதலாம் கண்டத்தில் வசிக்கும் குணரத்தினம் அனுஷ்ஷியா (வயது-16) என்ற மாணவி டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு மாஞ்சோலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் டெங்கு நுளம்புகள் பெருகியுள்ளமை தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து சுகாதாரப் பிரிவினர் டெங்கு நுளம்புகளை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக வெள்ளம் தேங்கி நிற்பதால் நுளம்புகள் எளிதில் பெருகக் கூடிய ஏது நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-500)

## மரண அறிவித்தல்

### பசுபதி அரசரெட்ணம்



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பசுபதி அரசரெட்ணம் கடந்த (19.01.2013) சனிக் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பசுபதி மற்றும் கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், சொக்கலிங்கம்- சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும் தவமலரின் அன்புக் கணவரும், துஷ்யந்தன் (லண்டன்), Dr.துஷ்யந்தி, துஷாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவநந்தினி, நகுலன் ஆகியோரின் மாமனாரும், சரோஜாதேவி, வசந்தகுமார், யோகதேவி, விமலாதேவி, இந்திராதேவி, ஜெயக்குமார், ரவீந்திரகுமார் ஆகியோரின் அன்புச்சகோதரனும் யோகாம்பிகை, லோகேஸ்வரி, விக்கினேஸ்வரி, விக்கினேஸ்வரன், இரட்னேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.01.2013) புதன் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சுருவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுருவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுருவில்
வேலணை.

தகவல்:
குடும்பத்தினர்.

உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

விரைவு ! பாதுகாப்பு! நம்பகத்தன்மை !

சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் எமது சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்,

- 11 kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு மிக குறைந்த கட்டணம் அறவிடப்படும்.
- உங்கள் பொதிகள் 3 - 5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
- தற்பொழுது இலங்கையில் எங்கும் இல்லாதவாறு மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் புடவைகள் CD, VCD கள் என்பன மிக விரைவாக அனுப்பிவைக்கப்படும்.
- 220 நாடுகளுக்கான கட்டணங்களும் குறைக்கப்பட்டுள்ளன.

20 வருடங்களுக்கு மேல் எமது நிறுவனம் பொதிகள் சேவையில் முன்னிலையில் திகழ்ந்து நேரடி முகவராக தனி இடம் பிடித்துள்ளது.

குறிப்பு: இந்த சலுகை திருமுருகன் கொம்[illegible] கட்டணங்களை செலுத்தி ஏமாறாதீர்கள்.

DHL

TCN Express
இல. 28, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 2

திருமுருகன் கொம் எந்நு
இல. 208A [illegible] வீதி, யாழ்ப்பாணம். - 021 222 7835
(பழைய [illegible] ஆல் சிலோனிற்கு அருகாமையில் அமைந்துள்ளது.)
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கரத்தினம் சண்முகநதன்



கொக்குவில் பிரம்படியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் சண்முகநாதன் நேற்று (21.01.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகநாதனின் (ஆசிரியர்)அன்பு மனைவியும், காலஞ்சென்றவர் களான பொன்னையா -செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான தம்பி, நாகநாதன், தர்மலிங்கம், நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், லோகேந்திரன், சரவணபவன் (கனடா), சகலகலாதேவி (யாழ். பொது நூலகம்- நூலகர்), மகேந்திரன் (ஜேர்மனி) காலஞ்சென்ற தனேஸ்வரி ஆகியோ ரின் அன்புத் தாயும், ஞானசுந்தரி, மைதிலி, பேரானந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியும், வேணிகா, மதிவதனி, மதுமிலா, பவித்திரா, தக்ஷாயினி, சங்கீர்த்தன்(கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(21.01.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: ச. லோகேந்திரன்,
பே.சகலகலாதேவி.

பிரம்படி லேன், கொக்குவில்.

## கூறுவிலை கோரல்
### வலயக்கல்வி அலுவலகம், தீவகம், வேலணை

எமது தீவகக் கல்வி வலயத்துக்குத் தேவையான கீழ்க் குறித்த பொருள்கள் விநியோகம் செய்வதற்கான கூறுவிலை கள் கோரப்படுகின்றன.

பொருள் கொள்வனவுக்கான திட்டம் :-TSEP-2012
செயற்றிட்ட இலக்கம் :-NP/41/20/03/TSEP/2013
பொருள்கள்:-
01. Desktop Computer - 11
02. Dot Matrix Printer - 01
03. SingnatureMachine - 01

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :-23.01.2013
தொடக்கம் 05.02.2013 பி.ப 4.00மணி வரை
கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:-28.02.2013 மு.ப 10.00 வரை.

அலுவலக நேரத்தில் எமது அலுவலகத்தின் நிதிக்கிளையில் மீளளிக்க முடியாத வைப்புப்பணம் ரூபா 100.00ஐ செலுத்தி கூறு விலைப்படிவத்தினை பெற்று பூர்த்திசெய்யப்பட்ட கூறுவிலையை வலயக்கல்வி அலுவலகம், தீவகம், வேலணை எனும் முகவரிக்கு நேரில் அல்லது பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவும். எம்மால் குறிப்பிடப்படும் திகதியில் பொருள்களை அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

தி.ஜோன் குயின்ரஸ், வலயக் கல்வி பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம், தீவகம், வேலணை.

## கால்கோள் விழா

யாழ்ப்பாணம்,ஜன.22

யாழ்.புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலையின் கால்கோள் விழா இன்று நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் இ.கோகுலராகவன் தலைமையில் நடை பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அச்சுவேலி மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி ஆர்.தவநாயகமும் சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வி வலய சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் திருமதி கே.சோதிதாசனும் கலந்துசிறப் பிக்க வுள்ளனர். (ந)

### கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடு களுக்கே வந்து திருத்தித்தருகின் றோம்.

அழையுங்கள்-077 9086737

**GUNAA BEST PC,
52, Hospital Road, Jaffna**

### தவறி விட்டது

யோவான் கிரிஸ்துராஜா ஆகிய எனது இன்சு ரன்ஸ்,ரக்ஸ், லைசன்ஸ், ஆகிய ஆவணங்கள் நெல்லியடிக்கும், மந்திகைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

T.P 0770572244

### ஒக்ட பாட் விற்பனைக்கு PAD

நல்ல நிலையில் உள்ள ROLAND SPD 20 ஒக்டபாட் விற்பனைக்குள்ளது. (ஒரிஜினல் ஜப்பான்) உடன் தொடர்பு கொள்ளவும்.

T.P:0776980573.

(28593) (6.7.4)

### Personal Class

All kinds of make up class - in English also 0777268569

(28622)(7.6)

### வீடு வாடகைக்கு /விற்பனைக்கு

A9 வீதியில் 3 பரப்புக் காணியுடன் சேர்ந்த வீடு உடனடியாக விற்பனைக்கு/ வாடகைக்கு உண்டு. நிறுவனத்துக்கும் உகந்தது. வாகனத்தரிப்பிட வசதியுண்டு.

தொடர்பு: 0776537129

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111

### Personal Class

Year 1-5 English medium class 0777268569

(28621)(7.6)

### நாஹா மருத்துவ நிலையம்

* எலும்புகளை அதிகளவு பாதிக்கும் மூட்டுவாதம்
* மூச்சு திணறும் ஆஸ்மா, அல்சர், கொடிய புண்கள்
* குழந்தையின்மைக்கான அதி அற்புத மருந்தியல்

கிழமை நாள்:- 3 Pm - 7 pm - ரவி, ஞாயிறு 8.30 am -2 pm
T.P. 0773212740
வங்கி ஒழுங்கை, சந்தைக்கு அருகாமையில் (ஜோதி வீடு), மானிப்பாய்.

(28598) (6.2.7)

## கூறுவிலை கோரல்

யா/ மகாஜனக் கல்லூரியின் கல்வி அபிவிருத்திக் குழு சார்பாக இல.61 - 2627 உடைய சிற்றூர்தி (mini Bus) விற்பனைக்கான கூறுவிலை கோரல்களை 31.01.2013 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

முகவரி:
அதிபர், யா/ மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை.

அதிபர்,
மகாஜனக் கல்லூரி,
கல்வி அபிவிருத்திக்குழு சார்பாக.

(C5774) (2.6.7)

## விண்ணக வாழ்வின் பத்தாண்டு நினைவு நாள்



மண்ணக வாழ்வில்
05.01.1934

விண்ணக வாழ்வில்
22.01.2003

அமரர் கார்த்திகேசு கந்தசாமி (தமிலஸ்)
(ஓய்வுநிலை பிரதி அதிபர் யா/இமையாணன் அ.த.க.வித்தியாலயம்)

பாசமுள்ள அப்பாவே! நீங்கள் மறைந்து ஆண்டுகள் பத்தானாலும் மாறாது உங்கள் பசுமை நினைவுகள் வாழ்க்கைப் பயணமதில் உங்களின் சுவடுகளில் பயணிப்போம் நாம்

நீங்காத நினைவுகளுடன்:
அன்பு மனைவி, மக்கள், மருமகள், பேர்த்தி, சகோதரர்கள்.

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

## 31 ஆம்நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்

மலர்வு
08 - 01 - 1930



உதிர்வு
22 - 12 - 2012

### அமரர் கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி

கடந்த 22.12.2012 இல் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் 19.01.2013 சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன.

வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (22.01.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் , மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

அன்னாரின் மரணச்சடங்கிலும் , இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்டவர்கள் ,உதவியவர்கள், பலவகைகளிலும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்கள் ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

## ஓயாத நினைவுகளுடன் ஒன்பது ஆண்டுகளாய்....

ஒளியாக
30.10.1975



ஒலமாக
17.01.2004

### அமரர் சின்னத்துரை ரஜனன்

திதி: ஏகாதசி (22.01.2013)

ஒன்றாக கூடி வாழ்ந்த நாள்கள் ஓவியமாய் எம் நினைவில்
ஒளியில்லா தீபமாக நாமிங்கு
ஒலமிட்டு அழுதாலும் ஆறாது எம் கவலை
ஓயாத நினைவுகளுடன் ஒன்பது ஆண்டுகளாய்......
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பெற்றோர்: திரு.திருமதி லோகேஸ்வரி சின்னத்துரை (கனடா)
சகோதரர்கள்: ரமணன் குடும்பம் (கனடா)
ரமணி குடும்பம் (பிரான்ஸ்)
ரஜனி குடும்பம் (கனடா)

'லோகஸ்தான்'
கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.

(28596)(6.7.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் இல்லங்களில் இணையும் சிறார் எண்ணிக்கை உயர்வு

## கடந்த வருடம் குடாநாடு முழுவதும் 1,439 பேர் இல்லங்களில்

யாழ். குடாநாட்டில் 2010 ஆம் ஆண்டு 371 சிறுவர்கள் சிறுவர் இல்லங்களில் வசித் திருந்தனர். 2011 ஆம் ஆண்டு சடுதியாக அதிகரித்து ஆயி ரத்து 413 சிறுவர்கள் இல்லங்களில் வசித்திருந்த னர்.

யாழ்ப்பாணம், ஜன. 22

யாழ். குடாநாட்டில் சிறுவர் இல்லங்களில் வசிக்கும் சிறுவர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. கடந்த ஆண்டு புள்ளி விவரங்களின் படி ஆயிரத்து 439 சிறுவர்கள், சிறுவர் இல்லங்களில் வாழ்வந்து வருகின்றனர் என்று யாழ். மாவட்ட செய லக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் 2010 ஆம் ஆண்டு 371 சிறுவர்கள் சிறுவர் இல்லங்களில் வசித் திருந்தனர். 2011 ஆம் ஆண்டு சடுதியாக அதிகரித்து ஆயிரத்து 413 சிறுவர்கள் இல்லங்களில் வசித்திருந்தனர். கடந்த 2012 ஆம் ஆண்டு இந்தத் தொகை மேலும் அதி கரித்து ஆயிரத்து 439 ஆகி யுள்ளது.


இதில் தாம் வசிக் கும் பிரதேசத்து சிறுவர் இல்லங்களில் 316 சிறுவர்கள் வசித்தனர் என்றும் ஆயிரத்து 123 சிறுவர்கள் வேறு இடங்களில் உள்ள சிறுவர் இல்லங்களில் வசித்தனர் என்றும் கடந்த ஆண்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவில் 11 சிறுவர்களும், வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் 9 சிறுவர்களும் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் 185 சிறுவர்களும், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 5 சிறுவர்களும், யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் 55 சிறுவர்களும்-

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 381 சிறுவர்க ளும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 120 சிறுவர்களும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 77 சிறுவர்களும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 150 சிறுவர்களும்-

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 191 சிறுவர்களும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 99 சிறுவர்களும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 79 சிறுவர்களும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 22 சிறுவர்களும், மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 12 சிறுவர்களும் சிறுவர் இல்லங்களில் வசிப்பதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-5)

# நல்லூர் ஆலய சூழலில் பிடிக்கப்பட்ட தெரு நாய்கள்



யாழ்ப்பாணம்,ஜன.22

நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பகுதிகளில் அலைந்து திரிந்த நாய்கள் யாழ். மாநகர சபை ஊழியர்களால் பிடிக்கப்பட்டு வருகின்றன.

அந்தப் பகுதியில் அலைந்த சுமார் 60 நாய்கள் முதற்கட்டமாகப் பிடிக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் மாநகர சபைகள், வீதிகளில் கட்டாக்காலியாக அலையும் நாய்களைப் பிடித்துச் சென்று விடுவது வழமை.

அப்போது பிடிபடும் ஒரு நாய்க்கு 10 ரூபா வீதம் பிடிப்பவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது.

கடந்த 2006 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாய் பிடிக்கும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

யாழ்.மாநகர சபையின் வேண்டுகோள்களையும் புறக்கணித்து மக்கள் வீதியோரங்களில் போடும் கழிவுகளை இந்த கட்டாக்காலி நாய்கள் நடுத்தெருவுக்கு இழுத்துச் சென்று வீதியை சுகாதாரக் கேடு நிறைந்ததாக்கி வருவது வழக்கம்.

போக்குவரத்துக்கு இடையூறுகளையும் சில சமயங்களில் விபத்துக்கள் ஏற்படவும் இவை காரணமாகி விடுகின்றன. இந்த நிலையில் மாநகரசபை மீண்டும் நாய்களின் மீது கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது என்று கூறப்படுகின்றது.(ம-7)

# செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன.22

உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தினால் 17 உள்ளூராட்சி சபைகளுக்கும் கட்சி வேறுபாடு இன்றி யாழ்ப்பாணத்தில் இந்த வாரம் நடத்தப்படவிருந்த செயலமர்வு, வடமாகாண ஆளுநரின் அனுமதி கிடைக்காமையால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படு கின்றது.

உள்ளூராட்சி நிறுவனங்களின் கட்டமைப்பு மற்றும் சபைக் கூட்டங்கள் தொடர்பிலான சட்டவிதிகள் பற்றிய செயலமர்வு, இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேள னத்தால் யாழ்ப்பாணத்தில் இந்த வாரம் நடத்தப்பட இருந்தது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்களுக்கு இந்தச் செயலமர்வு நடத்தப்படவிருந்தது.

யாழ். மாவட்டத்தில் 5 இடங்களில் இந்தச் செயலமர்வு இன்று முதல் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் வடமாகாண பிரதம செயலாள ரால் இந்தச் செயலமர்வு நடத்துவதற்கு வடமாகாண ஆளுநரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தல் கடிதம் ஒன்று ஏற்பாட்டாளர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

அதன் பின்னர் ஏற்பாட்டாளர்களால் வடமாகாண ஆளுநரின் அனுமதிக்காக விண்ணப்பிக்கப்பட்டது. இதன்போது வடமாகாண ஆளுநர், தன்னிடம் அனுமதியைப் பெற்ற பின்னரே நிகழ்வு நடத்துவதற்கான திகதியைத் தீர்மானித்திருக்க வேண்டும் என்றும் திகதியைத் தீர்மானித்த பின்னர் நிகழ்வு நடத்துவதற்கான அனுமதியைக் கோரக் கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் நிகழ்வை ஒத்திவைத்துள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ம-5)

# ஸ்ரான்லி அதிபர் நியமனத்தில் பாரபட்சமா? மனித உரிமை ஆணைக்குழுவில் விசாரணை

## நாளை மறுதினம் நடக்குமென இணைப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.22

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் (ஸ்ரான்லிக்கல்லூரி) அதிபர் நியமனத்தில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது என்று யாழ். சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை அதிபர், இலங்கை மனித உரிமைகள் ஆணையக் குழுவின் யாழ். பிராந்தி யக் கிளையில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் குறித்த விசாரணை நாளை மறுதினம் வியாழக் கிழமை இடம்பெறவுள்ளது..

யாழ்.பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் அதிபர் வெற்றிடத்துக்கு கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. இதற்கமைய புதிய அதிபராக பெரிய புலம் மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றியவர் நியமிக்கப்பட்டார்.

தனக்கு வழங்கப்பட வேண்டிய அதிபர் நியமனத்தை பாரபட்சமான முறையில் கல்வி அமைச்சின் செயலாளர் வேறொருவருக்கு வழங்கியுள்ளார் என்று தெரிவித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையில் சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை அதிபர் முறைப்பாடு செய்திருந்தார்.

இதுதொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலனிடம் மனித உரிமை ஆணைக் குழுவால் விளக்கம் கோரப்பட்டிருந்தது.

கல்வி அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட விளக்கத்தை முறைப்பாட்டாளர் ஏற்றுக் கொள்ள மறுத்து விசாரணைக்கு மனித உரிமை ஆணைக் குழுவை கோரியிருந்தார். விசாரணைக்கான கோரிக்கை சரியானது என்று மனித உரிமை ஆணைக்குழு இனங்கண்டமையால் நாளை மறுதினம் 24 ஆம் திகதி விசாரணை நடத்த தீர்மானிக்கப் பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.(ம-5)

# கணினி வள நிலையங்களை திறப்பதற்கு நடவடிக்கை

நல்லூர் பிரதேச செயலர் பிரிவின் ஜே/114 திருநெல்வேலி மத்தி வடக்கு, ஜே/118 கோண்டாவில் மத்தி கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் கணினி இணையத் தள வசதிகளை ஏற்படுத்தி மக்கள் அந்த அறிவைப் பெறக் கூடியதாக இரண்டு நிலையங்களைத் திறந்துவைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் இந் தத் தகவலைத் தெரிவித்தார்.

அறிவகம் என்ற பெயரில் இந்த நிலையங்கள் மக்களுக்கு உதவவுள்ளன. குறைந்த கட்டணத்தில் இந்த வசதி கிடைக்கிறது.

அரசின் நனசவித திட்டத்தின் மூலம் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் இது போன்று அறிவகங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

# புனரமைக்கப்பட்ட வீதிகளின் குறைபாடுகள் பற்றி ஆராய்வு

வலி.தென்மேற்கு,ஜன.22

மக்களின் முறைப்பாட்டை அடுத்து வலி.தென்மேற்கு பிரதேசத்தில் 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் பல இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ள இரு வீதிகளை உள்ளூராட்சித் திணைக்களத்தைச் சேர்ந்த இரு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் நேரில் சென்று பார்வையிட்டு வீதிகளில் உள்ள குறைபாடுகளை அறிந்து கொண்டனர்.

வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் நவாலியில் உள்ள சின்னப்பா வீதியும், சண்டிலிப்பாயிலுள்ள ஆலங்கேணி பாடசாலை வீதியும் 2011 ஆம் ஆண்டு நெல்சிப் திட்டத்தின் கீழ் பல இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டன.

இரு வீதிகளிலும் உள்ள குறைபாடுகள் குறித்து இந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் பிரதேசசபை உறுப்பினர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

உறுப்பினர்கள் மேற்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து உள்ளூராட்சித் திணைக்களத்தைச் சேர்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பிரதேசசபை உறுப்பினர் சே.கௌரிகாந்தன், கிராம உத்தியோகத்தர் ஆகியோர் நேரில் சென்று மேற்படி வீதிகளைப் பார்வையிட்டனர்.

வீதிகளில் உள்ள குறைபாடுகளை அவதானித்த அதிகாரிகள் இது சம்பந்தமான அறிக்கையைப் பிரதேச சபைக்கு அனுப்பி வைக்கவுள்ளனர் எனவும் கூறப்பட்டது. (ம-115)

# நோயாளியை 'வண்டியில்' கொண்டு செல்வதற்கு ஊழியர் மறுப்பு; கைத்தாங்கலாக விடுதிக்கு

## யாழ். போதனா வைத்தியசாலையில் சம்பவம்

யாழ்.போதனா வைத்திய சாலையில் நோயாளியை தள்ளு வண்டியில் இருத்தி விடுதிக்கு கொண்டு செல் லும் ஊழியர் அவரது பணியைச் செய்ய மறுத்ததால் இரண்டு கால்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்த வயோதிப பெண்ணை கைத்தாங்கலாக நடத்திக் கூட்டிச் செல்ல வேண்டிய அவல நிலை ஏற்பட்டது.

இந்தச்சம்பவம் கடந்த புதன் கிழமை காலை 7.30 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

நாவற்குழியைச் சேர்ந்த பிரஸ்தாப வயோதிப பெண் இரண்டு கால்களிலும் கடுமையாக நோய்வாய்ப்பட்டதால் அவரை யாழ். போதனா வைத்தியசாலை விடுதியில் வைத்து சிகிச்சை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

எழுந்து நடக்க முடியாத அளவுக்குக் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்த அவர் ஒட்டோவில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டார். அங்கு வெளி நோயாளர் பிரிவில் உள்ள மருத்துவரால் பரிசோதிக்கப்பட்டு 23 ஆம் இலக்க விடுதியில் அனுமதிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

அவரை நான்கு மாடிக் கட்டடத் தொகுதியிலுள்ள 23 ஆம் விடுதிக்கு கொண்டு செல்ல வெளிநோயாளர் பிரிவில் நின்றிருந்த ஊழியரிடம் கூறப்பட்டது. வெளிநோயார்களையும் ஏற்றிச் செல்லாது நின்றிருந்த குறித்த ஊழியர் தள்ளு வண்டியில் கொண்டு செல்ல முடியாது என்று கூறி விட்டார். அதற்கு நோயாளியின் மகன். சரிபரவாயில்லை தள்ளு வண்டியைத் தாருங்கள் கொண்டு சென்று இறக்கி விட்டு மீண்டும் கொண்டு வந்து தருகிறேன் என்று கூறியும் ஊழியர் சம்மதிக்கவில்லை.

தனது அடையாள அட்டையை எடுத்து அந்த ஊழியரிடம் கொடுத்து ''இதனை நீர் வைத்திரும் நோயாளியை விடுதியில் இறக்கிவிட்டு வந்து மீள வாங்கிக் கொள்கிறேன்'' எனக் கூறி வண்டியைக் கேட்ட போதும் ஊழியர் அதற்கும் சம்மதிக்கவில்லை.

வேறு வழியின்றி நோயாளியான வயோதிபப் பெண்ணின் மகனும் மகளுமாக இரண்டு பக்கமும் நின்று கைத்தாங்கலாக நடத்திக் கூட்டிச் சென்றனர். இடைவழியில் நடக்க முடியாது அந்த நோயாளி சரிந்து விட்டார்.

அந்தநேரம் அந்த வழியே சென்ற பெண் மருத்துவர் ஒருவர் அதற்கான காரணத் தைக் கேட்டு விட்டு வெளி நோயாளர் பிரிவுக்கு தகவல் வழங்கியுள்ளார். வெளிநோயாளர் பிரிவில் ஏற்றிச்செல்ல முடியாது என்ற ஊழியர் குறித்த நோயாளி விடுதியை அண்மிக்கும் தறுவாயில் வண்டியுடன் வந்து, தான் கொண்டு சென்று விடுவதாகக் கூறினார்.

தேவை நிறைவடைந்த பின்னர் தள்ளுவண்டிக்கு அவசியமிருக்கவில்லை. நாளாந்தம் இது போன்று எத் தனை நோயாளர்கள் பாதிக் கப்படுகிறார்களோ தெரியாது என்று கண் கலங்கினார் குறித்த நோயாளியின் மகன். இது தொடர்பில் வைத்தி யசாலைப் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜாவுடன் தொடர்பு கொண்ட போது:-

ஊழியர் பற்றாக்குறை நிலவுகிறது. அதிக நோயாளர் வருவதால் உரிய நேரங்களில் உதவ முடியாத நிலை ஏற்படலாம். ஆனால் வேறு நோயாளர்கள் இல்லாத நேரம் ஊழியர்கள் பணி செய்ய மறுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும். இது போன்ற சந்தர்ப்பங்களில் நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவு வைத்தியரிடம் அல்லது மேற்பார்வையாளரிடம் முறைப்பாடு செய்ய வேண்டும். அப் போது தான் நடவடிக்கை எடுக்கக் கூடியதாக இருக்கும். - என்று கூறினார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரவாதச் சதிச் செயல்களின் பின்னணியில் இந்து அமைப்புகளா?


## உள்துறை அமைச்சரின் கருத்துக்கு பா.ஜ.க. உட்பட எதிரணிகள் கடும் எதிர்ப்பு

டில்லி, ஜன.22

தீவிரவாத சதிக்குப் பின்னணியில் இந்து அமைப்புகள் சில உள்ளன என்று மத்திய அமைச்சர் பேசியதற்கு பாரதீய ஜனதாக் கட்சி உள்ளிட்ட கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இதுகுறித்து மத்திய உள்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டே அளித்த பேட்டியில்-

சம்ஜோதா எக்ஸ்பிரஸ் ரயில் குண்டுவெடிப்பு, மெக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு, மலோகான் குண்டு வெடிப்பு ஆகிய சம்பவங்கள் இந்து அமைப்புகளின் பயங்கரவாத செயல்களால் தான் ஏற்பட்டுள்ளன. அவர்கள் தான் முகாம்களை அமைத்து இவ்வாறான சதி செயல்களில் ஈடுபட்டுள்ளனர். இதுதொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளில் இது தெரியவந்துள்ளது- என்றார்.



இதேவேளை அவரின் கருத்துக்கு பா.ஜ.க. கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. கட்சியின் செய்தித் தொடர்பாளர் முக்தர் அப்பாஸ் நக்வி கூறுகையில்-

மத்திய அமைச்சரின் பேச்சு பொறுப்பற்ற தன்மையைக் காட்டுகிறது. ஷிண்டேவின் கருத்து அபாயகரமானது. ஏற்றுக்கொள்ள முடியாதது. இந்து பயங்கரவாதம் என்ற வார்த்தையை அவர் பயன்படுத்தியது வேதனை அளிக்கிறது. ஷிண்டேவின் கருத்துக்கு சோனியாவும் ராகுலும் மன்னிப்புக்கேட்க வேண் டும் என்று கூறினார்.

இதனிடையே ஷிண்டேவின் கருத்துக்கு காங்கிரஸ் தலைவர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். ஷிண்டேவுக்கு முன்னாள் மத்திய அமைச்சர் மணிசங்கர் அய்யர் ஆதரவு தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சர் அஸ்வினி குமார் கூறுகையில், தீவிரவாதத்துக்கு நிறம் ஏதும் கிடையாது. இதனை சோனியா ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளார் என்றார்.

இதனிடையே தனது கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதைத் தொடர்ந்து ஷிண்டே விளக்கமளித்துள்ளார்.

பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ்., அமைப்புகள், தீவிரவாத பயிற்சி முகாம்களை நடத்தி வருகின்றன. தீவிரவாதத்தை பரப்ப, அந்த அமைப்புகள் முயற்சிக்கின்றன. சம்ஜோதா எக்ஸ்பிரஸ், மெக்கா மசூதி மற்றும் மலோகான் ஆகிய இடங்களில் அவர்கள் தான் குண்டு வைத்தனர். இந்தத் தகவல்கள் எல்லாம் புதிய தகவல்கள் அல்ல; ஏற்கனவே பத்திரிகைகளில் வந்த செய்திகள் தான்-என்றார். (வ)

# மீண்டும் தீவிரமாகின்றது தெலுங்கானா போராட்டம்

## மத்திய அரசுக்கு 28 ஆம் திகதி வரை கெடு

எதிர்வரும் 28 ஆம் திகதிக்குள் தனித்தெலுங்கானா அறிவிக்காவிட்டால் தீவிரப் போராட்டத்தில் குதிப்போம் என்று போராட்டக் குழு அறிவித்துள்ளது.

ஆந்திராவை இரண்டாகப் பிரித்து தனி தெலுங்கானா மாநிலம் அமைக்க வேண்டும் என்கிற கோரிக்கை மீண்டும் வலுவடைந்து வருகிறது. இந்த விவகாரத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதிக்குள் மத்திய அரசு தனது இறுதி முடிவை அறிவிக்கும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. இதனால் தெலுங்கானா, சீமாந்திரா பகுதிகளில் மீண்டும் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் தெலுங்கானா கூட்டு நடவடிக்கை குழு நேற்று ஹைதராபாத்தில் கூடியது. மாநிலத்தில் தற்போது நிலவும் அரசியல் சூழல்கள், மத்திய அரசின் நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. தெலுங்கானா தனி மாநிலம் அமைக்க மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகை யில் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னதாக பல் வேறு போராட்டங்களை நடத்துதல், குறிப்பிட்ட திகதியில் தனி மாநிலம் அமைக்காவிட்டால், காலவரையற்ற போராட்டம் நடத்துதல் என முடிவு செய்யப்பட்டது. (வ)

## மகாராஷ்டிராவில் துப்பாக்கிச் சூடு நக்சல்கள் 6 பேர் உயிரிழப்பு

மும்பை, ஜன.22

மகாராஷ்டிரத்தில் கட்சிரோலி மாவட்டத்தில் பொலிஸாருடன் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் நக்சல்கள் 6 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 2 பேர் பெண்கள் ஆவர்.

குறித்த மாவட்டத்தின் அஹேரி தாலுகாவைச் சேர்ந்த கோவிந்தகான் கிராமத்தில் உள்ள வனப் பகுதியில், பொலிஸ் குழு கடந்த சனிக்கிழமை இரவு, வழக்கமாக நக்சல் தேடுதல் வேட்டை யில் ஈடுபட்டது.

இதன்போது, காட்டுக்குள் பதுங்கி இருந்த நக்சல் தீவிரவாதிகள் பொலிஸாரை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். பொலிஸாரும் எதிர்த் தாக்குதல் நடத்தினர். இரண்டு தரப்புக்கும் அதிகாலை துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றது. இந்தச் சண்டையில் நக்சல் தீவிரவாதிகள் 6 பேர் உயிரிழந்தனர். இதில் இருவர் பெண்கள் ஆவர். 6 உடல்களும் அஹேரியில் உள்ள பொலிஸ் தலைமையகத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

## தொழுநோயாளிகளுக்கு ஊக்கத்தொகை வழங்க அரசு தீர்மானம்

டில்லி, ஜன.22

அரசு மறுவாழ்வு இல்லங்களில் வசிக்கும் தொழுநோயாளிகளுக்கு மாதந்தோறும் ஊக்கத்தொகை வழங்க அரசு திட்ட மிட்டுள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்-

தமிழகத்தில் உள்ள 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் வசிக்கும் தொழுநோயாளிகளின் நலன்கருதி ஒவ்வொருவருக்கும் மாதம் தோறும் உதவித் தொகையாக ஆயிரம் ரூபா வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

மேலும் அவர்களில் 300 பேர்வரையானோருக்கு காலணி வெளிச்சந்தைகளில் இருந்து கொள்முதல் செய்யவும் முதல்வர் உத்தரவிட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. (வ)

## எல்லைப் பகுதியில் ஊடுருவ தயாராகிறது பாகிஸ்தான்

### எச்சரிக்கிறது உளவுத்துறை

டில்லி, ஜன.22

இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் ஊடுருவலுக்குத் தயாராகின்றது என்று இந்திய உளவுத்துறை எச்சரித்துள்ளது.

இந்தியா பாகிஸ்தான் எல்லைக்கோட்டு பகுதியில் கடுமையான பனி பொழிந்து வருகிறது. அங்கு பூச்சியம் டிகிரி குளிர் நிலவும் காலங்களில் பாகிஸ்தான் இராணுவம் எல்லையில் காற்றின் மீது பவுடர் மற்றும் எரிபொருள்களை தூவி பனி மூட்டத்தை அதிக ரிக்கும்.

இதனால் அருகில் இருப்பவர்கள் கண்ணுக்குத் தெரியாத நிலை உருவாகும். இந்த சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு பாகிஸ்தான் எல்லையில் இருந்து சியாட்சின் மலைப்பகுதி வழியாக லஷ்கர் ஈ தொய்பா மற்றும் ஜெய்ஷ் ஈ முகமது தீவிரவாதிகள் இந்தியாவுக்குள் புகுந்து தாக்குதல் நடத்துவது வழக்கம்.

அதுபோன்று இந்திய எல்லைக்குள் ஊடுருவிய தீவிரவாதிகள் சிலரைப் பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர். அவர்களிடமிருந்து ஜேர்மன் தயாரிப்பான எரிபொருள்களை மீட்டனர். அந்தப் பொருள் கள் நீண்ட நேரம் புகையில்லாமல் எரியக் கூடியது ஆகும்.

இதனை அணைத்து மீண்டும் பற்ற வைக்கக் கூடிய தன்மை கொண்டது ஆகும். அவற்றைப் பயன்படுத்தி குளிர்கால மாதங்களில் தீவிரவாதிகள் இந்தியாவுக்குள் ஊடுருவ வாய்ப்புகள் இருப்பதாக உளவுத் துறைத் தகவல்கள் கூறுகின்றன. (வ)



இராமநாதபுரம் ஏ.ஆர்.மருத்துவமனையில் குழந்தைகளுக்கு முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் போலியோ சொட்டு மருந்து வழங்குகிறார்.

## ராகுலுக்கு அருகில் அமர்ந்து அழுதாராம் சோனியா காந்தி

ஜெய்ப்பூர், ஜன.22

''எல்லோரும் எனக்குப் பதவி கிடைத்ததற்காகப் பாராட்டி மகிழ்கிறீர்கள். ஆனால் எனது தாயார் அதை நினைத்து எனது அருகே அமர்ந்து அழுதார்'' என்று ராகுல் தெரிவித்தார்.

ஜெய்ப்பூரில் நடைபெற்ற காங்கிரஸ் சிந்தனைக் கூட்டத்தின் 2 ஆவது நாள் இறுதியில் ராகுல் காந்தியைத் துணைத் தலைவராக தேர்ந்தெடுத்தனர். நேற்று முன்தினம் நடைபெற்ற 3 ஆவது நாள் கூட்டத்தில் அவர் துணைத் தலைவராக உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,



உயர் பதவியானது விஷம் என்பது எனது தாயாருக்குத் தெரியும் என்று ராகுல் காந்தி பேசிய போது காங்கிரஸ் சிந்தனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட தலைவர்கள் உணர்ச்சிவசப்பட்டனர்.

ராகுல் காந்தியின் பேச்சு முழுமையாக உணர்ச்சிகரமாக இருந்தது. குறிப்பாக தனது பாட்டி இந்திரா காந்தி குறித்தும், தாயார் சோனியா காந்தி குறித்தும் அவர் பேசியவை உணர்ச்சிகரமாக இருந்தன. (வ)

## வெளிநாட்டிலுள்ள இந்திய விஞ்ஞானிகளை தாய்நாட்டுக்கு அழைக்க அரசு நடவடிக்கை

### அவர்களுக்கு விசேட சலுகைத் திட்டங்கள்

டில்லி, ஜன.22

வெளிநாடுகளில் ஆராய்ச்சி பணிகளை மேற்கொள்ளும், இந்திய விஞ்ஞானிகளை மீண்டும் தாயகத்தில் பணியாற்ற அழைப்பதற்காக, சில சலுகைத் திட்டங்களை மத்திய அரசு செயற்படுத்த உள்ளது.

இதுகுறித்து மத்திய அரச வட்டாரங்கள் கூறியதாவது;


இந்தியாவைச் சேர்ந்த அதிகமான விஞ்ஞானிகள், வெளிநாடுகளில், பல்வேறு துறைகளில் சிறப்பாக சேவை யாற்றி வருகின்றனர். இவர்களின் சேவையால், அந்த நாடுகள் அதிகளவில் பயன்களைப் பெற்று வருகின்றன. அங்கு சிறந்த பணியாற்றும் இந்திய விஞ்ஞானிகளை, மீண்டும் தாய்நாட்டுக்கு வரவழைக்க அவர்களுக்கு பல்வேறு சலுகைத் திட்டங்களை மத்திய அரசு அறிவிக்கவுள்ளது. இதன்படி வெளிநாடுகளில் பணியாற்றும் இந்திய விஞ்ஞானிகள், குறிப்பிட்ட துறையில், சர்வதேச அளவில், நிபுணத்துவம் பெற்றிருந்தால், அவர்களை நாட்டின் நலனுக்கான ஆராய்ச்சிகளில் பயன்படுத்த முடிவு செய்துள்ளது.-

குறைந்தபட்சம், ஒரு ஆண்டிலிருந்து, அதிக பட்சம் 3 ஆண்டுகள் வரை, இந்த ஆராய்ச்சி நடக்கும். இதற்கு தெரிவு செய்யப்பட்ட விஞ்ஞானிகளுக்கு, ஆண்டுக்கு, 55 லட்சம் ரூபா உதவித் தொகை அளிக்கப்படும்- என்று அரசு அறிவித்துள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யேமனில் டிரோன் தாக்குதல்

### 9 பேர் சாவு



சனா, ஜன.22

யேமனில்அமெரிக்காவின் ஆளில்லா டிரோன் விமானங்கள் நடத்திய தாக்குதலில் 9 பேர் உயிரிழந்தனர்.

தலைநகர் சனாவுக்கு கிழக்கே வாடி அபிதா என்ற இடத்தில் பயங்கரவாதிகள் என்று சந்தேகிக்கப்படும் நபர்கள் சென்ற வாகனம் மீதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அதில் 4 பேர் உயிரிழந்தனர்.

விமானத் தாக்குதலில் அந்தக் கார் தீப்பற்றிக் கொண்டது. இதனால், உயிரிழந்த நான்கு பேரின் உடல்களும் கருகி விட்டன. ஒருவரின் உடல் மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளது. அவர் அல்-குவைதா அமைப்பின் உள்ளூர் தலைவர் இஸ்மாயில் பின் ஜமில் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அதே பகுதியில் மற்றொரு வாகனம் மீது ஆளில்லா விமானம் மூலம் நடத்தப்பட்ட தாக்குதலில் அல்-குவைதா அமைப்பைச் சேர்ந்த ஹமாத் ஹசன் கிரெய்ப் உள்ளிட்ட 5 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.



மாலியில் தற்போது அரச படைகளுக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே கடும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. தீவிரவாதிகளுக்கு எதிராகப் போராடும் மாலி இராணுவத்தினருக்கு உதவியாக பிரான்ஸ் படைகள் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன.

## இத்தாலியின் பிரதமராக இனி பதவியேற்க முடியாது

### கூறுகிறார் பெர்லுஸ்கோனி



இத்தாலியில் இனி நான் பிரதமர் பதவி வகிக்க முடியாது. இவ்வாறு தெரிவித்தார் இத்தாலியின் முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி.

இத்தாலியில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சி வெற்றி பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது. இதுகுறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே பெர்லுஸ்கோனி இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்:

''தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சி வெற்றிபெற்றாலும் நான் பிரதமர் பதவி வகிக்க முடியாது. புதிய பிரதமராக ஆன் ஜெலினோ ஆல்பனோ தான் நியமிக்கப்படுவார்''- என்று தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியில் இத்தாலி சிக்கியிருந்த காரணத்தாலும், வரி ஏய்ப்பு போன்ற குற்றச்சாட்டுகள் உட்பட 18 வயதுக்குட்பட்ட பெண்களிடம் தவறான முறையில் நடந்து கொண்டார் என்பது உட்பட இவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

## பாக். வர்த்தக அமைச்சரின் இந்தியப் பயணம் இரத்து

இஸ்லாமாபாத், ஜன.22

பாகிஸ்தான் வர்த்தகத் துறை அமைச்சர் மக்தும் அமீன் பாகிமின் இந்திய பயணம் பிற்போடப் பட்டுள்ளது என்று தெரியவருகிறது.

இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் இந்திய வீரர்கள் இருவர் பாகிஸ்தான் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்தை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையே பதற்றம் நிலவி வருகிறது.

பாகிஸ்தான் வர்த்தகத் துறை அமைச் சர் மக்தும் அமீன் பாகிம், அரசு முறைப் பயணமாக இந்த மாதம் 27, 28 மற்றும் 29 ஆகிய திகதிகளில் இந் தியாவுக்குப் பயணம் மேற் கொள்ளத் திட்டமிட்டிருந்தார்.

தற்போது இரு நாடுகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை காரணமாக, இந்தியா செல்லும் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சர் மக்தும் அமீன் பாகிம் தெரிவித்துள்ளார்.

## சர்ச்சைக்குரிய தீவு விவகாரம்:

# சீன விமானப் படையினர் எந்நேரமும் உஷார் நிலை

பீஜிங், ஜன.22

ஜப்பானுடனான தீவுப் பிரச்சினை தீவிரமடைந்துள்ள நிலையில், தாக்குதல் நடவடிக்கைகளுக்கு எந்நேரமும் தயாராக இருக்குமாறு தனது விமானப் படைப் பிரிவுகளுக்கு சீன அரசு உத்தரவிட்டுள்ளது.

கிழக்கு சீனக் கடல் பகுதியில் சென்காகு தீவுகள் அமைந்துள்ளன. அவற்றின் நிர்வாகம் ஜப்பானின் கட்டுப்பாட்டில் இருந்தாலும், இத்தீவுகளுக்கு சீனாவும் உரிமை கோரி வருகிறது.

இந்த விவகாரத்தில் இரு நாடுகளிடையே முறுகல் நிலை அதிகரித்து வருகிறது. இந்தச் சூழ்நிலையில் சீன இராணுவம் தனது விமானப் பிரிவின் பயிற்சி உத்திகளை மாற்றத் திட்டமிட்டுள்ளது. அதன்படி, சரக்குப் போக்குவரத்தில் கவனம் செலுத்துவதில் இருந்து விலகி, தாக்குதல் நடவடிக்கைகளுக்குத் தயாராக இருக்கும்படி விமானப் படையின் ஹெலிகொப்டர் பிரிவுகளுக்கு இராணுவம் உத்தரவிட்டுள்ளது.

இந்தத் தகவலை சீன இராணுவத்தின் அதிகாரபூர்வ நாளிதழ் வெளியிட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் இராணுவத்தின் ஹெலிகொப்டர் பிரிவானது நீண்டதூரப் பணிகள், மிகப்பெரிய அளவிலான கடலோர நடவடிக்கைகள், மற்ற பிரிவுகளுடன் இணைந்து தாக்குதல் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளும். தகவல் தொழில்நுட்பங்களின் அடிப்படையில் தனது செயல்பாட்டுத் திறனை மேம்படுத்திக் கொள்ளும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவுகள் தொடர்பான மோதல் அதிகரித்ததில் இருந்து, சீனாவும் ஜப்பானும் தங்கள் இராணுவ பலத்தை அதிகரிக்கும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளன. சமீபத்தில் ஜப்பானிய இராணுவ ஹெலிகொப்டர்கள் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டன. அதைத் தொடர்ந்தே சீனாவும் தனது ஹெலிகொப்டர் பிரிவை உஷார்படுத்தியுள்ளது. சீனா சமீபத்தில் நடத்திய இராணுவப் பயிற்சிகள் அனைத்தும் மேற்கண்ட தீவுகளைக் கைப்பற்றும் நோக்கிலேயே அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முதல் 100 செல்வந்தர்களின் ஓராண்டு வருமானம் உலகின் வறுமையை ஒழிப்பதற்குப் போதுமானது

### ஒக்ஸ்பாம் நிறுவனம் கூறுகிறது

லண்டன், ஜன.22

உலகின் முதல் 100 பணக்காரர்களின் கடந்த வருட வருமானம், உலகில் வறுமையில் இருக்கும் ஏழைகளின் மோசமான நிலையை ஒழிக்க தேவையான தொகையை விட நான்கு மடங்கு அதிகமானது என்று பிரிட்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஒக்ஸ்பாம் தொண்டு நிறுவனம் தெரிவிக்கிறது.

கடந்த வருடத்தில் உலகின் முதல் 100 பணக்காரர்களின் மொத்த வருமானம் 240 பில்லியன் டொலர் ஆகும். அதற்கு மாறாக, உலகில் மிகவும் வறுமையில் இருக்கும் மக்கள் ஒரு நாளைக்கு ஒன்றேகால் டொலருக்குக் குறைவான பணத்திலேயே வாழ்கின்றனர் என்றும் அந்த நிறுவனம் கூறியுள்ளது.

அடுத்த வாரம் சுவிஸில் ஆரம்பமாக உள்ள உலக பொருளாதார மாநாட்டின் முன்னோடியாக நடந்த சந்திப்பு ஒன்றிலேயே ஒக்ஸ்பாம் தொண்டு நிறுவனம் இந்தத் தகவலை வழங்கியுள்ளது.

''ஒரு சிலர் கைகளிலேயே எல்லா பணமும் போய் குவிவது, வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு ஒரு தடையாக இருக்கிறது. உலகின் ஏற்றத் தாழ்வை ஒழிக்க உலகத் தலைவர்கள் காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண் டும். அனைத்து மனித சமூகத்தின் நலனுக்காக உலக பொருளாதார முறைமையில் மாற்றம் வரவேண்டும்.

உலக சனத்தொகையில் ஒரு வீதமான செல்வந்தர்கள், கடந்த 20 வருடங்களில் தமது வருமானத்தை 60 வீதத்தால் அதிகரித்துள்ளனர்.

உலக வரி முறைமைகளில் மாற்றம் செய்யப்படுவதுடன், இலவசமான பொதுச் சேவைகளிலும் சுகவீனமுற்றவர்கள் மற்றும் வேலையற்றவர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் அதிக முதலீடு செய்யப்பட வேண்டும்'' என்றும் ஒக்ஸ்பாம் நிறுவனம் பரிந்துரைத்தது.

## அல்ஜீரியாவில் பாதுகாப்பில்லை எச்சரிக்கிறது அமெரிக்க அரசு

வோஷிங்டன், ஜன.22

அல்ஜீரியாவுக்கு செல்லும் அமெரிக்கர்களுக்கு பாதுகாப்புத் தொடர்பாக அமெரிக்க அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆபிரிக்க நாடான அல்ஜீரியாவில் அண்மையில் தீவிரவாதிகளால், வெளிநாட்டவர்கள் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டிருந்தனர்.

கடத்தப்பட்ட பணயக் கைதிகளில் பிரிட்டனைச் சேர்ந்த நால்வரும், அமெரிக்கர் ஒருவரும் உயிரிழந்தனர். இந்த நிலையிலேயே அமெரிக்க வெளியுறவுத் துறை முன்கண்ட எச்சரிக்கையை விடுத்துள்ளது.

## துப்பாக்கிக்கு தடை நடைமுறைக்கு வருகிறது நியூயோர்க்கில்

நியூயோர்க், ஜன22

துப்பாக்கி கட்டுப்பாடுச் சட்டம் முதன்முறையாக அமெரிக்காவின், நியூயோர்க் மாகாணத்தில் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

அமெரிக்காவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இந்நிலையில், துப்பாக்கிப் பயன்பாட்டை குறைப்பதற்கு, கடுமையான சட்டம் கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கை அமெரிக்காவில் வலுப்பெற்றுள்ளது.

அதையடுத்து குறிப்பிட்ட சிலர் மட்டுமே துப்பாக்கியை வைத்துக்கொள்ளவும், மற்றவர்கள் துப்பாக்கியை கையாள்வதற்கு தடை விதிக்கும் சட்ட வரைவு நியூயோர்க் மாகாணத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. அமெரிக்கா முழுவதும் இதுபோன்ற சட்டத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி ஒபாமா சட்ட வல்லுநர்களுடன் ஆலோசித்து வருகிறார்.

## என்றுமில்லாதவாறு சரிவடையும் சீனப் பொருளாதாரம்

சீனாவின் பொருளாதார நிலை கடந்த 13 ஆண்டுகளில் முதன் முறையாக மிக குறைவான அளவாக, 7.8 சதவீதம் சரிவடைந்துள்ளது.

2010ஆம் ஆண்டு 10.4 சதவீதமாக இருந்த வளர்ச்சி, 2011ஆம் ஆண்டில் 9.3 சதவீதமானது. தற்போது மேலும் சரிவடைந்து 7.8 சதவீதத்துக்கு வந்துள்ளது.

அமெரிக்கா, ஐரோப்பாவில் நிலவும் தொடர் பொருளாதார மந்தமே பொருளாதார சரிவுக்குக் காரணம் என்று கருதப்படுகிறது.

# போர் நிறுத்த அறிவிப்பையும் மீறி மியன்மார் இராணுவம் தாக்குதல்



நைபியத்தௌ, ஜன.22

மியன்மாரின் வடபிராந்தியத்திலுள்ள கெச்சின் ஆயுததாரிகளுடனான போர் நிறுத்தத்தை மீறும் வகையில் தாக்குதல் நடவடிக்கைகளை அந்த நாட்டு இராணுவத்தினர் மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.


கெச்சின் ஆயுததாரிகளுக்கு எதிரான தாக்குதல்கள் நிறுத்தப்படுவதாக அரசு அறிவித்திருந்த நிலையில், அவர்கள் நிலைகொண்டுள்ள முக்கிய மலைப் பகுதியொன்றில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கிளர்ச்சியாளர்களின் தலைமையகங்கள் அமைந் துள்ள சீன எல்லையிலுள்ள லைய்சா என்னும் பகுதியில் இருந்து சில கிலோமீற்றர் தொலைவில் எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமக்கு சுயாட்சி வழங்கப்பட வேண்டுமென கெச்சின் கிளர்ச்சியாளர்கள் போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கும் தாருங்கள் குடிதண்ணீர்...!



இந்தோனேஷியத் தலைநகர், ஜகார்த்தாவில் வெள்ளம் காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். வெள்ளம் காரணமாக அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதில் கடும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் தங்யிருக்கும் மக்க ளுக்கு குடிதண்ணீர் தொண்டு நிறுவனங்களால் வழங்கப்பட்டன.

## பல்கேரிய அரசியல் பிரமுகரை மிரட்டிய துப்பாக்கி இளைஞன்

### மேடையில் உரையாற்றுகையில் சம்பவம்

சேர்பியா, ஜன.22

பல்கேரிய அரசியல் கட்சி தலைவர் ஒருவரை துப்பாக்கி முனையில் மிரட்டிய இளைஞர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

ஐரோப்பிய யூனியனை சேர்ந்த பல்கேரிய நாட்டின் தலைநகர் சேர்பியாவில் அரசியல் கட்சிக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் துருக்கி கட்சித் தலைவர் அகமது டோகன் மேடையில் பேசிக்கொண்டிருந் தார். அப்போது பார்வையாளர் இருக்கையில் இருத இளைஞர் ஒருவர் மேடைக்குச் சென்றார். பேசிக் கொண்டிருந்த அகமது அருகில் சென்றவுடன் தான் மறைத்து வைத்திருந்த கைத்துப்பாக்கியை வைத்து மிரட்டினார்.

உடனே சுதாகரித்துக் கொண்ட பாதுகாவலர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் அந்த இளைஞரை மடக்கிப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இளைஞனின் நடவடிக்கைக்கான காரணம் தெரியவில்லை. தற்போது இளைஞரை விசாரித்து வருகின்றோம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## மேற்குக் கரையில் குடியேற்றங்கள் தொடரும் –நெட்டன்யாகு

ஜெருசலேம், ஜன.22

இஸ்ரேல், மேற்குகரைப் பகுதியிலுள்ள எந்தவொரு யூதக் குடியேற்றங்களும் அகற்றப்பட மாட்டா என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெட்டன்யாகு.

எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் வெற்றிபெற்று அடுத்த பதவிக் காலத்திற்கு தாம் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் இந்த நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

நடை பெறவுள்ள தேர்தலில் பெஞ்சமின் நெட்டன்யாகு இலகுவாக வெற்றிபெறுவார் என கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.

மேற்கு கரை மற்றும் கிழக்கு ஜெருசலேம் ஆகிய பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 100க்கும் மேற்பட்ட குடியேற்றத் திட்டங்களில் சுமார் 5 இலட்சம் யூதர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

1967 ஆம் ஆண்டு பலஸ்தீனத்திடம் இருந்து கைப்பற்றிய குறித்த பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்ட இந்த குடியேற்றத் திட்டங்கள் சட்ட ரீதியற்றது என சர்வதேச சமூகம் குறிப்பிடுகிறது. இஸ்ரேலின் இந்த நடவடிக்கை பலஸ்தீனத்துடனான பேச்சுக்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது.

### பாங்கொக்கில் நடந்த பேரணியில்

## மன்னரை அவமதித்த நடிகருக்குச் சிறை

பாங்கொக், ஜன.22

தாய்லாந்து அரச குடும்பத்தை விமர்சித்த நகைச்சுவை நடிகர் ஒருவருக்கு இரண்டாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்தில் மன்னராட்சி நடைபெற்றுவருகி றது. தற்போது பூமிபால் அதுல்ய தேஜ் மன்னராக உள்ளார்.

இவர் 2009ஆம் ஆண்டு முதல், உடல் நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இவர் மீது தாய்லாந்து மக்கள் மிகுந்த அன்பும், மரியாதையும் வைத்துள்ளனர்.

இந்தநிலையில், 2010 ஆம் ஆண்டு, தலைநகர் பாங்கொக்கில் நடந்த கண்டன பேரணியில் அந்நாட்டு நகைச்சுவை நடிகர் யொசாவரிஸ் சக்லோமி கலந்து கொண்டு மன்னர் குடும்பத்திற்கு எதிராக கோஷங்களை எழுப்பினார்.

இதையடுத்து, அவர் மீது, வழக்கு தொடரப்பட்டது. விசாரணைகளின் முடிவில் அவருக்கு. இரண்டாண்டு சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

## பிரேஸிலில் துப்பாக்கிச் சூடு 3 பேர் சாவு; 3 பேர் படுகாயம்

### நடனப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளையில் சம்பவம்

பிரேஸிலா, ஜன.22

மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாதவர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் உயிரிழந்தனர். 3 பேர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவம் பிரேஸிலில் இடம்பெற்றுள்ளது. உயிரிழந்த அனைவரும் 14 முதல் 19 வயதுக்குட்பட்டவர்கள் என்று கூறப்படு கிறது.

நடனப் பள்ளி ஒன்றில் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இளைஞர்கள் மீதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிரேஸிலின் பாரம்பரிய மிக்க சம்பா திருவிழா சாவ் ஜோவோ டெல்ரேய் நகரில் அடுத்த மாதம் நடைபெற உள்ளது. அதைமுன்னிட்டே இவர்கள் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தனர்.

மோட்டார் சைக்கிள்களில் வந்த நான்கு பேரே பயிற்சியில் ஈடுபட்டிருந்த இளைஞர்களை நோக்கி சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

அதில் 3 பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். 3 பேர் படுகாயம் அடைந்தனர்.

இது தொடர்பாக 4 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு முன் விரோதம் காரணமாக இருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.


### தவறிவிட்டது

முத்தட்டுமட ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வராசா பிரகாஸ் என்பவரது தேசிய அடையாள அட்டை (821204470V) சாரதி அனுமதிப் பத்திரம், மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் மற்றும் சிறுதொகைப் பணம் என்பன அடங்கிய பேஸ் 20.01.2013 அன்று கோண்டாவில் சந்திக்கும் திருநெல்வேலிக் கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள்கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

077 540 8208, 077 963 9175 நாகபூசணி அம்மன் வீதி, கோண்டாவில் கிழக்கு. (26566)(5.6.7)

### விற்பனைக்கு

டீப்பிறிசர், கதிரை, பா(f)ன், தீ அணைத்தல் உபகரணம், T.V போன்றன விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 0772720103. (26573) (6.7.4)

### TV கள் மலிவு விற்பனை

மிக மிக மலிவு விலையில் SONY Wega Flat TV கள் 21"-13000/=, 29"-16000/=, பைனியர் அம்பிளிபயர், Box வகைகள், DVD என்பன

தொடர்பு:0770440570 (அப்பளம்)

சோனி ரேடர் சென்ரர் (கொமசல் வங்கி எதிரில்)

56, K.K.S வீதி, சுன்னாகம். (28388) (5.6.7)

### தவறிவிட்டது

தொட்டியடி, விசுவமடு விவசாய ப.நோ.கூ சங்கத்தில் பணியாற்றி வரும் கணபதிப்பிள்ளை ஜெகதீபன் என்பவருடைய வருமான பற்றுச் சிட்டைகளும் திரும்பிய காசோலைகளும் நாள் குறிப்பேடு, இலங்கை வங்கி கணக்கு புத்தகம் ஆகியவற்றுடன் சிறிய ரக சூட்கேசுடன் பரந்தன் சந்திக்கும் விசுவமடுவுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் விசுவமடு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கொடுத்துதவவும்.

தொட்டியடி, விசுவமடு. தொடர்பு- 0772002367, 0243248307 (26150)(6.7.1)

### தவறி விட்டது

மோட்டார் சைக்கிளின் NP-WC-9448 என்ற இலக்கத் தகடு மருதனார் மடத்துக்கும் யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் 021 2240174 என்ற தொலை பேசியுடனோ அல்லது சாந்தநிகேதன், உடுவில் கிழக்கு, சுன்னாகம் எனும் முகவரியுடனோ தொடர்பு கொள்ளவும். (26577) (6.7.4)

### இசையமைப்பு, ஒலிப்பதிவு

புதிய பக்திப் பாடல்கள், பாடசாலைக் கீதங்கள் இசையமைத்து தரமாக ஒலிப்பதிவு செய்து தரப்படும்.

ஸப்தஸ்வரம் இசை ஒலிப்பதிவு கலையகம் கல்வியங்காடு

தொடர்பு- இசையமைப்பாளர்- ஸ்ரீதுகன்

T.P-0776980573 (28575)(6.7.11)

### THE HALO TRUST

### ரிப்பர் ட்ரக் (Tipper Truck) சாரதிகளுக்கான பதவி வெற்றிடம்

ஹெலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவை தளமாகக் கொண்டு உலகளாவியரீதியில் 10 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதி வெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக்கொண்டிருக்கின்றது.

ஹெலோ ட்ரஸ்ரின் எதிர்கால வேலைக்காக ரிப்பர் ட்ரக் சாரதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அனைத்து விண்ணப்பதாரிகளும் AD ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிவரக் கோவை மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய விவரங்களுடன், அனுபவமுள்ளவர்கள் தங்கள் விவரங்களை கீழ் உள்ள முகவரிக்கு சமர்ப்பிக்கவும்.

அனைத்து விண்ணப்பங்களும் 25 .01. 2013 வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஹெலோ ரஸ்ட்,

450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி. (26301)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 10.04.1934

விண்ணில் 23.12.2012

யாழ். கந்தர் மடத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியா இறம்பைக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் செந்திநாதன் கணேசன்

எமது அன்புத் தந்தையின் மரணச் செய்தி அறிந்து நேரில் வந்து உதவி செய்த அனைத்து உறவினர், நண்பர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (22.01.2013) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரது மரணச் செய்தியை உரியநேரத்தில் வழங்க முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம்.

(மகன்) வவுனியா, 024 2222517

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### விற்பனைக்கு

Communication இக்கு தேவையான Telephone booth, Fitting, Computers, Phone and Computer Accerceries, Photo Copy machine போன்ற பல பொருள்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 674, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

077 8036293, 0778531032. (28499)(6.7.4)

### 2 ஆம் வருட நினைவஞ்சலி

அமரர் நடராசா இரங்கநாதன்



மறைவு 15.01.2011

திதி: பூர்வ பட்ஷ ஏகாதசி

ஆண்டு இரண்டு சென்றாலும்
அன்பான வார்த்தைகள் என்னை
வழி நடத்தும் இனி வரும் காலங்களும்
அன்பான வார்த்தைகளால் கழித்திடுவேன்

29/21, உடையார் ஒழுங்கை, ஐயனார் கோயிலடி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.

அன்பு மனைவி.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உயர் மனிதனை உருவாக்கும் குணங்கள்

(02)

வாழ்வை நாம் உற்சாகமாகவும் வாழலாம். வருத்தப்பட்டு அழுதுகொண்டும் வாழலாம். அது நம் முன் உள்ள வாய்ப்பு. நாம் உற்சாகமாகப் பேசினால் எதிரில் இருப்பவர் உற்சாகமடைகிறார். மீண்டும் உங்களுடன் பேச, பழக ஆசைப்படுகிறார். அழுது கொண்டோ, அல்லது அதிகாரத்துடனோ, ஆணவத்துடனோ பேசும் போது எதிரில் உள்ளவர்களை இழக்கிறீர்கள். எந்த நல்ல குதிரையையும் சரி, நீங்கள் உற்சாகமில்லாது விற்க முயன்றீர்களானால் வாங்குபவர்களுக்குச் சந்தேகம் வந்துவிடும். வாழ்வில் உற்சாகமான மனோபாவத்தை எதிலும் கடைப்பிடிக்க முயல வேண்டும்.

மூன்றாவதாகச் செயல். எதையும் செய்தால் ஒழிய பலன் விளையாது. நமது நாட்டில் ''மந்திரத்தால் மாங்காய் விழும்'' என்று நம்புபவர்கள், அதிசயங்களை எதிர்பார்ப்பவர்கள். லொட்டரிச் சீட்டை நம்பி வாழ்பவர்கள் அதிகமோ என்றொரு சந்தேகம் எனக்கு. நாட்டில் ஊழல், லஞ்சம், அநியாயம் அதிகமாகிவிட்டது என்று புலம்பும் அளவுக்கு, 'இந்த உபயோகமற்ற அரசாங்கத்தை நாம் தூக்கி எறிய வேண்டும்' என்று கருதிச் செயற்படும் திறன் நம் மக்களுக்கு இல்லை. செயல்கள்தான் சாதனைகளை விளைவிக்குமே தவிர, வெறும் ஆசைகள் சாதிக்காது; வெறும் வாய்ப்பேச்சு எதையும் சாதிக்காது. பகவத் கீதையைப் படித்தீர்களானால் கருமம், செயல் என்று செயலைப்பற்றிய விளக்கம்தான் அது. நீதியை நிலைநாட்ட பாண்டவர்கள் போரிடவில்லை என்றால், வில்லையும் அம்பையும் எடுத்துக்கொண்டு வேகமாகச் செல்லும் தேரில் புறப்படவில்லை என்றால் வெற்றி எப்படி வந்திருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்.

இந்த உலகில் இன்று நாம் பார்க்கும் இத்தனை பொருள்களும் உணவு, உடை, வீடு, கார், டெலிபோன், விமானம், டெலிவிஷன் என்ற இத்தனை பொருள்களும் மனிதனின் செயற் திறத்தால் விளைந்த விடயங்கள், வெறும் ஆசையால் மட்டுமல்ல. இதை நீங்கள் சொல்ல விரும்பினால் தலையிலடித்துச் சொல்லுங்கள். கன்னத்தில் அறைந்து சொல்லுங்கள்.

தமிழ்ச் சமுதாயம் தன் பயத்தைப்போக்கி, சுயநலத்தையும் சுயவாழ்வு வாழ்வதையும் மீறி தியாக உள்ளத்துடன், செயல்புரிய முன்னுக்கு வந்தால் அன்றி அதற்கு விமோசனம் கிடையாது. நமக்குத் தெளிவான அறிவு வேண்டும், முடியும் என்ற உற்சாகமான மனோபாவம் வேண்டும். பலன் விளைவிக்கும் செயல் வேண்டும்.

இவ்வாறெல்லாம் தமது கருத்துக்களைக் கூறி நிறுத்தினார் டாக்டர் பரஞ்சோதி. பிட்டுக்கு மண் சுமந்த கதையில் இறைவன் மேல் அடித்த அடி சுரீர் என்று எல்லோருக்கும் விழுந்ததைப் போல, பரஞ்சோதியின் அடி என்மீது விழுந்தது. உங்கள் மீது?

**சராசரி நிலையிலிருந்து மாமனித நிலைக்கு...**

மனவியல் அறிவில் ஒரு மகத்தான சிந்தனையாளர் மாஸ்லோ.

மற்றெல்லா மாணவர்களாலும் சேர்த்துக் கொள்ளப்படாத ஒரு யூத குடும்பத்து இளைஞராகக் கல்வியைத் தொடங்கினார் மாஸ்லோ. யூதர்களை அவ்வளவு தூரம் ஒதுக்கி வைத்தார்கள் அந்தக் காலத்தில். விஸ்கான்சின் பல்கலைக்கழகத்தில் புகழ்பெற்ற மனவியல் பேராசிரியரான வாட்சனிடம் படித்தார் மாஸ்லோ. அங்கே டாக்டர் பட்டம் பெற்றார். மனிதனது குணங்கள் எல்லாம் மனிதனது பழக்கவழக்கங்களிலிருந்து பிறந்தவை, பழக்கங்களை மாற்றினால் குணங்களை மாற்றி விடலாம் என்ற அடிப்படையில் பிறந்தது வாட்சனின் அணுகு முறை.

வாட்சனுடைய கொள்கைக்கு முன் பிராய்டின் கொள்கைகள் மனவியலை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன. மனவியல் அறிவை ஒரு பாடமாக ஒழுங்குபடுத்தத் தொடங்கியவர் பிராய்டு எனலாம். ஆகவே பிராய்டை 'மனவியலின் தந்தை' எனக் குறிப்பிடுகிறார்கள்.

பிராய்டு முக்கியமாக இரண்டு விடயங்களைக் குறிப்பிட்டார். எப்படியாவது வாழ்ந்துவிட வேண்டும் என்ற உயிர்த் துடிப்பும், தனது பாரம்பரியத்தை உருவாக்கிச் செல்லும் ஜீவத்துடிப்பும், அதனால் விளையும் உடலுறவு நாட்டமும் மனித வாழ்வை இயக்குகின்றன என்று சொன்னார்.

அத்துடன் மனிதனுக்கு உணர்வுகளை வெளிப்படுத்தும் அடங்காத வெறி ஆழ்மனத்தில் தங்கி இருப்பதாகவும், அது புற உலகில், மனித சமுதாயத்தினால் ஏற்படுத்தப்பட்ட சட்ட திட்டங்களை மீறத் துடிப்பதனால் ஒரு நிரந்தரப் போராட்டம் மனிதனுக்குள் சதா நிகழ்ந்து கொண்டிருப்பதாகவும் சொன்னார்.

அவர் கூறியவற்றில் எவ்வளவோ உண்மைகள் இருக்கின்றன. இதன் விளைவாகப் பின்னால் வந்த மனவியல் அறிஞர்கள் மனிதனது போராட்டங்களை- அவனது கவலையை, துக்கத்தை, கோபத்தை, விரக்தியை ஆராயத் தொடங்கினார்கள்.

பிராய்டு ஓர் 'ஒரிஜினல்' சிந்தனையாளர். எதையும், ஏன்? எப்படி? என்று மூலத்திற்கே சென்று விவாதித்து பழைய கருத்துக்களைப் பாராட்டாமல்-கவலைப்படாமல் துணிவாகத் தன் வழியில் சென்றவர். பின்னால் வந்தவர்களில் பலர் அவர் அடியொற்றி மனிதனது அதீத நிலைகளை ஆராய்ந்தார்கள். பிராய்டை ஏற்றுக்கொண்டு அதே வழியில் சென்றார்கள்.

இந்தக் கட்டத்தில்தான் மாஸ்லோ வந்தார். ''மனிதர்களது மனநோய்களை ஆராய்வதனால் முதலில் நாம் ஆரோக்கியமான மனம் எப்படி இருக்கிறதென்று அறிந்துகொள்ள வேண்டும். அதன் இயல்புகள் என்ன? அது எப்படி இயங்குகிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். மனிதர்களிடம் உள்ள சிறந்த இயல்புகளை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

எம்.எஸ்.உதயமூர்த்தி (தொடரும்)

# எமது சிறார்களின் போஷாக்கை அதிகரிக்க தொண்டு நிறுவனங்களை அமைக்க வேண்டும்

## புலம்பெயர் உறவுகள் உதவக் கோருகிறார் நா.உ.

பளை, ஜன.22

சிறார்களின் போஷாக்கை அதிகரிக்க தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஒவ்வொரு பிரதேசத்திலும் அமைக்க வேண்டும். இதற்கு வெளிநாடுகளில் வாழும் எமது உறவுகள் முன்வர வேண்டும்.

அவ்வாறான எண்ணங்களை லண்டனில் உள்ள பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த எமது உறவுகளைப் போல ஏனைய நாடுகளில் உள்ள எமது உறவுகளின் ஒத்துழைப்புக் கிடைப்பின் எமது வருங்காலச் சந்ததியினர் போஷாக்கின்மையால் பாதிக்கும் நிலை ஏற்படாது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தைப்பொங்கல் விழா பளை முல்லையடியில் உள்ள பச்சிலைப் பள்ளி அபிவிருத்திப் பேரவையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முருகேசு சந்திரகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தரம் ஒன்றில் மாணவர்களை இணைக்கும் கால்கோள் விழாவில் 3 ஆயிரம் மாணவர்கள் புதிய மாணவர்களாக இணைந்து கொண்டனர். இவர்களில் பளைப் பிரதேச பாடசாலைகளில் இணைந்த மாணவர்கள் தவிர்ந்த ஏனைய பிரதேச பாடசாலைகளில் இணைந்த மாணவர்கள் போஷாக்கின்மையினால் பாதிக்கப்பட்ட சிறார்கள் என்றும், பளைப் பிரதேச பாடசாலைகளில் இணைந்த மாணவர்கள் போஷாக்கு குறைந்த நிலையில் காணப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பளைப் பிரதேசத்தில் உள்ள முன்பள்ளிகளுக்கு பச்சிலைப் பள்ளி அபிவிருத்திப் பேரவையினால் வழங்கப்பட்ட சத்துணவுகளால் பிரதேச சிறார்கள் முன்னிலை பெற்றுள்ளனர். பேரவையின் இவ்வாறான முன்னோடித் திட்டம் குறித்து மகிழ்வடைவதுடன் இதனை முன்னின்று நடத்தும் லண்டனில் உள்ள பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தினரையும், அதன் கிளை நிறுவனமான பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையினரையும் பாராட்டுகின்றேன்.

இதேபோன்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்களையும் ஒவ்வொரு பிரதேசத்திலும் நடத்த புலம்பெயர் வாழ் எம் உறவுகளை இத்தருணத்தில் கேட்டுக் கொள்கின்றேன்.

தரம் ஒன்றில் கடந்த வெள்ளிக்கிழமை இணைந்த கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சிறார்கள் போரினால் இடம்பெயர்ந்த வேளைகளில் நலன்புரி நிலையங்களில் பிறந்தவர்கள். இவர்கள் தாய்ப்பாலைத் தவிர்ந்த சிறந்த போஷாக்கு உணவுகளை அருந்தாமையால் மிகவும் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தற்போது வசிப்பவர்களை விட, அதிகமான தமிழ் உறவுகள் வெளிநாடுகளில் உள்ளனர். அவர்களில் பலர் பெரும் வசதிகளுடன் வாழ்கின்றனர். இந்த உறவுகள் தமது பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார செயற்பாடுகளை விருத்தி செய்ய முன்வர வேண்டும்.

எமது பிரதேசத்தில் இன்று முக்கிய தேவையாக உள்ளவை இளைஞர், யுவதிகளுக்கான தொழிற் பயற்சியே. தொழிற்பயிற்சி நிலையங்கள் எமது பிரதேசங்களில் இல்லாமையால் எமது இளைஞர், யுவதிகள் அரச, தனியார் நிறுவனங்களில் தொழில் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். படித்த அனைவருக்கும் அரசினால் வேலைவாய்ப்பு வழங்க முடியாத நிலை உருவாகியுள்ளது. இதனைப் போக்க ஒவ்வொரு பிரதேசத்திலும் பல்வேறு வகையான தொழில் பயிற்சி நிலையங்கள் வெளிநாடுகளில் வாழும் எமது உறவுகளின் ஆதரவுடன் பிரதேச இளைஞர், யுவதிகளுக்கு தொழிற் பயிற்சிகளை வழங்கினால் அவர்கள் தமது சொந்தக் காலில் நிற்கக் கூடிய சுய தொழில்களை மேற்கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த முடியும். -என்றார். (எ-9)



வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா கடந்த வெள்ளிக்கிழமை புதுக்குளம் பண்டிதமணி கணபதிப்பிள்ளை வித்தியாலயத்தில் நடைபெற்றது. பாடசாலையின் அதிபர் செல்வி சி.ஜெயந்தினி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி பராசக்தி கணேசலிங்கம் கலந்து கொண்டார். சிறார்கள் மற்றும் விருந்தினர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்படுகின்றனர். (ம-422)

# சின்னத்திரை மோகத்தில் பெண்கள்; கேள்விக்குறியாக எதிர்காலம்

## விருது வழங்கும் நிகழ்வில் உரை

யாழ்ப்பாணம், ஜன.22

இன்றைய காலகட்டத்தில் பெண்களும் சிறுவர்களும் சின்னத்திரை மோகத்தில் மூழ்கியுள்ளனர்.

இதனால் வாழ்க்கைச் சுமையைச் சுமப்பதோடு அவர்களின் எதிர்காலமும் கேள்விக்குறியாகி விடுகிறது என்று நவாலி முருகானந்தா சனசமூக நிலையத் தலைவர் எஸ். மகேந்திரன் தெரிவித்தார்.

28 ஆவது அரச விருது வழங்கும் விழாவில் கலாபூஷணம் விருது பெற்ற நவாலியூரைச் சேர்ந்த க.நடேசன், க.சரவணபவன் ஆகியோரும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தேசியமட்டத்தில் 10ஆம் இடம் பெற்ற செல்வி தம்பிமுத்து ரமேஷ் நிதூசிக்காவுக்கும் விருது வழங்கும் நிகழ்வு முதியோர் சங்க தலைவர் க.பவுலின் தலைமையில் நவாலி முருகானந்தா மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக சனசமூக நிலையத் தலைவர் கலந்து கொண்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

எமது சமூகத்தில் பல்வேறு நிகழ்வுகளிலும் நிகழ்ச்சிகளிலும் கல்வி, ஒழுக்கம், வாசிப்பு, நற்சிந்தனை, ஆன்மிகம் தொடர்பாக எடுத்துக் கூறப்படுகின்றது.

எனினும் எமது சமூகத்தில் ஒழுக்கக்கேடான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இன்று நவீன சாதனங்களின் பாவனையால் ஒழுக்கக்கேடான சம்பவங்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

எனவே காலங்கள் மாறினாலும் சமுதாய ஒழுக்கத்தில் நாம் மாறுபடக் கூடாது. இன்றைய மாணவர்களைச் சிறந்த வழிகாட்டிகளாக மாற்றி அமைக்க சகலரும் முன்வர வேண்டும்.

குறிப்பாக பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களின் கல்வி நலனுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற அதே வேளை மாணவர்களின் ஒழுக்கத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்க முன்வர வேண்டும் - என்றார்.

சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட வேலணை பிரதேச சபை செயலாளர் செ.ரமேஷ் நவாலி ஹேமலதா ஞாபகார்த்த நிதியத்தின் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். (எ-41)

# நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜன.22

கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு கடந்த 13 ஆம் திகதி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

தலைவராக செல்லையா மயூரன், உபதலைவராக கனகலிங்கம் மயூரன், செயலாளராக நித்தியானந்தன் கரன், உபசெயலாளராக துரைசிங்கம் சிறிகரன், பொருளாளராக பொன்னுச்சாமி கஜேந்திரகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (எ-14)

# புதிய அதிபர் பதவி ஏற்பு

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம. வித்தியாலயத்தின் புதிய அதிபராக தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய திருமதி வாசுகி தவபாலன் கடந்த வெள்ளிக்கிழமை பதவியேற்றுள்ளார்.

இந்தப் பாடசாலையின் அதிபராக கடமையாற்றிய பொ.சிவானந்தராசா வேலணை கோட்டக் கல்வி அதிகாரியாக பதவி உயர்வு பெற்றதை அடுத்தே திருமதி வாசுகி தவபாலன் பாடசாலையின் புதிய அதிபராக நியமிக்கப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். (ம-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே சென்றது யாழ்....?

■ வெ.அற்புதன்



இசை இனிமை பயப்பது, கேட்பவரைத் தன் வயப்படுத்தும் இயல்புடையது. பண்டைத் தமிழகத்தில் வேட்டைச் சமூகத்திலேயே இசை தோன்றியிருந்தாலும் உற்பத்திச் சமூகமே இசையின் வளர்ச்சிக்கு வழிவகுத்தது. பொதுவாக இசையைத் தோற்றுவிக்கும் கருவிகளைத் தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக் கருவி, மிடற்றுக் கருவி என்று வகைப்படுத்தியுள்ளனர். இவற்றில் நரம்புக்கருவியாகிய யாழே, தமிழர்வாசித்த முதல் இசைக்கருவி.

நரம்புக்கருவிகளின் வளர்ச்சிக்குக் காரணமான ஆதி கருவி யாழ். இது யாளி என்ற ஒரு பூர்வகால மிருகத்தின் தலையைப் போல் செய்யப்பட்டிருந்ததால் யாழ் என்று பெயர் பெற்றது. இந்தக் கருவி முற்றிலுமாக மறைந்து அதன் பரிணாமமாக வீணை இன்று முதன்மையிடம் வகிக்கிறது. இந்த நிலையில் யாழினை மீட்டுருவாக்கம் செய்தல் அவசியமான ஒன்று. எனவே, யாழின் தோற்றம், வடிவம் - வகை அதன் பரிணாமம் அது அழிந்ததற்கான சமூகப் பின்புலம் முதலியவற்றைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

யாழின் தோற்றம்: வேட்டைச் சமூகத்தில் பயன்பாட்டில் இருந்த கருவிகளின் ஒன்று வில். வில்லில் முறுக்கேற்றிக் கட்டப்பெற்ற நாணிலிருந்து அம்பு செல்லும்பொழுது தோன்றிய இசையே யாழின் உருவாக்கத்துக்கு மூல காரணம். இந்த வில்லே வில்யாழாக மலர்ந்தது. பதிற்றுப்பத்து, வில்யாழ் முல்லை நிலத்திலேயே முதலில் தோன்றியது என்று கூறினாலும், குறிஞ்சி நிலத்தில்தோன்றியது என்பதே பொருத்தமுடையது. ஏனெனில் குறிஞ்சி நிலத்தில் தான் வேட்டைத் தொழில் மிகுதியாக நடைபெற்றது. இந்த வில்யாழ் மனிதனின் முயற்சியால், உழைப்பால் பல்வகை யாழ்களாக மலர்ந்தது.

வடிவம் வகை: யாழின் வடிவத்தைத் துல்லியமாக அறியப் போதிய சிற்பங்களோ, ஓவியங்களோ இன்று நம்மிடம் இல்லை. சங்க இலக்கியங்களான புறநானூறு, கலித்தொகை, பரிபாடல் மற்றும் ஆற்றுப்படை நூல்களிலும், திருக்குறளிலும் சிலப்பதிகாரம், பெருங்கதை, சீவகசிந்தாமணி முதலிய காப்பியங்களிலும் பக்தியிலக்கியங்களிலும் யாழ் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன என்றாலும் யாழின் வகைகளைப் பேரியாழ், சீறியாழ், மகரயாழ், சகோடயாழ் என்று அறிய முடிகிறதே தவிர அதன் வடிவினை அறியமுடியவில்லை. பெரும்பாணாற்றுப்படை பூவை இரண்டாகப் பிளந்தது போன்ற உட்பக்கம், பாக்கு மரப்பாளையிலுள்ள கண்களைப் போன்ற துளை, இணைத்த வேறுபாடு தெரியாதபடி உருக்கி ஒன்றாய்ச் சேர்த்தது போன்ற போர்வை, நீர் வற்றிய சுனை உள் இருண்டிருப்பது போன்ற உட்பாகம், நாவில்லாத வாய்ப்பகுதி பிறைநிலவு போலப் பிளவுபட்ட பகுதி, வளைசோர்ந்த பெண்களின் முன்கையைப் போன்ற வார்க்கட்டு, நீலமணி போலும் நீண்ட தண்டு, பொன்னுருக்கிச் செய்தது போன்ற நரம்புகள் கொண்ட யாழ்' என்று கூறுவதை வைத்து யாழின் தோற்றத்தை ஓரளவு மனக்கண்ணில் காண முடிகிறது.

யாழின் வகைகள் என்று பார்க்கும் பொழுது வில்யாழ், பேரியாழ், சீறியாழ் என்பன சங்ககாலத்திலும், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டு யாழ் என்பன காப்பியக் காலங்களிலும் இருந்திருக்கின்றன.

யாழின் பரிணாமம்: வில்லின் அடியாகத் தோன்றிய வில்யாழ் முதலில் குறிஞ்சி நிலத்தில் தோன்றியது என்றாலும் நாளடைவில் முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற நான்கு நிலங்களுக்கும் உரியதாக அமைந்தது. யாழினை இசைப்பதற்கென்றே 'பாணர்' என்ற குழு இருந்ததை இலக்கியங்கள் வாயிலாக அறியலாம். யாழ் மீட்டுவதையே தொழிலாக உடையவர்கள் என்றாலும் அவர்கள் யாழ்ப்பாணர், இசைப்பாணர், மண்டைப்பாணர் என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டனர். அதில் யாழ்ப்பாணர், இசைக்கும் யாழின் அடிப்படையில் பெரும்பாணர், சிறுபாணர் என்று பகுக்கப்பட்டுள்ளார். தமிழர்கள் யாழினின்று எழும் இசைக்கே முதன்மை அளித்தனர். அதனாலேயே ஒரு நரம்பில் தொடங்கி மூன்று, ஐந்து, ஏழு..... என்று ஆயிரம் நரம்புகள் கொண்ட யாழ் உருவாகியது. தொடக்கத்தில் வடிவம் பற்றிய சிரத்தை இல்லையென்றாலும் சில காலங்களின் மகரம், செங்கோடு எனப் பல வகையான யாழ்கள் தோன்றின. இவ்வாறாக யாழ் கி.பி.9-ஆம் நூற்றாண்டு வரை பலவகையாக வளர்ந்தது. இதற்குப் பிறகு வடிவில் ஓரிரு வேறுபாடுகள் கொண்டு வீணையாக பரிணாமம் கொண்டது. அந்த வீணையே இசையுலகில் இன்றளவும் முதலிடம் வகிக்கிறது.

யாழ் மறைந்ததற்கான சமூக பின்புலம்: யாழ் இசைக்கலைஞர்களான பாணர்கள் பெயரிலேயே இரண்டு சங்கநூல்கள் தோன்றியுள்ளதில் இருந்து யாழ் மற்றும் பாணர்களின் மதிப்பை அறிய முடிகிறது. அந்நூல்கள், மன்னர்கள் பாணர்களைப் போற்றியும், புரந்தும் வந்தள்ளமையைக் காட்டுகின்றன. யாழ் பாடிக் கொண்டே இசைக்கும் கருவியாக இருந்துள்ளது. சாதாரண மக்களிடம் புழக்கத்தில் இருந்த யாழ் ஒரு காலக்கட்டத்தில் தெய்வத்தன்மை பெற்று வணக்கத்திற்கு உரியதாக மாறியது. சங்க இலக்கியம் மற்றும் முற்காலக் காப்பியங்களில் இசைக் கருவியாக யாழ் மட்டுமே இடம் பெற்றுள்ளது. ஆனால் பக்தியிலக்கிய காலத்தில் யாழும் அதன் பரிணாமமான வீணையும் ஒருங்கே காணப்பட்டன என்பதை 'ஏழிசை யாழ், வீணை முரலக்கண்டேன்' 'பண்ணோடி யா'' வீணை பயின்றாய் போற்றி' என்ற மாணிக்க வாசகரின் பாடல்கள் பிரதிபலிக்கின்றன. ஆனால் கி.பி.9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சீவக சிந்தாமணியின் 'வீணை என்ற யாழையும் பாட்டையும் அடியாழும், மிடறும் உடன்நிகழ்ந்த இசையே வீணை என்ற பொருள் தருகிறது. மேலும், வெள்ளிமலை வேற்கண்ணாளைச் சீவகன் வீணை வென்றான் என்ற அடிக்கு உரை எழுதிய ஆசிரியர், சீவகன் காந்தர்வதத்தையை யாழும், பாட்டும் வென்றான் என்று குறித்துள்ளார். எனவே, யாழே வீணை என்று குறிக்கப்பட்டு பிற்காலத்தில் தனி இசைக்கருவியாக வளர்ந்தது என்பதை அறிய முடிகிறது. மேலும், யாழ் என்ற இசைக் கருவி மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருந்த காலகட்டத்தில் அதிலிருந்த வேறொரு இசைக் கருவியான வீணை தோன்றியதற்கான காரணம் ஆய்விற்கு உரியது. சங்க காலத்திலேயே ஆரியர்களின் ஆதிக்கம் தொடங்கியது. ஆரியர்கள் தங்களுக்கான மொழியை, நூல்களை, தெய்வங்களை, பழக்கவழக்கங்களை, கலைகளை உருவாக்கிக் கொண்டனர். தமிழரின் பண்பாட்டினை உள்வாங்கி, அவற்றை தங்களுக்கானதாக மாற்றிக் கொண்டனர். வீணையும் அவ்வாறு உருவாக்கப்பெற்றதே. தமிழரின் ஆதி கருவியாக யாழின் வடிவிலிருந்து வீணை என்ற ஓர் இசைக்கருவியை உருவாக்கி அமைத்துக் கொண்டனர். வீணையின் மீது தெய்வத்தன்மையை ஏற்றி அதனைத் தெய்வங்களுக்கு உரியதாக அமைத்தனர். வீணையை ஒரு குறிப்பிட்ட குழு மட்டுமே வாசிக்கும் நிலையினை உருவாக்கினர். ஆரியர்களின் ஆதிக்கமும் வீணையின் வளர்ச்சியும் தமிழர்களின் இசைக்கருவிகளின் முதன்மையான யாழினை முற்றிலுமாக அழித்துவிட்டன. இந்த நிலையில் நமது இசைக் கருவியான யாழினை இலக்கியங்கள் வாயிலாக மீட்டெடுப்பது அல்லது நினைவுபடுத்துவது தேவையான ஒன்று. ★

# விடிவை நோக்கி காத்திருக்கும் கிராமம்




■ வெவென்

> “சுகாதார வசதிகளில் 50 வீதமான குடும்பங்கள் மலசலகூடமின்றியுள்ளன. நாளாந்த கூலித் தொழில்களை மேற்கொள்ளும் மக்கள் அதிகமாக வாழ்வதால் இவற்றை உருவாக்க முடியாத நிலையில் உள்ளனர். சிறுபிள்ளைகளுக்கான போசாக்கு, குடும்ப வளக் கல்வி, அறிவூட்டல்கள் மேற்கொள்ளும் போதுதான் எதிர்கால சந்ததியை வளமானதாக உருவாக்க முடியும்.

மக்களின் வாழ்வு நிலை மேம்பட வேண்டுமெனில் அவர்கள் வசிக்கும் நகரங்களாயினும், கிராமங்களாயினும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். உட்கட்டுமான வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். போக்குவரத்து வசதிகள், கல்வி, சுகாதார, தொழில் வாய்ப்புக்கள் கிடைக்க ஆவன செய்ய வேண்டும். அப்போது தான் கிராமங்கள் எழுச்சியுடன் வளர்ச்சிப்பாதையில் முன்னேற முடியும்.

கோப்பாய் பிரதேச எல்லைக்குள் இருபாலை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் ஆடியபாதம் வீதியின் கிழக்குப் பகுதியில் உள்ளது ஆனந்தபுரம் கிராமம்.

இந்தக் கிராமம் மேற்படி வசதிகள் ஏதுமின்றித் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் பின் தங்கிய கிராமமாக விடிவை நோக்கிக் காத்திருக்கிறது. 250 வருடங்கள் பழமை வாய்ந்த இந்த கிராமத்தில் 160 குடும்பங்களைச் சேர்ந்த 700 இற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கிறார்கள்.

இந்த கிராமத்திற்குச் செல்லும் பிரதான பாதையான ஆனந்தபுரம் வீதி வயல்வெளிகளுக்கூடாகச் செல்கின்றது. இதனால் தாழ்வான இடங்களில் மழைக் காலங்களில் வெள்ளம் பாய்வதால் போக்குவரத்து தடைப்படுகிறது. அத்துடன் நீண்ட காலமாக இந்த வீதி திருத்தம் செய்யப்படாதுள்ளது. உள்ளக வீதிகளும் இன்று வரை மண் வீதிகளாகவே காணப்படுகின்றன.

எம்மைச் சூழவுள்ள கிராமங்களின் வளர்ச்சிக்குப் பல்வேறு உதவிகள் கிடைக்கும் போது எமக்கு மட்டும் ஏன் பாரபட்சம். இந்தப் பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் எவரும் எமது நிலையைக் கண்ணோக்குவதாகத் தெரியவில்லை, என்று இந்த கிராம மக்கள் ஆதங்கப்படுகின்றனர்.

காலஞ்சென்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசனின் முயற்சியால் மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதை விட குறிப்பிடத்தக்க உதவிகள் இன்று வரை இவர்களுக்கு எட்டவில்லை. குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவுகின்றது. வாரத்திற்கு 2 தடவை பவுசர் மூலம் வழங்கப்படும் குடிதண்ணீர் போதுமானதாக காணப்படவில்லையென பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதி மக்களின் வளர்ச்சிக்கும், மாணவர்களின் உயர்ச்சிக்கும் ஆனந்தபுரம் கலைவாணி சனசமூக நிலையம், கலைவாணி முன்பள்ளி என்பன சேவையாற்றுகின்றன. மாணவர்கள் ஞானோதயா பாடசாலை, செங்குந்தா இந்துக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்கின்றனர். இவர்களின் வசதி கருதி வீதி சீரமைப்பு உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென சனசமூக நிலையத் தலைவர் ஞா.துசியந்தன் சுட்டிக்காட்டுகிறார்.

சுகாதார வசதிகளில் 50 வீதமான குடும்பங்கள் மலசலகூடமின்றியுள்ளன. நாளாந்த கூலித் தொழில்களை மேற்கொள்ளும் மக்கள் அதிகமாக வாழ்வதால் இவற்றை உருவாக்க முடியாத நிலையில் உள்ளனர். சிறுபிள்ளைகளுக்கான போசாக்கு, குடும்ப வளக் கல்வி, அறிவூட்டல்கள் மேற்கொள்ளும் போது தான் எதிர்கால சந்ததியை வளமானதாக உருவாக்க முடியும்.

இங்கு அரச தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பு அவசியம் தேவைப்படுவதாக பெரியவர்கள் தெரிவிக்கின்றனர்.

தேர்தல் காலங்களில் படையெடுத்து வரும் அரசியல் கட்சிகள் வாக்குகளைப் பெறுவதில் கண்ணாக இருக்கின்றனவே தவிர, கிராமத்தின் தேவைகளையோ, இளைஞர்களின் தொழில் மேம்பாட்டையோ செய்து தருவதாகத் தெரியவில்லை. இவ்வாறு பல்வேறு தேவைகள் வசதியீனங்களுடன் வாழ்வை நகர்த்தி வரும் இந்தக் கிராம மக்களின் முதற் தேவையாக வெள்ளத்தில் மூழ்கியுள்ள வீதியையும் உள்ளக வீதிகளையும் அமைத்துத் தந்து ஆனந்தபுரம் கிராமத்தின் வளர்ச்சிக்கு வித்திட வேண்டிய கடமையை யார் நிறைவேற்றுவார் என்று மக்கள் எதிர்பார்த்திருக்கின்றனர். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறைக்கு அஞ்சியே இல்லத்திலிருந்து ஷிராணி வெளியேறினாராம்

> “எனது உத்தியோகபூர்வ இல்லத்திலும் அல்லது அறைகளிலும் தங்கியிருந்திருந்தால் வன்முறை இடம்பெற்றிருக்கும் என்று இப்பொழுது தெரிகிறது. அதனால் தான் அவைகளிலிருந்து நான் வெளியேறினேன்.

சண்டே ரைம்ஸ் அரசியல் கட்டுரையிலிருந்து
■ கோகுலன்




முன்னாள் அமைச்சரவை ஆலோசகர் மொஹான் பீரிஸ் கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதியின் முன்னிலையில் புதிய பிரதம நீதியரசராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். அடுத்து வந்த செவ்வாய்க்கிழமை அவர் பதவிப்பணிகளை ஆரம்பிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. உலகில் இதுவே முதல் தடவையாகும் இரண்டு பிரதம நீதியரசர்கள் ஒரே சமயம் பதவி வகிப்பது. பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க 2011 மே 11 ஆம் திகதி சத்தியப்பிரமாணம் செய்தார். மொஹான் பீரிஸ் கடந்த திங்கட்கிழமை சத்தியப்பிரமாணம்செய்துகொண்டார்.

மொஹான் பீரிசை புதிய பிரதம நீதியரசராக ஜனாதிபதி நியமிப்பதற்கு முன்பதாக உயர் நீதிமன்ற அதிகாரபூர்வமான இணையத்தில் மிகச்சுருக்கமாகவே அவர் அண்மையில் வகித்த பதவிகள் பற்றி தகவல் தரப்பட்டிருந்தது. அப்பொழுது சில தகவல்கள் விடுபட்டிருந்தன. அவைகளில் ஒன்று இப்போது சர்ச்சைகுள்ளாகியுள்ள செலிங்கோ குழுமத்தின் இலங்கை வங்கியின் தலைவராகவும் அவர் இருந்துள்ளார் என்பதாகும். ஒருவேளை இது தவறுதலாக விடுபட்ட விடயமாக இருக்கலாம்.

உயர் நீதிமன்ற சுற்றாடலும் பிரதம நீதியரசரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமும் பாதுகாப்பு பொலிஸ் மற்றும் படையினரால் நிரப்பப்பட்டிருந்தன.

கடந்த செவ்வாய்க்கிழமை இரண்டு பிரதம நீதியரசர்கள் பணிக்கு வருவதை அரசு விரும்பவில்லை. எனவே முன்னையவரை வரவிடாமல் தடுக்கவும், புதியவர் வரவை அனுமதிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படிருந்தன.

நீதிமன்ற வளாகத்துக்கு வந்த வாகனங்கள் யாவும் பொலிஸாரால் சோதனையிடப்பட்டன. திருமதி ஷிராணி பண்டாரநாயக்காவை உள்ளே அனுமதிக்க வேண்டாம் என எல்லாப் படை அதிகாரிகளுக்கும் கட்டளையிடப்பட்டிருந்தது.

நீதிபதிகளின்கார்களும்சோதனையிடப்பட்டன. அவர்களும் பவ்வியமாக அனுமதித்தனர். இந்த நாட்டின் எஜமான்கள் யார் என்பதை அரசு வெளிக்காட்டியிருந்தது.

பிரதம நீதியரசரின் உத்தியோகபூர்வ பங்களாவின் வாசலில் செவ்வாய்க்கிழமை காலையில் திருமதி பண்டாரநாயக்காவின் கருத்தைக் கேட்பதற்கு ஊடகவியலாளர்கள் குழுமியிருந்தார்கள். வெளியில் அவரது குடும்ப பொருள்களை ஏற்றிய லொறிகள் புறப்பட்டு சென்று கொண்டிருந்தன. அந்த வேளை பெரிய கடித உறை ஒன்றுடன் கடற்படை அதிகாரி ஒருவர் அங்கு வந்தார். அவர் வாயிலடிக்கு சென்று குடும்ப உறுப்பினர்களுடன் ஏதோ பேசிவிட்டு திரும்பினார். தவறுதலாக புதிய பிரதம நீதியரசருக்குரிய கடிதங்களை பழைய நீதியரசர் பங்களாவில் இருக்கக் கூடியதாக அங்கு கொண்டு வந்திருந்தார் என்பது பின்னர் தெரிய வந்தது.

அங்கே பணியில் இருந்த கொழும்பு தெற்கு கோட்டப் பிரிவு பொலிஸ் சுப்பிரிண்டன் எஸ்.பி.ரங்கல, இங்கே நீங்கள் செய்தி மகாநாடு நடத்த முடியாது. இது அரச சொத்து என்று ஊடகவியலாளர்களிடம் கூறினார்.

அப்படியென்றால் கோல்டன் கீ வைப்பாளர்கள் எப்படி இங்கே எதிர்ப்பு போராட்டம் நடத்த முடிந்தது. பால்சோறு காய்ச்ச முடிந்தது? என்று ஊடகவியலாளர் ஒருவர் கேட்டார்.

நீதியரசர் இப்பொழுது சாதாரண ஒரு பிரஜை ஆகிவிட்டார் என்று பொலிஸ் அதிகாரி கூற அதற்கு ஊடகவியலாளர் ஒருவர் சொன்னார் அரச அதிகாரிகள் பதவி துறந்தால் மூன்று மாதங்கள் வரை தங்கியிருப்பதற்கு அனுமதி உண்டு அல்லவா. சில அமைச்சர்கள் உத்தியோகபூர்வ பங்களாக்களை விட்டுப் போகிறார்களில்லையென்ற வகையில் வழக்குகளும் கூட இருக்கின்றனவே என்றார். அங்கே இருந்த உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் பங்களாவை விட்டு அவர் போகாவிட்டால் தண்ணீர் மற்றும் மின்சார விநியோகங்களைத் துண்டித்து விடுவோம் என்றார்.

பி.ப 3 மணியளவில் திருமதி பண்டாரநாயக்கா தமது மகன் ஷவீனால் செலுத்தி வரப்பட்ட காரில் வெளியே வந்தார். கணவர் பிரதீப் முன் பக்கமும் அவர் பின் ஆசனத்திலும்அமர்ந்திருந்தார்.

ஊடகவியலாளர்கள் [illegible] மொய்த்துக் கொண்டனர். பொலிஸார் அவர்களைத் தடுக்க முற்பட்டனர்.

அவரை பேசவிடமாட்டோம் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார். அப்படியானால் ஒரு பிரஜை ஆனவர் இனிமேலும் பேச முடியாதா என்று ஊடகவியலாளர் ஒருவர் கேட்டார்.

ஊடகங்களுக்கு சுருக்கமாக வெளியிட்ட கருத்துரையில் ஷிராணி பண்டாரநாயக்கா கூறியதாவது:-

15 ஆண்டுகாலம் நான் சட்டத்தின்படி கட்டுப்பாட்டுடன் பணிபுரிந்துள்ளேன். எப்பொழுதுமே எமது மக்களின் நன்மையை முன் வைத்தே பணியாற்றினேன். எதிர்காலத்திலும் எனது மக்களின் நன்மையையே கருத்தில் கொள்வேன். அதில் மாற்றத்துக்கு இடமில்லை. நான் குற்றமற்றவள். பதினைந்து வருடங்கள் ஒருநாள் விடுப்புக் கூட எடுத்துக்கொள்ளாமல் பணியாற்றியுள்ளேன். ஒரு வாகனத்துக்கும் நான் பர்மிட் வாங்கியதில்லை. எவருக்கும் நன்றி கூறுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. நன்றி என்றார்.

செவ்வாய்க்கிழமை மாலையில் திருமதி ஷிராணி பண்டாரநாயக்க அறிக்கையொன்றை வெளியிட்டார். அவர் கூறியிருந்தவை.:

நான் இலங்கை சோஷலிச குடியரசின் 43 ஆவது பிரதம நீதியரசர் ஆவேன். பிரதம நீதியரசர் என்ற முறையில் நீதிபதிகளுக்கும் சட்டத் தரணிகளுக்கும் நாட்டின் பிரஜைகளுக்கும் அசைந்து கொடுக்கமுடியாத ஒரு கடமை எனக்கு இருக்கிறது. அடிக்கடி துன்புறுத்தப்பட்ட நிந்திக்கப்பட்ட கண்டிக்கப்பட்டவராக நான் இன்று உங்கள் முன் நிற்கிறேன். கடந்த சில வாரங்களாக நான் நடத்தப்பட்டுள்ள முறையில் [illegible] மகனும் நடத்தப்பட்டிருக்கக்கூடாது.

கொழும்பு பல்கலைக்கழகத்திலும், பின்னர் உயர் நீதின்றத்திலும் எனது இந்த 54 வயது காலத்தில் பல்வேறு நிலைகளில் எனது தாய் நாட்டுக்கு நான் செய்துள்ள 32 வருட கால பணிக்கு துரதிர்ஷ்டவசமாக இத்தனை அநீதியான முறையில் வெகுமதியளிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவினரால் நான் குற்றஞ்சாட்டப்பட்டு ஒருதலைப் பட்சமாக குற்றவாளியாக்கப்பட்டிருந்த போதிலும் நான் சட்டத்தை நிலைநாட்ட முனைந்ததில் பழி வாங்கப்பட்டுள்ளேன். முறையான நடைமுறை இயற்கை நீதியின் விதிகள் ஆகியவற்றில் உறுதியான நம்பிக்கை கொண்டவளான நான் அதனைத் தொடர்ந்தும் ஆதரித்து வருவேன். அந்த வகையில் இந்த நாட்டின் உயர் நீதிமன்றங்கள் கருத்து கொண்டிருப்பதில் நான் ஆறுதல் பெறுகின்றேன்.

அரசமைப்பை வியாக்கியானம் செய்வதற்கு உயர் நீதிமன்றத்துக்கு மட்டுமே பிரத்தியேக நியாயாதிக்கம் உண்டு என்பது சபாநாயகரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில் நாடாளுமன்ற தெரிவுக்குழுவும் அதன் செயற்பாடுகளும் அரசமைப்புக்கு மாறானவை என்றும் சட்டபூர்வமற்றவை என்றும் சந்தேகத்துக்கு இடமற்ற முறையில் உயர் நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பு வழங்கியுள்ளது.

எனவே தெரிவுக் குழுவின் தீர்மானங்களானவை அதிகாரமற்றவை, செல்லுபடியற்றவை, சட்டத்தின் படி வலுவோ தகுதியோ இல்லாதவையாகும்.

ஜனநாயக நாடான எமது நாட்டில் சட்ட ஆட்சி தான் அடிப்படை வாயிலாக அமைந்துள்ளது. அதன் மீது தான் எமது அடிப்படை உரிமைகள் எல்லாம் தங்கியிருக்கின்றன என்ற இன்றைய நிலையில் நானே முறையாக நியமிக்கப்பட்ட பிரதம நீதியரசராக இன்னமும் இருக்கின்றேன். இன்று பிரதம நீதியரசரின் பதவி மட்டுமல்ல, நீதித்துறையின் சுதந்திரமுமே ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. சட்ட ஒழுங்கு முறை, இயற்கை நீதி, நீதியின் அவதானம் ஆகியவை வெளியேற்றப்பட்டு விட்டமை மட்டுமல்ல மிருகத்தனமாக சிதைக்கப்பட்டும் விட்டன.

சுயேச்சையான நீதித்துறைக்காக மட்டுமன்றி, அழுத்தங்களையும் எதிர்கொண்டு நின்றதனால் நான் துன்புறுத்தலுக்கு உள்ளானேன். மக்கள் தான் உயர் நிலையில் இருக்கிறார்கள். குடியரசின் அரசமைப்பு சட்ட ஆட்சியை அங்கீகரிக்கிறது. அந்த சட்ட ஆட்சி நிலை பெற்றிருக்குமானால் நான் அநீதியாக தண்டிக்கப்பட்டிருக்கமாட்டேன்.

எனக்கெதிராக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் வெளிப்படையான பொய்கள். எல்லா குற்றச்சாட்டுக்களிலும் நான் குற்றமற்றவள், குற்றச்சாட்டுக்களிலும் கொஞ்சமும் உண்மையில்லை. இருந்திருப்பின் ஒரு நிமிடங்கூட இவ்வுயர்ந்த பதவியில் நீடித்திருக்க மாட்டேன். அந்த குற்றமற்ற தன்மையினால் தான் இன்று உங்கள் முன் பிரதம நீதியரசராக ஒரு மனிதராக நிற்கிறேன். எனது உத்தியோகபூர்வ இல்லத்திலும் அல்லது அறைகளிலும் தங்கியிருந்திருந்தால் வன்முறை இடம்பெற்றிருக்கும் என்று இப்பொழுது தெரிகிறது. அதனால் தான் அவைகளிலிருந்து நான் வெளியேறினேன். ஏனென்றால் நீதிவான்கள், சட்டத்தரணிகள் அர்ப்பணிப்புடன் இருக்கும் பொதுமக்கள் மீதும் வன்முறைகள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன என்று அறிக்கையில் உள்ளது.★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவாற்றல்

கடன் கொடுத்துவிட்டு அதை மறக்காமல் நினைத்துக் கொண்டு இருப்பது வழமை. கடன் வாங்கிக் கொண்டு அதை அப்பொழுதே மறந்துவிடுவதும் உலகத்தில் மிகவும் வழமை.

கடந்த மாதம் பத்து ரூபாயைக் கொடுத்தேன், அதை வாங்கிக் கொண்டு போகலாம் என்று வந்தேன்- என்பார்கள். வந்தவனைப் பார்த்து நீ யார்? என்று கேட்பான் இவன். வந்தவனையே நினைவு இல்லை என்னும் போது வாங்கிய கடன் ஞாபகம் இருக்கவா போகின்றது?

தனக்கு வேண்டாதது மனதுக்கு கசப்பானது! இதை மனிதன் மறந்து விடுகின்றான். உளவியல் அறிஞர், வைத்துக்கொள்கின்ற நினைவாற்றலை இரண்டு விதமாகப் பிரித்திருக்கின்றார்கள். குறுகிய கால நினைவு, நீண்ட கால நினைவு.

நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தைப் பொறுத்தும், நோக்கத்தைப் பொறுத்தும், அதைப் பிரிக்கிறார்கள்.

இன்றைக்கு பத்திரிகையில் ''ராசிபலன்'' என்ன என்று பார்க்கின்றோம். இதை நாம் வாழ்நாள் முழுவதும் நினைவு வைத்துக் கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஒரு திருக்குறள் படிக்கின்றோம் என்றால் அது எமக்கு எப்பொழுதும் நினைவிருக்க வேண்டும். பாடம் படிக்கின்ற சமயத்தில் நினைவாற்றல் திறன் மிகவும் அவசியம்.

நினைவாற்றல் என்பது நாம் கற்கக்கூடிய தன்மையைப் பொறுத்தது என்று சொல்வார்கள்! இதை படிப்பதற்கான ஆர்வம் வேண்டும். வேண்டா வெறுப்பாகப் போய் அமர்ந்தால் என்ன நடக்கும். படிப்பதை, நோக்குவதை நன்றாக மனதில் வாங்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இருத்தல் வேண்டும்.

கவனத்தை வேறு வகையில் சிதறவிடக்கூடாது ஒரு முகப்படுத்த வேண்டும். படிக்கின்ற பாடத்தை மனதிலே படமாக்கிப் பார்க்க வேண்டும். அதற்குக் கற்பனையைப் பயன்படுத்த வேண்டும். அதனால்தான் படத்துடன் பாடம் சொல்லிக் கொடுக்கின்றார்கள். படிக்கின்ற செய்தியை மற்றவொரு செய்தியுடன் தொடர்புபடுத்திப் படிக்க வேண்டும். எமக்குத் தெரிந்த ஏனைய பொருளுடன் இணைத்துப் பார்க்க வேண்டும்.

நயத்துடன் கற்க வேண்டும். இசையுடன் பயில வேண்டும். நிறைய நாள் நினைவு வைத்துக் கொள்வதற்கு இது நல்ல வழி. சிறிய பிள்ளைகள் வாய்ப்பாடு கற்றுக் கொள்ளும் முறையை நினைத்துப் பாருங்கள். நாம் எதைப் படிக்கின்றோமோ அதைப் பொருள் பிரித்துப் படிக்க வேண்டும். கருத்துத் தெரியாமல் படிப்பது அதிக நாள்களுக்குத் தங்காது. கூடுமான வரைக்கும் திரும்பத் திரும்பச் சொல்லிப் பார்ப்பது நல்லது. படித்ததை மனக்கண் முன் கொண்டு வரவேண்டும். படித்ததுக்குப் பின் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு திரும்பவும் சொல்லிப் பார்க்க வேண்டும்.

படித்ததற்குப் பின் ஓய்வு அல்லது உறக்கம் மிகவும் நல்லது. படித்த பிறகுதான் தூக்கம் வரவேண்டும். படிக்கும் போது தூக்கம் வருவது அது நல்லதன்று.

ஒரு புத்தகத்தை அல்லது பாடத்தைப் படிப்பதற்கு முதல் அதன் உட்பொருளை அல்லது கருத்தைத் தெரிந்து கொண்டு படிப்பது நல்லது. பொதுவாக திரும்பத் திரும்பப் படிப்பது ஞாபகசக்தியை வளர்த்துக் கொள்வதற்கு ஒரு சிறந்த வழி.அதனால் நினைவாற்றலை வளர்த்துக் கொள்வதற்குத் தேவையானவை: ஆர்வம், ஊக்கம், மன உறுதி என்பனவாகும். படிக்கின்ற காலத்தில் இந்தப் பழக்கம் வந்துவிட்டால் பின்னர் மிகவும் உதவியாகவிருக்கும்.

இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள். தலைவர்கள் ஆகி விட்டால் அதிக புள்ளி விவரங்கள் எல்லாம் சொல்ல வேண்டியிருக்கும். ஞாபக சக்தி இல்லை என்றால் எப்படி அதைச் சொல்வது?

ஜெனரல் ஸ்மட்ஸ்ஞ என்ற ஒருவர் இருந்தார். தென்னாபிரிக்காவில் அவர் பிரதமராக இருந்தார். நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு அவருக்கு புள்ளி விவரம் தேவைப்பட்டது. மறுநாள் அதைப் பற்றி பேசவே வேண்டும். செயலாளரைக் கூப்பிட்டு ''இதோ பாருங்கள்'' நாளைக்கு இந்த புள்ளி விவரங்கள் எனக்குத் தேவை, இதை வைத்துத்தான் எதிர்க்கட்சிகளை திணற வைக்க வேண்டும்'' என்றார்.

செயலாளர் திகைத்துப்போனார். ''சேர் இந்த புள்ளி விவரங்களைச் சேகரிப்பதற்குக் குறைந்தது ஐந்து வருடம் ஆகும்.!'' என்றார். ''அது எல்லாம் எனக்குத் தெரியாது ... நீங்கள் நாளைக்கு எனக்கு புள்ளி விவரம் கொடுக்க வேண்டும்'' என்றார். ஆனால் அவரால் எதுவும் முடியவில்லை.

மறுநாள் நாடாளுமன்றமே கூடிவிட்டது. புள்ளி விவரங்களை அள்ளி வீசி நாடாளுமன்றத்தை ஆச்சரியப்பட வைத்தார் ஸ்மட்ஸ்.

பேச்சு முடிந்ததும் செயலாளர் ஓடி வந்தார். ''எப்படி சேர் இது'' இவ்வளவு புள்ளி விவரங்களை ஒரே இரவில் எப்படிச் சேகரித்தீர்கள் ஆச்சரியமாகவுள்ளதே! என்றார்.



''இந்த விவரங்களைச் சேகரிக்க அரசுக்கே ஐந்து வருடங்களாகும் என்று கூறினீர்கள். அப்படி என்றால் இதெல்லாம் உண்மையா என்று கண்டுபிடிக்க எதிர்க்கட்சிகாரர்களுக்கு 15 வருடம் ஆகும். அவர்கள் கண்டுபிடித்து என்னை மடக்குவதற்குள் நான் நிச்சயமாக இந்தப் பதவியில் இருக்கப் போவதில்லை! அதுதான் சும்மா அடித்து விட்டேன்!'' என்றார்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# இடர்களைத் தாண்டி உருவான உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயம்



**எஸ்.யேசுதாஸ்**

சமயங்களும் அவை சார்ந்த வழிபாட்டுங்களும் மக்ககளை நல்வழிப்படுத்தி,ஆன்மிக வலுவூட்டி, அன்பால் அனைவரையும் ஆட்கொள்கின்றன, சமுதாயத்தையும், சமயத்தையும் வளப்படுத்தி பிறப்பின் பயனாகிய மறுமையை அடைய வழிகாட்டும் ஊடகங்களாக விளங்குகின்றன.

எமது மண்ணிலும் பூர்வீகமாக பின்பற்றப்பட்டு வந்த மதங்களுடன் வியாபார ஆக்கிரமிப்பு, துறவிகள் வருகை என்பவற்றால் பல்வேறு மதங்கள் பரம்பலடைந்துள்ள போதிலும் அனைத்தும் புரிந்துணர்வுடன் வெவ்வேறு வழிகளில், கோட்பாடுகளில் மக்களை இறைவன்பால் ஈர்க்கும் நற்பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்தவகையில் முற்றிலும் இந்து மத சகோதரர்கள் வாழும் உரும்பிராய் பகுதியில் பல்வேறு சவால்கள், எதிர்ப்புகள், எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் அந்தப்பகுதியில் வாழ்ந்த முன்னோரின் வேண்டுகோளுக்கிணங்க நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளால் ஆரம்பிக்கப்பட்டு கத்தோலிக்க விசுவாசத்தை வளர்த்து சமயப் பணியாற்றி வருகிறது உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயம்.

100 வருடங்களை அண்மித்த வரலாற்றைக் கொண்ட புனித மிக்கேல் ஆலயம் பலாலி வீதியில் உரும்பிராய் இந்துக்கல்லூரிக்கு முன்பாக கிழக்குத் திசையில் செல்லும் ஒழுங்கையில் 300 யார் தொலைவில் அமைந்துள்ளது.

> **100 வருடங்களை அண்மித்த வரலாற்றைக் கொண்ட புனித மிக்கேல் ஆலயம் பலாலி வீதியில் உரும்பிராய் இந்துக்கல்லூரிக்கு முன்பாக கிழக்குத் திசையில் செல்லும் ஒழுங்கையில் 300 யார் தொலைவில் அமைந்துள்ளது.**

இந்தப் பகுதியில் 100 வருடங்களுக்கு முன்னர் கத்தோலிக்க மக்கள் இல்லாத போதிலும், போர்த்துக்கேயர் காலத்தில் சிலர் கத்தோலிக்கத்தைத் தழுவினர். பின் ஒல்லாந்தர் ஆட்சியில் இடம் பெற்ற மத அழிப்பு நடவடிக்கைகளுக்கு அஞ்சி கத்தோலிக்கத்தைக் கைவிட்டிருக்கலாமெனஎண்ண இடமுண்டு. ஏனெனில் போர்த்துக்கேயர் காலத்தில் யாழ். குடாநாடு முழுவதும் 32 கோயில் பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு கோயில் பற்றுக்கும் ஒரு பெரிய ஆலயம் அமைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டது. உரும்பிராய், கோப்பாய் கோயிற் பங்குக்குச் சேர்ந்ததாக இருந்தது. கோப்பாயில் குவாடலூரப்பு மாதா ஆலயம் கோயில் பற்று ஆலயமாக அமைந்திருந்ததாக கத்தோலிக்க வரலாற்று ஏடுகள் தெரிவிக்கின்றன.

இதன்படி உரும்பிராயில் வாழ்ந்திருக்கும் கத்தோலிக்கர் கோப்பாய் கோயிற்பற்றைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்கக் கூடும். 1658இல் யாழ்ப்பாணத்திலிருந்து போர்த்துக்கேயரை வெளியேற்றி ஒல்லாந்தர் ஆட்சியைக் கைப்பற்றினர். அப்போது கத்தோலிக்கருக்கு ஏற்பட்ட மதக் கெடுபிடிகள் காரணமாக பலகோயிற் பற்றுக்களிலிருந்து கத்தோலிக்க மதம் மறைந்து போயிற்று. இவ்வாறு இங்கு வாழ்ந்த கத்தோலிக்கரும் மீண்டும் இந்து சமயத்தை தழுவினர் என்ற கருத்து அருட்திரு ஞா.பிலேந்திரன் அடிகளார் எழுதிய ஆலயங்களின் வரலாற்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போர்த்துக்கீசர் இலங்கையில் இருந்து வெளியேற்றப்பட்டு சுமார் 250 ஆண்டுகளின் பின்பு மறை போதகப் பணியில் தீவிரமாக ஈடுபட்டு விசுவாசத்தை வளர்த்து வந்தார் சுதேச குருவாகிய நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகள். அவர் 1911 ஆம் ஆண்டில் ஒரு நாள் உரும்பிராய் வழியாக சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தார். அப்போது அவரது சைக்கிள் பழுது ஏற்படவே அந்தப்பகுதியில் தோட்ட வேலை செய்து கொண்டிருந்த மூன்று ஆண்கள் வந்து உதவி செய்து திருத்திக் கொடுத்தனர்.

அடிகளாரது அன்பு, கருணை மிகுந்த செயற்பாடுகளால் கவரப்பட்ட அவர்கள் தாங்களும் தங்கள் உற்றார், உறவினரும் கத்தோலிக்க மறையைத் தழுவ விரும்புவதாகத் தெரிவித்தனர். ஆயினும் அந்நாளில் நிலவிய இறுக்கமான சாதி, சமய, சமூக ஏற்றத் தாழ்வுகள் காரணமாகத் தோன்றிய எதிர்ப்புக்கள் சவால்கள் இம்முயற்சி கைகூடாது போயிற்று.

ஐந்து வருடங்களின் பின்பு மீண்டும் 1916 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 29 ஆம் திகதி அதே மூன்று பேரும் நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் கோயிலில் தங்கியிருந்து பணியாற்றிய ஞானப்பிரகாசர் அடிகளிடம் சென்று எவ்வித எதிர்ப்பையும் பொருட்படுத்தாது கத்தோலிக்க மறையில் இணைய தாம் தயார் எனத் தெரிவித்தனர். இந்த விடயம் நல்லூர்ப் பங்குப் பணி மனைக் குறிப்பேட்டில் சுவாமியவர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. பண்டாரி (பத்தி நாதன்) கணபதி (கபிரியேல்) சீனியன் (மனுவல்) ஆகியோரே அம்மூவருமாவர்.

அதே ஆண்டு ஒக்ரோபர் ஆம் திகதி சுவாமி முதன் முறையாக உரும் பிராய்க்குச் சென்று கத்தோலிக்க சமயத்தைப் பின்பற்ற விரும்புவோரின் பெயர்களை எடுத்துக் கொண்டார். இவர்கள் ஏழைகளாவும் அனைத்துக்கும் பிறரிலே தங்கி வாழ்வை நகர்த்துபவர்களாவும் இருந்தனர்.


இதனை அறிந்த இந்துமத நிலச் சுவாந்தர்கள் அவர்கள் பயன் படுத் தும் பாதைகளில் முட்களைக் குவித்தும் குத்தகை நிலங்களை நிறுத்தியும் கடன்பணங்களை அறவிட்டும் இன்னல்கள் கொடுத்தும் எதிர்ப்பை வெளிக் காட்டினர். அதேபோன்று அடிகளாருக்கும் சோதனைகள், துன்பங்கள், இன்னல்கள் நிகழ்ந்தன. கொலின்ஸ் சுவாமிகள் உட்பட பல குருக்கள் ஆறுதலும் ஊக்கமும் அளித்தனர்.

மேற்குறிப்பிடப்பட்ட பண்டாரி என்பவரின் காணி குத்தகைக்கு எடுக்கப்பட்டு ஒரு சிறிய கொட்டில் அமைக்கப்பட்டு கோயிலாகவும் குருவானவர் தங்கு மிடமாகவும் பயன்படுத்தப்பட்டது. தற்போதைய ஆலயத்திற்கு தென்கிழக்காக 400 யார் தொலை வில் இருந்த அவ்விடம் சுடுகாடாகப் பயன்பட்டு வந்ததாகும். இந்தச்சிறிய கோயிலிலே 1916 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 18 ஆம் திகதி ஞானப்பிரகாசம்அடிகள் முதலாவது திருப்பலியை நிறைவேற்றினார்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழாயில் ஏற்பட்ட வெடிப்பால் திருமலை நகர வீதியில் குழி



திருகோணமலை,ஜன.22

திருகோணமலை, விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்துக்கு முன்னால் பிரதான வீதியில் திடீரென பெரிய குழியொன்று உண்டானது. அதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெற்றது.

குழிஏற்பட்டது மட்டுமன்றி குழிக்குள்ளிருந்து அதிகமான நீர் வெளியேறியுள்ளது.

அதனையடுத்து குறித்த இடத்துக்குச் சென்ற நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் பிராந்திய முகாமையாளர் உடனடியாக நீர்விநியோகத்தை முற்றாக நிறுத்தினார். நீர் குழாயில் ஏற்பட்ட வெடிப்பே குழிதோன்றுவதற்கான காரணம் என்று பின்னர் தெரியவந்துள்ளது. திருகோணமலை நகர சபைத் தலைவர் க.செல்வராசா சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமையைப் பார்வையிட்டார். திருத்த வேலைகளை உடனடியாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையினரை அவர் கேட்டுள்ளார். (ச)

# பாதுகாப்புக் கடவை அமைக்கக் கோரிக்கை



மட்டக்களப்பு,ஜன.22

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட இருதயபுரம், மாமாங்கம் வீதியில் உள்ள ரயில் தண்டவாளத்தில் பாதுகாப்பு கடவை அமைக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பாதையூடாக பயப்பீதியுடனேயே பயணம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று மக்கள் தெரிவித்தனர். குறிப்பிட்ட பாதையில் பாதுகாப்புக் கடவையை அமைக்குமாறு பல தடவை உரிய அதிகாரிகளுக்கு அறிவித் தும் இதுவரை பலன் கிடைக்கவில்லை.

பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டத்தில் கூட கடவை அமைப்பதற்கு உறுதியளிக்கப்பட்டபோதிலும், இதுவரை அது செயற்படுத்தப்படவில்லை என்று மக்கள் தெரிவித்தனர். (ச)

# மேல் மாகாண பாடசாலைகள் 92இல் ஐம்பதுக்கும் குறைந்த மாணவர்

கொழும்பு,ஜன.22

மேல் மாகாணத்தில் ஐம்பதுக்கும் குறைவான மாணவர்கள் கல்வி பயிலும் 92 பாடசாலைகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது என்று மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ள இந்தப் பாடசாலைகளை மீளக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மேல் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஜயந்த விஜேதுங்க தெரிவித்தார்.

அதற்கமைய இந்தப் பாடசாலைகளை ஆரம்பப் பாடசாலைகளாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

**பாடசாலைகளை ஆரம்பப் பாடசாலைகளாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்**

ஜனாதிபதி செயலகத்தின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்தின் கீழ் குறித்த பாடசாலைகளுக்குத் தேவையான பௌதிக மற்றும் ஆளணி வளங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.



வெள்ளத்தால் சேதமடைந்த மட்டக்களப்பு, மாவடிஓடை பாலபுனர்நிர்மாணப் பணியில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

# கிழக்கு சுகாதார பணிப்பாளர் நியமனம்

மட்டக்களப்பு,ஜன.22

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக மருத்துவர் திருமதி கௌ. ஞானகுணாளன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜயவிக்கிரம அவரை நியமனம் செய்துள்ளார்.

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடந்த இரண்டு வருடங்களாக இவர் சேவையாற்றி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மொழியும் கலாசாரமும் வாழ்ந்தால் தமிழ்ச் சமூகம் அழியாது

## மேல் மாகாணசபை உறுப்பினர் சொல்கிறார்

இரத்தினபுரி,ஜன்.22

ஒரு சமூகத்தின் மொழி, கலாசாரம் அழியுமாயின், அந்தச்சமூகம் அழிந்துவிடும். மொழி, கலாசாரம் வளர்ந்துவரும்போது, அந்தச் சமூகம் அழியாது வாழ்ந்துகொண்டிருக்கும். அந்தவகையில் தமிழ்மொழியும், கலாசாரமும் அபிவிருத்தி அடையும் போது தமிழ்ச்சமூகம் அழியாது வாழும்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும், மேல் மாகாண சபை உறுப்பினருமான எஸ்.இராஜேந்திரன் தெரிவித்தார்.

மேல் மாகாணசபையில் நடைபெறாதிருந்த தமிழ் சாகித்திய விழாவை முதன் முதலாக நடத்தியமைக்குக் காரணம் மொழி, கலாசாரத்தை வளர்க்கவேண்டும் என்பதேயாகும் என்று அவர் கூறினார்.தமிழ் மாணவர்கள் மத்தியில் தமிழ்மொழி அறிவை வளர்க்க வேண்டும்.

அவர்களில் திறமையானவர்களைப் பாராட்டி பரிசில்கள் வழங்கி ஊக்குவிக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# சரிந்து விழும் கற்களால் அச்சத்தில் வாழும் மக்கள்

நுவரெலியா,ஜன.22

லிந்துல்ல, ஊவாக் கலை தோட்டத்தின் தொழிற்சாலை பிரிவிலுள்ள மலைக் குன்றுகளில் இருந்து பெரிய கற்கள் தொடர்ச்சியாக சரிந்து விழுந்து வருகின்றன. அதனால் மக்கள் அச்சத்தில் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் அண்மையில் பெய்த அடை மழையால் கல்லொன்று சரிந்து விழுந்துள்ளது.

இந்தக் கல்லினால் தொழிலாளர் குடியிருப்புத் தொகுதியொன்று முற்றாகச் சேதமடைந்துள்ளது.

இந்தநிலையில் மீண்டும் ஒரு கல் சரிந்துவரும் அபாய நிலையில் இருப்பதை அவதானித்த மக்கள் பீதியுடன் காணப்படுகின்றனர்.

**மீண்டும் ஒரு கல் சரிந்து வரும் அபாய நிலையில் இருப்பதை அவதானித்த மக்கள் பீதியுடன் காணப்படுகின்றனர்.**

இவ்வாறான நிலைமைகளில் இருந்து மக்களை காப்பாற்றுவதற்கு சம்பந்தப் பட்ட அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரிக்கு

# புதிதாக நியமிக்கப்பட்ட அதிபர் கடமையை பொறுப்பேற்கவும்

## இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

கல்முனை,ஜன.22

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரிக்கு புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள அதிபர் உடன் கடமைகளை பொறுப்பேற்க நடவடிக்கை வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவிடம் இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுகுறித்து இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கல்முனையின் பிரபல பாடசாலையான மஹ்மூத் மகளிர் கல்லூரியில் சில மாதகாலமாக நிலவிவரும் அதிபர் பதவி நியமன சிக்கலால் அந்தப் பாடசாலையின் நிர்வாக முகாமைத்துவம் வலுவிழந்துள்ளது.

**அதிபர் கடமைகளை உடன் பொறுப் பேற்க நடவடிக்கை எடுக்க வேண்டும்**

தற்காலிகமாக அதிபர் பதவிகளில் அமர்த்தப்படுவோரால் அந்தப் பாடசாலையின் நிர்வாகத்தை செம்மையாக வழிநடத்திச் செல்வதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது என்று பெற்றோர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்தப் பாடசாலைக்கான நிரந்தர அதிபர் நியமனத்தை தகைமையுள்ளவருக்கு வழங்குமாறு ஆசிரியர் தொழிற் சங்கங்கள் கோரிக்கை விடுத்துவந்தன.

அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையில் அதிபராக கடமை புரிந்த எச்.எம். பாறுக் நியமனம் செய்யப்பட்டார்.

எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் கடமையைப் பொறுப்பேற்குமாறு மாகாணக் கல்வித் திணைக்களம் குறித்த அதிபரிடம் கோரியுள்ளது.

எனவே குறித்த அதிபர் கடமைகளை உடன் பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# யுத் பாம் கிராமத்துக்கு கிடைத்தது மின்சாரம்

மட்டக்களப்பு,ஜன.22

மட்டக்களப்பு, போரதீவுப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் நீண்ட காலமாக மின்சாரம் வழங்கப்படாதிருந்த யுத் பாம் கிராமத்துக்கான மின்சாரம் நேற்று திங்கட்கிழமை வழங்கப்பட்டது.

இந்தக் கிராமத்துக்கு மின்சாரம் வழங்க ளி பொருள் துறை அமைச்சு சுமார் ஒரு கோடி 40 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள் ளது.

இந்தப் பிரதேசத்தின் மக்கள் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையிலேயே மின்சாரம் வழங்கப்பட்டது.

யுத்பாம் பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தலைமையில் இடம்பெற்ற இந்த மின்விநியோக ஆரம்ப நிகழ்வில் மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கலந்துகொண்டார். (ச)

# துப்பாக்கி வெடித்து ஒருவர் உயிரிழப்பு

அம்பாறை,ஜன.22

அம்பாறை, உஹன, லாகுகல பிரதேசத்தில் துப்பாக்கி ஒன்று வெடித்ததில் நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தந் சம்பவத்தில் உயிரிழந்த நபர் உஹன பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிலும் கவனமுடன் செயற்படுங்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். வெளிவட்டாரத்தில் புதிய அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் கடின உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**இடபம்:** நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை, தாமதங்கள் ஏற்படும். சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த விடயங்களைப் பகிர்ந்துக் கொள்ளாதீர்கள். முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியம் வேண்டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பொறாமை பிரச்சினைகள் வந்து செல்லும்.

**மிதுனம்:** ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளை செய்து முடிக்க வேண்டிய நிலை ஏற்படும். அயலார் சிலரின் செயற்பாடுகளால் கோபம், எரிச்சல் அடையலாம். அரச காரியங்கள் இழுபறியாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் ஏற்படும்.

**கடகம்:** மனசாட்சிக்கு விரோதமின்றிச் செயற்பட வேண்டுமென நினைப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** எதிலும் அவசரப்பட வேண்டாம். பணவரவு திருப்தி தரும். பழைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். உறவினர்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார்.

**நாளை**

தை -10 புதன்கிழமை 23.01.2013
திதி: துவாதசி பி.இ. 05.59 வரை
நட்சத்திரம்: ரோகிணி காலை 08.36 வரை
சுபநேரம்: 05.56- 06.36 வரை
ராகுகாலம்: 12.36- 02.06 வரை

**துலாம்:** புதிய முயற்சிகள் இழுபறி ஏற்படும். யதார்த்தமாக நீங்கள் பேசுவதைக் கூட சிலர் தவறாகப் புரிந்துக் கொள்வார்கள். யாரையும் முழுமையாக நம்ப வேண்டாம். வியாபாரத்தில் பணியாள்களால் பதற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைகழிக்கப்படுவீர்கள்.

**விருச்சிகம்:** உறவினர்களின் அன்புத் தொல்லைகள் விலகும். எதிர்பாராத பணவரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**தனுசு:** நவீன மின்னலை சாதனங்கள் வாங்குவீர்கள். வெளிவட்டாரத்தில் கௌரவம் கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**மகரம்:** சகோதரர்களால் பயனடைவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**கும்பம்:** உறவினர்கள் ஒத்துழைப்பார்கள். இங்கிதமாகப்பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். ஆடை, ஆபரணம் சேரும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்து கொள்வீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் அனுபவம் உள்ள வேலையாள்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 3 | 1 | 8 | 2 |
| | | | | | | 6 | | 9 |
| 9 | 8 | | 6 | 4 | | 5 | | |
| 1 | | | | | 9 | 7 | | 6 |
| | | | 8 | 7 | 4 | | | |
| 3 | | 7 | 2 | | | | | 4 |
| | 5 | 4 | | 2 | 1 | | 9 | 8 |
| 7 | | 9 | | | | | | |
| 8 | 1 | 2 | 3 | | | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 6 | 8 | 3 | 7 | 2 | 9 | 4 |
| 7 | 8 | 9 | 2 | 4 | 1 | 6 | 3 | 5 |
| 4 | 2 | 3 | 9 | 5 | 6 | 7 | 1 | 8 |
| 6 | 4 | 2 | 1 | 8 | 3 | 9 | 5 | 7 |
| 1 | 9 | 8 | 5 | 7 | 4 | 3 | 6 | 2 |
| 3 | 5 | 7 | 6 | 2 | 9 | 4 | 8 | 1 |
| 9 | 7 | 4 | 3 | 1 | 5 | 8 | 2 | 6 |
| 2 | 3 | 5 | 7 | 6 | 8 | 1 | 4 | 9 |
| 8 | 6 | 1 | 4 | 9 | 2 | 5 | 7 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
22 * 05 * 1946

மறைவு
17 * 01 * 2011

## அமரர் இராசா முருகையா

திதி: ஏகாதசி

இமைகள் மூடித் திறப்பதற்குள் வருடங்களோ இரண்டாகின-அப்பா
நாம் வாழும் நாள்களில் உம் நினைவுகள் எம்முடன் வாழும்............

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கந்தரோடை மேற்கு,
சுன்னாகம்.

(28139)(5.6.7)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



மண்மகிழ
17 * 05 * 1950

கண்நெகிழ
03 * 02 * 2012

## அமரர் கந்தப்பு செல்வராசா

(முன்னாள் காசாளர்-கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம்)

கடந்த 2012.02.03 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு அமரர் கந்தப்பு செல்வராஜாவின்முதலாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் அன்னாரது இல்லத்தில் இன்று (22.01.2013) செவ்வாய்க்கிழமை நடைபெறும்.
அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இடைக்குறிச்சி, வரணி.

குடும்பத்தினர்.
செ.பொன்னம்மா
செ.ரஞ்சனா(லண்டன்)
செ.சர்மிளா
செ.கார்த்திகா
செ.சுஜிதரன்
(ஆஸ்திரேலியா)
செ.ராதிகா

(28361)(5.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நுவரெலியா, ஹாவாஎலியா பகுதியில் கட்டப்பட உள்ள உள்ளூர் விமானநிலைய பகுதிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சென்று விமான நிலையத்துக்கான வரைபடத்தை பார்வையிட்டார். அருகில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரட்ண, அமைச்சர் சி.பி. ரட்ணாயக்க, விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் ஹர்ஷ அபேவிக்கிரம ஆகியோர் காணப்படுகின்றனர்.

## புதிய நிலக்கீழ் எண்ணெய் குழாய் திட்டம் விரைவில்

கொழும்பிலிருந்து கொலன்னாவை எரிபொருள் களஞ்சிய சாலை வரை செல்லும் புதிய நிலக்கீழ் எண்ணெய்க் குழாய் திட்டம் விரைவில் செயற்படுத்தப்படவுள்ளது.

இவ்வாறு பெற்றோலிய வளத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. தற்போது காணப்படும் நிலக்கீழ் எண்ணெய் குழாய்க் திட்டம் 40 வருடங்கள் பழைமையானது என்று அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

புதிய நிலக்கீழ் எண்ணெய்க் குழாய்த் திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது என்று பெற்றோலிய வளத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

## ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை இரத்து; இலங்கைக்கு தொடர்ந்தும் பாதிப்பு

கொழும்பு,ஜன.22

ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்பட்ட ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகைத் திட்டம் ரத்துச் செய்யப்பட்டமையால் இலங்கைக்கு தொடர்ந்தும் பாதிப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

வரிச் சலுகை இழக்கப்பட்டதனால் தொடர்ந்தும் தொழிற்சாலைகள் மூடப்பட்டு வருவதுடன், ஆயிரக் கணக்கானவர்கள் தொழில் வாய்ப்புக்களை இழந்து வருகின்றனர்.

இலங்கையிடமிருந்து பறிக்கப்பட்ட ஜி.எஸ்.பி. சலுகைத் திட்டத்தின் நலன்கள் பங்களாதேஷுக்கு வழங்கப்பட்டுள்ளதால் இலங்கையின் நலன்கள் வீழ்ச்சியடைந்துள்ளன என்று பொருளியலாளர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சலுகைத் திட்டத்தின் மூலம் நலன் பெற்று வந்த இரண்டு தொழிற்சாலைகள் கடந்த 2 ஆம் திகதி மூடப்பட்டன.

இந்தச் சலுகைத் திட்டத்தின் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் நன்மை பெற்றுக் கொண்ட பலர் பாதகமான விளைவுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தச் சலுகைத் திட்டம் ரத்துச் செய்யப்பட்டமையால் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என்று இலங்கை அரசு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## இயற்கையின் சீற்றமே விளைச்சலில் மாற்றம்

### அரசை விமர்சிப்பது அர்த்தமற்ற செயல் என்கிறார் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ



கொழும்பு,ஜன.22

இயற்கையின் சீற்றத்தால் விளைச்சலில் ஏற்பட்ட மாற்றத்துக்கு அரசியல்வாதிகளையோ, அரசையோ குறை கூறுவது நியாயமற்ற செயலாகும்.

இவ்வாறு கூட்டுறவு மற்றும் உள்ளூர் வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காய்கறிகளின் விலைகளில் திடீர் அதிகரிப்பு ஏற்படக் காரணம் அரசின் திட்டமிட்ட செயல் என்று எதிர்க் கட்சியினர் குறை கூறி வருவதை ஏற்க முடியாது.

கடந்த காலத்தில் தொடர்ச்சியாகப் பெய்த அடைமழை மற்றும் அதனால் ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவு போன்ற இடர்களினால் பயிர் நிலங்கள் சேதமடைந்துள்ளன. விளைச்சல் ஒப்பீட்டளவில் குறைவடைந்துள்ளது.

அதன் காரணமாகவே காய்கறிகளின் விலைகள் அதிகரித்தன. அது இயற்கையால் ஏற்பட்ட மாற்றமாகும். வருடந்தோறும் இவ்வாறான இயற்கைக் காரணங்களால் காற்கறிகளின் விலைகளில் ஏற்ற, இறக்கம் ஏற்படுவது வழமையாகும்.

இந்தநிலைமை இன்னும் சில வாரங்களில் மாற்றமடையும். எனவே விளைச்சல் வழமைக்குத் திரும்பிவிடும் என்பதால் மரக்கறி வகைகளை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

மரக்கறிகளுக்கு அசாதாரணமான முறையில் விலை அதிகரிப்பை மேற்கொள்ளும் வியாபாரிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.-என்றார். (ச)

## சிறுவர் துஷ்பிரயோகத்தால் பாதிப்புறுவோருக்கு

# சகல வைத்தியசாலைகளிலும் தனியான மருத்துவப் பிரிவு

கொழும்பு,ஜன.22

சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படும் பிள்ளைகளுக்குச் சிகிச்சைகளை வழங்குவதற்கு சகல வைத்தியசாலைகளிலும் தனியான மருத்துவப் பிரிவுகளை நிறுவச் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி அனோமா திசாநாயக்க சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படும் பிள்ளைகள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட பின்னர் பல்வேறு தொல்லைகளை எதிர்கொள்ள நேரிடுகின்றது என்று அனோமா அமைச்சரிடம் சுட்டிக்காட்டினார்.

துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்ட முறை தொடர்பாக விடுதிகளில் வந்து பலரும் விவரம் கேட்கின்றனர். இவ்வாறு மீண்டும், மீண்டும் அவர்களிடம் வினாக்கள் எழுப்பப்படுவதால் பிள்ளைகள் உளரீதியாகப் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படும் பிள்ளைகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காகச் சகல பிரதான வைத்தியசாலைகளிலும் தனியான மருத்துவப் பிரிவுகளை நிறுவவேண்டும்.

சிறுவர்களின் இரகசியத் தன்மையைப் பேணிப் பாதுகாப்பாகச் சிகிச்சை வழங்க வேண்டும் என்று அனோமா திசாநாயக்க அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இது தொடர்பான சுற்றறிக்கையை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்தப் பிரிவை சகல பிரதான வைத்தியசாலைகளிலும் அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர்களுக்கு அறிவிக்குமாறு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அமைச்சின் செயலருக்கு உத்தரவிட்டார்.

இந்தத் திட்டத்தின் முதலாவது பிரிவு பொரளை லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையிலும், கொழும்பு தேசியவைத்தியசாலையிலும் ஆரம்பிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## நாட்டின் கல்வித்துறை சிரியாவைப் போன்றது சுகாதாரத்துறையோ லிபியாவைப் போன்றது



நாட்டில் டிசெம்பர், ஜனவரி மாதங்களில் நிலவும் காலநிலையை கருத்தில் கொண்டு உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

கொழும்பு,ஜன.22

நாட்டின் கல்வித் துறை சிரியாவைப் போன் றும், சுகாதாரத்துறை லிபியாவைப் போன்றும் மாறியுள்ளது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தொடங்கஸ்லந்த பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிஸ்கட் பைக்கற் ஒன்றை எடுத்துக் கொண்டால் அதில் கலாவதியாகும் திகதி காணப்படும். அதேபோன்று இந்த அரசு கலாவதியாகும் திகதி அடுத்த ஆண்டாகும்.

அரசின் நிர்வாகச் சீர்கேடே மரக்கறி மற்றும் உணவுப் பொருள்களுக்கான விலை உயர்வுக்குக் காரணம். கத்தரிக்காய் ஒரு கிலோ 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

நாட்டில் டிசெம்பர், ஜனவரி மாதங்களில் நிலவும் காலநிலையை கருத்தில் கொண்டு உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

அரசின் மீதான எதிர்ப்பலை வலுப்பெற்று வருகின்றது.-என்றார். (ச)

## பிரதம நீதியரசர் தலதா மாளிகை சென்று வழிபாடு



கொழும்பு,ஜன.22

பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தலதா மாளிகைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

தலதா மாளிகைக்குச் சென்ற பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸை தியவதன நிலமே பிரதீப் திலங்க வரவேற்றார். விசேட அதிதிகளுக்கான ஞாபகார்த்த புத்தகத்திலும் பிரதம நீதியரசர் கையெழுத்திட்டார்.

இந்த நிகழ்வில் கண்டி மாவட்ட நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

வழிபாடுகளின் பின்னர் பிரதம நீதியரசர் மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசிபெற்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் அகதிகள் எண்ணிக்கையில் வீழ்ச்சி

### கடற்படை தெரிவிப்பு

கொழும்பு,ஜன.22

ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் அகதிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டு சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் அகதிகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

ஆஸ்திரேலிய அரசின் புதிய குடிவரவு கொள்கை மற்றும் கடற்படையினரின் கண்காணிப்பு நடவடிக்கை காரணமாக அகதிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று கடற்படையினர் குறிப்பிட்டனர்.

சட்டவிரோதமான முறையில் ஆபத்தான வழிகளில் படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முயற்சிக் கும் அகதிகளை தடுக்கும் நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் என்று கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டில் சுமார் 3000 இற்கும் மேற்பட்டவர்கள் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்றவேளை கைதுசெய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## ஆள்கடத்தலில் தொடர்புடைய அரசியல்வாதிகளை மடக்கிப் பிடித்து கைதுசெய்ய நடவடிக்கை

கொழும்பு,ஜன.22

சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளை மடக்கிப்பிடித்து கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு பாதுகாப்புடன் தொடர்புடைய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. ஆளும் மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் இவ்வாறு சட்டவிரோத ஆள் கடத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு தொடர்பில் தேசிய புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பை அண்மித்த பிரதேசங்களிலும், கரையோரங்களை அண்மித்த பிரதேசங்களிலும் இவ்வாறு சட்டவிரோதமான முறையில் பலர் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பை சேர்ந்த ஆளும்கட்சி அரசியல்வாதி ஒருவர் இராஜதந்திர வரப்பிரசாதங்களைப் பயன்படுத்தி சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார் என்று கூறப்படுகிறது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை ஆள்கள் தேவை

தையல் வேலை தெரிந்த மற்றும் பழக விரும்பும் பெண் பிள்ளைகள் தேவை. பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவு பேசித் தீர்மானிக்கப்படும். அத்துடன் தூர இடங்களிலிருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதிகளும் உண்டு.

தொடர்பு :ஆகாஸ் காமன்ஸ்/ அபி புரடக்ஸன்
இல. 18, காளி கோயில் வீதி, மீசாலை மேற்கு,
மீசாலை. 0776701495

(C/2886)(6.7.11)

# இராணுவ சிப்பாய் விடுதலை

யாழ்ப்பாணம்,ஜன.22

கைக்குண்டு வீசி இரண்டு பேரைக் கொலை செய்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட இராணுவச் சிப்பாய் யாழ்.மேல் நீதி மன்றத்தில் விசாரணைகளின் பின்னர் நிரபராதி என விடுதலை செய்யப்பட்டார்.

யாழ். மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே. விஸ்வநாதன் முன்னிலையில் இந்த வழக்குத் தீர்ப்புக்காக நேற்று எடுத்துக் கொள்ளப் பட்டது. இதன் போது சிப்பாய் நிரபராதி என விடுதலையானார். 1995 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பூநகரி இராணுவ முகாமில் இந்தச் சப்பம் இடம் பெற்றது. சம்பவத்தில் கந்தகே ரதாகே ரஞ்சித் , ஹப்புவாகே நந்தபால ஆகிய இருவரும் கொல்லப்பட்டனர்

இந்தக் குற்றச் சாட்டில் குருநாகல், கொடுகச்சிய எனும் இடத்தைச் சேர்ந்த ஹேரத் முதியான் சலாகே சமிந்த ஜானக ஹேரல் என்பவருக்கு எதிராக காங்கேசன் துறைப் பொலிஸார் மல்லாம் நீதிமன்றில் வழக்கை தொடர்ந்தனர். மேலதிக விசாரணைக்காக யாழ்.மேல் நீதி மன்றுக்கு மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-4)

## லொறி விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 43 - XXXX தொடரிலக்க முடைய இசுசு லொறி உடன் விற்பனைக்கு.

T.P:077 2887742

(26588) (6.7.4)

## நீங்காத நினைவுகளுடன் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
21.04.1927



விண்ணில்
03.02.2012

### அமரர் திருமதி ஆச்சிமுத்து முருகப்பா

திதி: பூர்வபக்க ஏகாதசி

அன்பு மொழி பேசி அரவணைத்து எமைக்காத்து
பண்புடனே நாமும் பரணியிலே வாழ வழி காட்டி
வானுறையும் தெய்வமாகிய அம்மாவே!- என்றும் மறப்போமா!
உங்கள் நினைவை ஆண்டொன்று சென்றாலும் ஆறாத துயருடனே
உள்ளத்து உணர்வுகளில் உயிர்ப்புடன் நிலைத்திருக்கும்
அன்புக்காய் ஏங்குகின்றோம்.

கச்சாய் வடக்கு,
கொடிகாமம்.

உங்கள் நினைவுகளுடன்...
குடும்பத்தினர்.

(c/5772)(6.7.11)

## மரண அறிவித்தல்

### நல்லையா சோமநாதன்

(முன்னாள், விவாகப் பதிவாளர்)

முல்லைத்தீவு, கரைச்சிக் குடியிருப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட நல்லையா சோமநாதன் (முன்னாள், விவாகப் பதிவாளர்) நேற்று முன்தினம் (20.01.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சுதாகரன் (ஆஸ்திரேலியா), உமாசுதன் (யாழ். போதனா வைத்தியசாலை), ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானேஸ்வரி (ஆஸ்திரேலியா), வைதேகி(யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும்,ஈஸ்வனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(23.01.2013) புதன்கிழமை மு.ப. 10மணியளவில் முல்லைத்தீவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர் மற்றும் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

11, கரைச்சிக் குடியிருப்பு,
முல்லைத்தீவு.

தகவல்:
உமாசுதன்.
077 723 8378

(28589)(6.7.11)

## சடலம் ஒப்படைப்பு

தூக்கிட்டு மரணமானதாகத் தெரிவித்து பருத்தித்துறை அரசின் ஆதார வைத்தியசாலையில் சடலம் ஒன்று உறவினரால் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

தும்பளை தெற்கைச் சேர்ந்த, கந்தையா ஜெயரட்டணம் (வயது-32) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையின் சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டது.

பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.மரண விசாரணை அதிகாரி பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு, பின்னர் சடலத்தை உறவின்களிடம் ஒப்படைக்கப் பணித்தார். (ஐ-8)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
28.09.1930

மறைவு
23.12.2012

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் கதிரமலைச் சிவன் கோயிலடி சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்
### முத்துத்தம்பி இராசமலர்

அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (22.01.2013) செவ்வாய்க்கிழமை சுன்னாகம் கதிரமலைச்சிவன் கோயில் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன், அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கதிரமலைச் சிவன் கோயிலடி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(28387)(6.7.11)

## மரண அறிவித்தல்

### வேலாயுதம் தர்மஞானசிங்கம்

(சிங்கம் ரயர்கடை உரிமையாளர்)



இணுவிலைப் பிறப்பிடமாகவும், முல்லைவீதி, பரந்தனை வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதம் தர்மஞானசிங்கம் (21.01.2013) நேற்று திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பூபதியின் அன்புக் கணவரும் முரளிதரன் (கனடா), ஜீவாகரன் (லண்டன்), பிறேமலதா (கனடா),தர்சினி (ஆசிரியை, நீர்கொழும்பு விஜயரட்ணம் இந்து மகாவித்தியாலயம்), குலசீலன் (சுவையருவி- மல்லாகம்), அஜந்தா(ஆசிரியை,யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) பரந்தாமன்(ரயர்கடை), இராஜ குமார் (தமிழினி பந்தல் சேவை),சாந்தி ஆகியோரின் அன்புத் தந்தை யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (23.01.2013) புதன்கிழமை பரந்தனில் உள்ள அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முல்லை வீதி, பரந்தன்.

தகவல்:
குடும்பத்தினர்.

(26302)(5-6-7)

## O/L பெறுபேறுகள் வரும்வரை
**Professional Computer Training**

ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கு
- Ms Office Application
- Desktop Publishing
- Web Designing
- Graphic Design

4900/= மட்டுமே!

காலம் : 3 மாதங்கள்

பல்கலைக்கழக மாணவர்களுக்கு
60% - 75% Offer

- Tally — Financial Accounting Programme — Duration : 2-3 Months
- Advanced (ADJP) — JAVA Programming — Duration : 3 Months
- Master (MASD) — Diploma in Multimedia (Graphics & Animation) — Duration : 6 Months

60% Discount
சிறப்பு கட்டணச்சலுகை
10.02.2013 வரை மட்டுமே.


- DiTEC — Diploma in Information Technology
- DiWP — Diploma in IT & Web Programming
- DCA — Diploma in Computer Application
- ADCHN — Adv. Diploma in Hardware & Networking
- DVP — Diploma in Digital Video Production

புதிய பிரிவுகள் 24, 27, 29
முற்பகல் 10 மணிக்கு ஆரம்பம்

CSC-ASIAN COMPUTER EDUCATION

| யாழ்.நகரில் | நெல்லியடியில் | சாவகச்சேரியில் | கிளிநொச்சியில் |
| --- | --- | --- | --- |
| 2G, ஸ்ரான்லி வீதி, | கொடிகாமம் வீதி, | கட்டுக்காணி வீதி | A9 வீதி, ஆனந்தபுரம் |
| T.P : 021-222 5677 | T.P : 021-2262399 | T.P : 021-2270267 | T.P : 021-2283925 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக்கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# கரவெட்டிப் பிரதேச சபைக்கு வேலை மேற்பார்வைக் குழுக்கள்

வடமராட்சி, ஜன.22

கரவெட்டி, வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையின் வேலைகளை மேற்பார்வை செய்வதற்கென சபை உறுப்பினர்கள் அடங்கிய 6 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

சுகாதாரம் சம்பந்தமான ஆயுள்வேதம், சுகாதாரப் பணியாளர், திண்மக் கழிவகற்றல் ஆகியவற்றுக்கான குழுவில் நெல்லியடி, உடுப்பிட்டி, கட்டைவேலி ஆகிய உப அலுவலகங்களுக்கென தனித்தனியே குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இந்தக் குழுவில் நெல்லியடி உப அலுவலகத்துக்கென 4 பேரும் கட்டைவேலி உப அலுவலகத்துக்கென 3 பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வீதிகள், கட்டட விண்ணப்பங்கள் தொடர்பான அனுமதியற்ற கட்டடங்கள், வேலைப் பணியாளர்களை மேற்பார்வை செய்வதற்கான குழுவில் 6 பேரும்-

நீர் விநியோகம் சம்பந்தமான குழுவில் 4பேரும், சந்தைகள் இறைச்சிக் கடைகள், கடைகளைக் கண்காணிப் பதற்கான குழுவில் 6 பேரும்-

கொல்களம், மயானம், முன்பள்ளி, சனசமூக நிலையங்களின் நடவடிக்கைகளைக் கவனிக்க 7பேர் கொண்ட குழுவும், உப அலுவலகங்களைக் கண்காணிக்க 3 பேர் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுக்களில் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-8)




உரும்பிராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயிலின் வருடாந்த பெருந்திருவிழா கடந்த 16 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

பெருந்திருவிழா வரிசையில் எதிர்வரும் 25 ஆம் திகதி சப்பரத் திருவிழாவும், 26ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 27ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (3)

★ ★ ★

சுழிபுரம், ஜன.22

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை நண்பகல் நடை பெறவுள்ளது. முன்னதாக கிரியைகள் காலை 8மணிக்குஆரம்பமாகும். (3)

# 'பளிச்' சென சீரடைந்தது கல்லுண்டாய் வெளி

**மாநகர சபையின் நடவடிக்கையால்**



கல்லுண்டாய் வெளியில் கொட்டப்படும் கழிவுகளால் மேடாகக் காணப்பட்ட இடத்தை, யாழ். மாநகர சபை இயந்திரங்கள் மூலம் சீராக்கியுள்ளது. இனிவரும் காலங்களில் அந்தப் பகுதியில் சுகாதாரப் பாதிப்புக்கள் ஏற்படாமல் பாதுகாப்பதற்கு துரித நடவடிக்கையும் மேற் கொண்டுள்ளது.

இதன் மூலம், கொட்டப்படும் திண்மக் கழிவுகள் உடனுக்குடன் பரவப்பட்டு கிருமிநாசினி தெளிக்கப்பட்டு அதற்குமேல் மணல் போட்டு மூடப்பட்டு வருகிறது. அத்துடன் தொழிலாளர்களை கொண்டு காற்றினால் பரவப்படும் பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருள்கள் சேகரிக்கப்படுகின்றன.

கழிவுகள் எரிப்பது நிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் 24 மணி நேரமும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள காவலாளிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என மாநகர ஆணையாளர் செ.பிரணவநாதன் தெரிவித்துள்ளார். (3)

## 13 வருடங்களின் பின் கால்கோள் விழா

பளை, ஜன.22

13 வருடங்களின் பின்னர் பளை வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலையில் தரம் ஒன்றில் மாணவர்களை இணைக்கும் கால்கோள் விழா கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

பாடசாலை அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு இத்தாவில் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் செ.மார்க்கண்டு முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

2000 ஆம் ஆண்டுஇடம் பெயர்வின் பின்னர் பாடசாலை கடந்தவருடம் மூன்றாம் தவணைக் காலத்தில் மீள ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3-9)

# புகலிடக் கோரிக்கையாளர் 7 பேர் இலங்கைக்குத் திரும்ப தீர்மானம்

ஆஸ்திரேலியாவுக்கு புகலிடம் கோரிச் சென்றவர்களில் ஒரு தொகுதி புகலிடக் கோரிக்கையாளர்கள் இலங்கைக்குத் திரும்புவதற்குத் தீர்மானித்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவுக்கு வெளியேயுள்ள தடுப்பு முகாமில் தாம் விசாரணைக்கு உட்படுத்துவதை விட, இலங்கைக்குத் திரும்புவதே மேலென புகலிடக் கோரிக்கையாளர்கள்தெரி வித்துள்ளனர்.

இந்த 7 பேருடன் இலங்கைக்கு சுய விருப்பின் பேரில் திரும்பியோர் தொகை 213 ஆக உயர்ந்துள்ளது. நவுறு மற்றும் மனுஸ் தீவில் விண்ணப்பங்களை பரிசீலிக்கவுள்ளதாக ஆஸ்திரேலியா அறிவித்த பின் மொத்தமாக இலங்கை திரும்பியோர் எண்ணிக்கை 942 ஆகிவிட்டது.

இந்த 7 பேரையும் ஆஸ்திரேலியாவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு வெளியே யுள்ள தடுப்பு முகாமுக்கு மாற்றியதையடுத்து இவர்கள் தாமாகவே இலங்கை திரும்ப தீர்மானித்ததாக குடிவரவு திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் கூறினார். (3)

## கடற்கரை வீதிக்கு 'காப்பெற்' புனரமைப்பு இன்றி குறுக்கு வீதிகள்

பாசையூர் கடற்கரை வீதிக்கு 'காப்பெற்' போடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த வீதி ஏற்கனவே அகலிக்கப்பட்டு புனரமைக்கப்பட்டது.

தற்போது பாசையூர் பிரதான வீதியில் இருந்து காப்பெற் போடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேசமயம் பாசையூரில் குறுக்கு வீதிகள் சில புனரமைப்பு இன்றி காணப்படுகின்றன. அவை சேதமடைந்துள்ளதால் இந்த வீதியூடாக பயணிக்கும் மக்கள் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (3-17)

# நல்லூர் பிரதேச வீதிகளுக்கு 900 மின் விளக்குகள்

யாழ்ப்பாணம், ஜன.22

நல்லூர் பிரதேச சபை தனது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இதுவரை 900மின் விளக்குகளை வீதி வெளிச்சங்களுக்காகப் பொருத்தியுள்ளது. சபை உறுப்பினர்கள் ஊடாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மக்கள் மீள்குடியமர்ந்த அரியாலைப் பகுதியில் மட்டும் 136 மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன என்று பிரதேச சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

இதேசமயம் 2012 ஆம் ஆண்டில் சனசமூக நிலையங்களின் அபிவிருத்திக்கென சபை 44 சனசமூக நிலையங்களுக்கு நிதியுதவி அளித்துள்ளது. வழங்கப்பட்ட நிதி உரியமுறையில் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படவில்லை எனக் காணப்பட்டால் 2013 ஆம் ஆண்டுக் கான அபிவிருத்தி உதவி நிதி அந்த நிலையங்களுக்கு வழங்கப்படமாட்டாது என்று சபையின் அபிவிருத்திக் குழு தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (3-7)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம்
14.09.1924



மறைவு
03.02.2012

திருமதி
**கனகரட்ணம் மகேஸ்வரி**



அன்பைப் பொழிந்தீர் - அனைவர்க்கும்
ஆதரவு காட்டினீர் - இன்று
இன்முகத்துடனேயே ஈசனடி சென்றுவிட்டீர்
உம் அன்பு ஆன்மா அடைக என்றும் சாந்தி.....

கற்குழி வடக்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
தொ.பே.இல- 0776412839

(5742)(6.7.11)

**J.C.B.BACKHOE இயந்திரம் வாடகைக்கு**

Loader & Tipper



பழைய கட்டடங்களை இடித்து துப்புரவு செய்யவும் காணிகளைத் துப்புரவாக்கி மட்டப் படுத்தவும் பாதைகளைச் சீர்செய்யவும் மணித்தியாலக் கணக்கில் வாடகைக்கு விடப்படும்.
மற்றும் டிப்பரும் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு:
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0776035633, 077 6420731
0777279151, 075 0695726 (28584)(5.67)

**மரண அறிவித்தல்**

**திருமதி பூபதி சிவலிங்கம்**



சைவமடம் கட்டுவனைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வதிவிடமாகவும் கொண்ட சிவலிங்கம் பூபதி நேற்று (21.01.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா சிவலிங்கம் (முன்னாள் அதிபர், தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், சரஸ்வதி,ஆனந்தசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,காலஞ்சென்ற கிருபைக்குகன், மற்றும் சிவனேசகுகன், சிவராணி (மலர்), காலஞ்சென்றவர்களான விவேகானந்தன், அருளானந்தம் மற்றும் சோமநாதன், சிவபூபதி (கௌரி) ஆகியோரின் அன்புத்தாயாரும், வள்ளிநாயகி (ஊர்காவற்றுறை பல நோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளர்), புவிமன்னசிங்கம்(சாயி பிறிண்டேர்ஸ்), சிவசக்தி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை ஆசிரியர்),இராசகுலேந்திரன் (அண்ணா தொழிலகம், மருதனார் மடம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கம்ஷாயினி, சிவநந்தினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2013) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 1.00 மணியளவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமாரசிங்கம் வீதி,
இணுவில் கிழக்கு, இணுவில்.
T.P:0770711938

தகவல்:
குடும்பத்தினர்.

(25581)(6.7.11)

## சிமெந்துக் கலவை வீதிக்கு முன்மொழிவு

எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலை வீதியை சிமெந்து கலவை வீதியாக மாற்ற சாவகச் சேரி பிரதேச சபையில் முன் மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கனரக வாகனங்களின் பாவனை மற்றும் குண்டு வீச்சுக்களால் இந்த வீதி சேதமடைந்து காணப்பட்டது. சேதமடைந்த இந்த வீதியினூடாக பொது மக்கள் பலத்த சிரமங்களின் மத்தியில் போக்குவரத்தை மேற் கொண்டு வருகின் றனர்.

மக்களின் போக்குவரத்தை சீர்செய்தவற்காக பிரதேச சபை உறுப்பினர் இ.தெய்வேந்திரம் பிள்ளை வீதி புனரமைப் புக்கான முன்மொழிவைச் சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.(3-9)

**மரண அறிவித்தல்**

**பொன்னம்பலம் இராசநாயகம்**



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் இராசநாயகம் 18.01.2013 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற பொன்னம்பலம்-தில்லைமுத்து தம்பதியரின் அன்பு மகனும், சங்குவேலி, மானிப்பாயைச் சேர்ந்த பாலகிருஸ்ணன்-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், மாலினியின் அன்புக் கணவரும், மிதுஷனின் அன்புத்தந்தையும் இராசரத்தினம், மங்கையர்க்கரசி காலஞ்சென்ற இராசசேகரம் மற்றும் புஸ்பராணி, தனலட்சுமி (ராசு), இராசகுலசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருநாவுக்கரசு, காலஞ்சென்ற யோகராசா மற்றும் சாரதாதேவி, தவமணி ,சரோஜினிதேவி, சாந்தினி,ராஜசிங்கம்,காமினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஸ்ரீதரன், புஸ்பமாலா, மைக்கல் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் (27.01.2013) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்.இராசரத்தினம்
C/o.S.M.ராஜா
"ராஜபுரம்" லவ்லேன்,உடுவில்,சுன்னாகம். (28582) (6.7.4)

தகவல்:
பொன்.இராசரத்தினம்
(சகோதரர்)
0776926228.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாவது ஆண்டை நோக்கி Marine Grand




ஆறு வருடங்களை அண்மித்து வீறு நடை போடுகிறது மெரைன் கிராண்ட். அழகான வெள்ளவத்தை கடற்கரையின் தென்றல் காற்று வீசிவர வசீகரமாக உயர்ந்து நிற்கும் இந்தக் குளிரூட்டப்பட்ட வரவேற்பு மண்டபம் சகல வசதிகளையும் கொண்டதாக அமைந்திருக்கிறது.

சகல சமயத் திருமணங்கள், வலீமா, பெயர்சூட்டும் வைபவம், பூப்புனித நீராட்டு விழா, பாராட்டு விழாக்கள் என அனைத்து நிகழ்வுகளுக்கும் எழிலான சூழலிலே அழகாய் அமைந்துள்ளதால் இது பிரசித்தி பெற்று விளங்குகிறது. 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் திகதி கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்ட இந்த மண்டபம் எதிர் வரும் மார்ச் மாதம் ஆறாவது ஆண்டை மங்கலகரமாகப் பூர்த்தி செய்கிறது. சகல கொண்டாட்டங்களையும் நடத்துபவர்களுக்கு வசதியாக இந்த மண்டபத்திலேயே மிகச்சுவையான சாப்பாடு ஏற்பாடு செய்துகொள்ள முடியும். பிரபல மிக்க Galle Caterers Group இந்தச் சேவையை சிறப்பாகச் செய்து பாராட்டுக்களைப் பெற்று வருகிறது.

825 விருந்தினர்களுக்கான வசதிகளை உள்ளடக்கிய இரு தளங்கள் அமைந்த இந்த மண்டபத்தில் கொழும்பு மற்றும் வெளிப்பிரதேச மக்களும் மங்கல காரியங்களை மகிழ்வுடன் நடத்திவருகிறார்கள். உரிமையாளர் எம். எம்.எம். சப்ரி சிறப்பான முறையில் வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்தி வருகிறார்.

இல. 41 Station Avenue, Marine Drive, Colombo -06 இல் அமைந்துள்ள இந்தMarine Grand Banquet Hall சகல இன மக்களினதும் வைபவங்களுக்கு உகந்த இடமாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## இளம் பயிலுநருக்கான ஆங்கிலம்திட்டத்தில் சாதனை படைத்த மாணவர்களுக்கு விருதுகள்




லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் தனது 'இளம் பயில்வோருக்கான ஆங்கிலம்' எனும் செயற்றிட்டத்தில் மிகவுயர்ந்த சாதனைகளை நிலைநாட்டியவர்களுக்கு அண்மையில் வெகுமதி வழங்கி கௌரவித்துள்ளது.

திருகோணமலை சீனக்குடா நாலந்தா மகா வித்தியாலயத்தில் இந்தநிகழ்வு இடம்பெற்றது.

தரம் 6 தொடக்கம் 11 வரை கற்கும் ஆண்கள், பெண்கள் என மொத்தமாக 140 மாணவர்கள் இதற்கென உள்வாங்கப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் 54 மணித்தியாலங்களைக் கொண்ட பேச்சு மற்றும் எழுத்து கற்கைப் பணியை உள்ளடக்கிய 09 மாதச் செயற்றிட்டத்தை மேற்கொண்டனர்.

தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் இந்த செயற்றிட்டமானது கிராமப்புறச் சிறுவர்கள், தொடர்பாடலின் ஒரு முறைமைசார் வளமாக ஆங்கில மொழியைக் கற்றுத்தேர்வதற்கான வசதிகளை வழங்குகின்றது.

## வட்டவல பிளாண்டேஷனுக்குத் கிடைத்தது தங்க விருது




சன்ஷைன் குழுமத்திற்கு சொந்தமான வட்டவல பிளான்டேஷன்ஸ் நிறுவனம் பெருந்தோட்டத் துறையில் சிறந்த வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்தமைக்காக தங்க விருதை வென்றெடுத்துள்ளது.

வட்டவல பிளாண்டேஷன்ஸ் தொடர்ச்சியாக இவ்விருதை ஐந்தாவது தடவையாக வென்றெடுத்ததன் மூலம் நிறுவனத்தின் ஆளுமை வெளிப்பட்டுள்ளது.

கூட்டுறவு மற்றும் உள்ளக வர்த்தக அமைச்சின் செயலாளர் ஜி.கே.டி.அமரவர்த்தனவிடமிருந்து வட்டவல பிளாண்டேஷன்ஸ் நிறுவனத்தின் பிரதம நிதி அதிகாரி லலித் குரே விருதினை பெற்றுக்கொண்டார். மேலும் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞரும் கழகத்தின் தலைவருமான சுஜீவ ராஜபக்ஷ, விருது வழங்கும் ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் திஷான் சுபசிங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பத்தரமுல்லையிலுள்ள வோட்டர்ஸ் எட்ஜில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வில் சன்ஷைன் குழுமத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் விஷ் கோவிந்தசாமியும் கலந்துகொண்டார்.

சன்ஷைன் குழுமத்துக்கு இதன்போது சான்றிதழ் ஒன்றும் வழங்கப்பட்டது. அதனை நிறுவனத்தின் பிரதம நிதி அதிகாரி லலித் விதானகே இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் கழகத்தின் முன்னாள் தலைவரிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

## றிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு செலிங்கோ லைவ் கட்டடம் அன்பளிப்பு

டெங்கினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்குப் பிரத்தியேகமாக சிகிச்சைகளை அளிக்கக் கூடிய ஆராய்ச்சி அலகொன்றை லேடி றிட்ஜ்வே சிறுவர் வைத்திய சாலைக்கு செலிங்கோ லைவ் நிறுவனம் அன்பளிப்பாக அமைத்துக் கொடுத்துள்ளது.

இந்தப் பிரிவானது 10.5 மில்லியன் ரூபாவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. செலிங்கோ லைவ் உடன் சில நலன் விரும்பிகள் இணைந்து இந்தப் பிரிவை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

வைத்தியசாலையின் முதலாம் இலக்க விடுதியில் ஐந்து படுக்கைகளைக் கொண்டதாக இந்தப் பிரிவு அமைந்துள்ளது. இந்த விடுதி கொழும்பு வைத்திய பீடத்தின் முகாமைத்துவத்தின்




கீழ் செயற்படும் ஒரு நிபுணத்துவ விடுதியாகும். இதில் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த நிபுணத்துவ வைத்தியர்கள் பணிபுரிகின்றனர். நாட்டின் பிரதான சிறுவர் வைத்தியசாலையின் மிக முக்கிய தேவையொன்று இதன் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த அன்பளிப்பானது செலிங்கோ லைப்பின் 25 ஆண்டு நிறைவை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் நற்பணிகளுள் ஒன்றாகும்.2013 ஜனவரி மாதம் 14ஆம் திகதி இது கொண்டாடப்படவுள்ளது.

டெங்கு காய்ச்சலுக்கு சிகிச்சையளிக்கக் கூடிய விசேட அதி தீவிர கண்காணிப்புப் பிரிவாக செயற்படவுள்ள இந்தப் பிரிவில் வெளி இடங்களில் உள்ள வைத்தியசாலைக்கு வீடியோ மூலம் போதனைகளை அளிக்கக் கூடிய வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

ஆரம்ப கட்டமாக திருகோணமலை, மாத்தறை, எம்பிலிபிட்டிய, மற்றும் நீர்கொழும்பு ரஜரட்டை பல்கலைக்கழகத்தின் சிறுவர் சிகிச்சைப் பிரிவு என்பனவற்றை இந்தப் பிரிவுடன் இணைக்க வைத்திய அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டது -வேற்றுக்கிரக உயிர்கள் பற்றிய தடயம்

உலகில் முதல் தடவையாக வேற்றுக்கிரக உயிர்கள் பற்றிய உறுதியான தடயம் ஒன்றை விஞ்ஞானிகள் இலங்கையில் இருந்து கண்டுபிடித்துள்ளார்கள்.

அரலகன்வில பிரதேசத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்ட எரிகல் துண்டுகளில் இருந்து விசேட அல்கா வகையொன்று கண்டுபிடிக்கப்பட்டதாக பிரிட்டன் - இலங்கை ஒன்றிணைந்த ஆராய்ச்சிக்குழு தெரிவித்துள்ளது.

பக்ஹிங்காம் பல்கலைக்கழகத்தின் வானசாஸ்திரவியல் பேராசிரியர் சந்திரா விக்கிரமசிங்க உள்ளிட்ட குழுவினர் இதனைக் கண்டுபிடித்துள்ளனர்.

வேற்றுக்கிரக உயிரின் இருப்புத் தொடர்பான கோட்பாட்டை உறுதி செய்வதற்குரிய தடயம் இலங் கையில் இருந்து கிடைக்கப் பெற்றுள்ளதாக 'ஜேர்னல் ஒவ் கொஸ்மொலொஜி' என்ற சஞ்சிகை ஆராய்ச்சியாளர்களை மேற்கோள் காட்டி தெரிவித்திருக்கின்றது.

நாம் வாழும் பிரபஞ்சத்தில் உயிர்கள் உருவாவதற்கு வேற்றுக்கிரக மற்றும் எரிகல் தொகுதிகளே அடிப்படையாக அமைந்துள்ளன என்று அந்த ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

புதிய கண்டுபிடிப்புகளுக்கமைய பிரபஞ்சத்தில் ஏனைய கிரகங்களில் உள்ள உயிர் பூமிக்கு வந்திருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (3)

## 2013 தொற்றாத நோய்த் தடுப்பு வருடமாக பிரகடனம்

தொற்றா நோய்த் தடுப்பு வருடமாக இந்த வருடம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

தொற்றா நோய்களின் காரணமாக நாள் ஒன்றிற்கு 650 பேர் மரணமடைவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை நீரழிவு அல்லாத தொற்றா நோய்களும் தற்போது நாட்டிற்கு பெரிய சவாலாக அமைந்துள்ளதென அமைச்சுத் தகவல்கள் தெரி வித்துள்ளன.

தற்போது 10-15 வீதமான பாடசாலை மாணவர்கள் நீரழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

2050ஆம் ஆண்டளவில் நாட்டின் சனத்தொகையில் அரைவாசிப்பேர் நீரழிவு நோயின் பாதிப்பை எதிர்நோக்கக் கூடிய அபாயம் உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (3)

# டில்லி வரும் அமைச்சர் பீரிஸிடம் போர்க்குற்றம் குறித்து விசாரிக்குக


### தமிழக வாழ்வுரிமைக் கட்சி நிறுவுநர் வேல்முருகன் வலியுறுத்தல்

சென்னை, ஜன.22

டில்லியில் வர்த்தக உறவு குறித்துப் பேச வரும் இலங்கை அமைச்சர் ஜி.எல். பீரிஸிடம் போர்க்குற்றங்கள் தொடர்பாக அந்தநாடு என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது என்று விசாரிக்க வேண்டும். இவ்வாறு தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் நிறுவுநர் தி. வேல்முருகன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கை வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜி.எல். பீரிஸ் இன்று டில்லிக்கு வருகை தர உள்ளார். இந்தியா- இலங்கை இடையேயான வர்த்தக உறவு பற்றிய இரண்டு நாள் மாநாடு குறித்துப் பேசப் போகின்றனர். லட்சக்கணக்கான ஈழத் தமிழர்களைக் கொன்றுகுவித்த போர்க்குற்றவாளி இலங்கை அரசு மீது



பொருளாதாரத் தடை கோரி தமிழக சட்ட சபையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில் மன்மோகன்சிங் அரசு கோடிக் கணக்கான தமிழர்களின் உணர்வுகளைக் காயப்படுத்திக் கொண்டு இரத்தக்கறை படிந்த இலங்கை அரசோடு கை குலுக்கிக் கொண்டு வர்த்தக நலன் பற்றி பேசு கிறார்களாம்!

இலங்கையில் கொன்றுகுவிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கோரி சர்வதேச சமூகமே கரிசனை காட்டி வருகிறது. போர்க் குற்றங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்தில் தீர்மானம் நிறைவேற்றி ஓராண்டாகிவிட்டது. ஆனால் ஒரு துரும்பையும் அசைத்துக் கூடப் போடாத ராஜபக்ஷ அரசின் அமைச்சர்களை டில்லிக்கு வரவ ழைத்து லாப நட்டக் கணக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறது மன்மோகன்சிங் தலைமை யிலான காங்கிரஸ் துரோக அரசு.

தமிழரின் சொந்தத் தாயகத்திலேயே அவர்களது குடிப்பரம்பலைக் குறைக்க திணிக்கப்படும் சிங்களக் குடியேற்றங்கள். இதைப் பற்றி கோடிக்கணக்கான தமிழ்நாட்டுத் தமிழர்கள் கொந்தளித்துக் குமுறுவதெல்லாம் மௌனி மன்மோகன்சிங் அரசுக்குத் தெரியவில்லை., அடுத்த மாதம் மீண்டும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் கூட்டம் நடைபெறவுள்ளது. இப்போதும் கூட சிங்கள அரசிடம் போர்க்குற்ற நடவடிக்கைக்கான விளக்கம் கோரவில்லை மத்திய அரசு. டில்லிக்கு வருகை தரும் அமைச்சர் ஜி.எல். பீரிஸிடம் வர்த்தக நலன் பற்றிப் பேசுவதைக் கைவிட்டு தமிழர் வாழ்வுரிமை, போர்க் குற்றவாளிகள் மீதான நடவடிக்கை பற்றி மத்திய அரசு பேச வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி வலியுறுத்துகிறது - என்றுள்ளது. (வ)



அரேபிய நாடுகளின் வேலைவாய்ப்புகளுக்குப் பெண்களை அனுப்பவேண்டாம் என்பது குறித்து மனுவுக்கு கையெழுத்துக்களைப் பெறும் நிகழ்வு ரிஸானா பிறந்த கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கைப்பெண்களை மத்திய கிழக்கு நாடுகளின் வீட்டுப் பணிப்பெண்களாக வேலைக்கு அனுப்புவதை நிறுத்துவது தொடர்பாக சட்டங்களை ஆக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம்கோரிக்கை விடுத்து மனு ஒன்றுஅனுப்பப்படவுள்ளது.

இந்த மனுவில் கையெழுத்துக்களைப்பெறும் செயற்பாடுகள் ரிஸானா நபீக் பிறந்த கிராமம் அமைந்துள்ள மூதூர் பிரதேசத்தில் கடந்த 19 ஆம்திகதி ஆரம்பமானது.

20ஆம் திகதி மூவாயிரத்துக்கும்மேற்பட்டவர்கள் இந்த மனுவில் கையெழுத்திட்டிருந்தனர் என்று மூதூர் சமாதான ஒன்றியத் தகவல் தெரிவிக்கிறது.

மூதூரில் முஸ்லிம் பெண்கள் மனுவில் கையெழுத்திடுகின்றனர். (ம-22)

## 24 மணி நேரமும் செயற்படும் மருதங்கேணி ஆஸ்பத்திரி

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள மருதங்கேணி அரசினர் கிராமிய வைத்தியசாலை தற்போது 24 மணி நேரமும் இயங்கி வருகின்றது.

இந்த வைத்தியசாலைக்கு பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களான மருத்துவர் எஸ். கனகரட்ணம், மருத்துவர் உமாபதி சிவம் ஆகிய இருவரும் இண்டு மாதகால இடைவெளிக்குள் அடுத்தடுத்து நியமிக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து இந்த வைத்தியசாலை இரவு பகலாக இயங்கி வருகின்றது.

அத்துடன் வாரத்தில் ஒரு நாள் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் இருந்து செல்லும் விசேட வைத்தியர்களால் விசேட சிகிச்சைகளும் நடத்தப்பட்டு வருகின்றன. (ம-8)

### பருத்தித்துறை ஆஸ்பத்திரியில்

## ஒரு லட்சத்து 42 ஆயிரம் பேருக்கு வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை

வடமராட்சி, ஜன.22

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் கடந்த வருடம் வெளி நோயாளர் பிரிவில் பல்வேறு நோய்களுக்கு ஒரு லட்சத்து 42 ஆயிரத்து 583 பேர் சிகிச்சை பெற்றுள் ளனர்.

இதே வருடம் வைத்தியசாலை விடுதிகளில் 19 ஆயிரத்து 376 பேர் தங்கிச் சிகிச்சை பெற்றுள்ளனர். கிளினிக் சிகிச்சைப் பிரிவுகளில் 80 ஆயிரத்து 605 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

805 பிரசவங்கள் நடைபெற்றுள்ளன. இந்தப் பிரதேசங்களில் ஒக்ரோபர் மாதம் அதிகூடிய 121 பிரசவங்களும் ஜூலை மாதம் குறைந்த எண்ணிக்கையாக 38 பிரசவங்களும் இடம் பெற்றுள்ளன.

வீதி விபத்துக்களில் சிக்குண்ட 191 பேரும் நஞ்சு, கிருமிநாசினிகளின் தாக்கம் தொடர்பாக 257 பேரும் சிகிச்சை பெற்றனர்.

சிகிச்சைக்காக விடுதியில் அனுமதிக்கப்பட்டவர்களின் சிகிச்சை பயனளிக்காத நிலையில் 70 பேர் மரணமாகினர் சிகிச்சைக்காக இவ் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஆயிரத்து 899 பேர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் வைத்திய சாலை களுக்கு மாற்றப்பட் டிருந் தனர் என்று வைத்திய சாலைப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. (ம-8)

## போக்குவரத்துச்சபை ஊழியருக்கு சீருடை வழங்கக் கோரும் பயணிகள்

யாழ்ப்பாணம், ஜன.22

அசாதாரண சூழ் நிலையான காலத்தில் சீருடையுடன் கடமையாற்றிய வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் வெளிக் கள உத்தியோகத்தர்கள் நாட்டில் அமைதி நிலை திரும்பிய பின்னர் சிவில் உடையில் கடமையாற்றுவது குறித்து பயணிகள் பலர் அதிருப்தி தெரிவித்தனர்.

முன்னைய காலங்களில் இ.போ.ச. பஸ்களில் நடத்துநர்கள், சாரதிகள் மட்டுமன்றி பரிசோதகர்கள் கூட சீருடையுடனேயே கடமையாற்றினர்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை வடமாகாண இ.போ.ச.வாக மாறிய காலம் தொடக்கம் வெளிக்கள உத்தியோகத்தர்கள் சீருடையின்றி சிவில் உடையுடன் கடமை புரிகின்றனர். இதனால் பஸ்களில் ஏறும் பயணிகள், நடத்துநர்கள் யார் என்பது தெரியாமல் ரிக்கற் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பஸ்களில் ரிக்கற் பரிசோதகர்களும் சிவில் உடையில் கடமைபுரிவது குறித்தும் கவலை தெரிவிக்கப்பட்டது.

வடமாகாணத்தில் அரச தனியார் நிறுவனங்களில் கடமையாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் காக்கி உடை அணிவதற்கு இருந்த தடை நீக்கப்பட்டதும் அனைத்து திணைக்கள வெளிக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் காக்கிச் சீருடை அணிந்து கடமையாற்றுகின்றனர்.

ஆனால் இ.போ.ச.வின் வெளிக்கள உத்தியோகத்தர்கள் மட்டும்சிவில் உடையில் கடமைபுரிவது குறித்து பயணிகள் அதிருப்தி தெரிவித்தனர். (ம-9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட மேசைப்பந்து தெல்லிப்பழை சம்பியன்

வலி.வடக்கு, ஜன.22

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான மேசைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி மாவட்ட சம்பியனாகத் தெரிவானது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் முதல் மூன்று நேர் சுற்றுக்களை வென்றே தெல்லிப்பழை பிரதேச செயலக அணி சம்பியனை சுவீகரித்தது.

முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியைச் சேர்ந்த இ.டென்சிகாவும் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணியைச்சேர்ந்த எஸ்.லாவண்யாவும் மோதிக் கொண்டார்கள்.



இந்தச் சுற்றில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியைச் சோந்த டென்சிகா 11: 03, 11 : 07 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியைச் சேர்ந்த ஜே.கீர்த்திகாவும் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணியைச் சேர்ந்த மைதிலியும் மோதிக்கொண்டார்கள்.

இந்தச் சுற்றில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியைச் சேர்ந்த கீர்த்திகா முதல் சுற்றை11:04 என்ற புள்ளி அடிப்படையில் சுவீகரித்தார். ஆயினும் இரண்டாவது சுற்றில் எழுச்சிபெற்ற யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணியைச் சேர்ந்த மைதிலி 11:09 என்ற புள்ளிகள் அடிப்படையில் அந்தச் சுற்றை கைப்பற்ற ஆட்டம் சமநிலையானது. இந்த நிலையில் வெற்றியாளரைத் தீர்மானிக்கும் மூன்றாவது சுற்றை கீர்த்திகா 11:02 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி வெற்றியீட்டினார்.

மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியைச் சோந்த ம.தனுஜாவும் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணியைச் சோந்த எ.நிரோசிகாவும் மோதிக்கொண்டார்கள்.

இந்தச் சுற்றில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியைச் சேர்ந்த தனுஜா 11: 5, 11:09 என்ற புள்ளிகள் அடிப்படையில் வாகை சூடினார். இதனால் தெல்லிப்பழை பிரதேச செயலக வீராங்கனைகள் மேசைப் பந்தாட்டத்தில் மாவட்ட சம்பியனாகத் தெரிவானார்கள். (ங-86-23)

## இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விபரங்கள் வருமாறு:-

பிற்பகல் 3.30 மணி

★ பருத்தித்துறை ஐக்கியம் வி.க. எதிர் மாலி சந்தி மைக்கல் வி.க.

மாலை 4.30 மணி

★ கொற்றாவத்தை சிவானந்தா வி.க. எதிர் சமரபாகு நியூட்டன் வி.க.

★ ★ ★

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் முன்னாள் கழக வீரர்களான சாந்தன், யூட்சன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்குமான 11 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்கு பற்றவுள்ள அணிகளின் விபரம் வருமாறு:-

மாலை 6 மணி

★ இளம்தென்றல் வி.க. எதிர் பிரண்ட்ஸ் வி.க.

★ ★ ★

சரசாலை தெற்கு இலந்தைத்திடல் இளைஞர் கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் சரசாலை இராணுவ அணியை எதிர்த்து நுணாவில் அம்பாள் வி.க. மோதவுள்ளது. (ங-23)

## கழகங்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான 2013 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் திருமதி சு.தெய்வேந்திரம் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கழகங்களின் தலைவர், செயலாளர் ஆகியோரை தவறாது கலந்துகொள்ளும்படி விளையாட்டு அலுவலர் அறிவித்துள்ளார். (ங-86)

# 'ஸ்ரார் ஒவ் வடமராட்சி'கிரிக்கெட் முடிவுகள் சில

கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் 10 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட 'ஸ்ரார் ஒவ் வடமராட்சி' வெற்றிக்கிண்ண துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி கடந்த சனி மற்றும் ஞாயிறு தினங்களில் குஞ்சர் கடையடி கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இதுவரை 8ஆட்டங்கள் நடைபெற்றன. இதில் எஞ்சிய 4 போட்டிகளினதும் முடிவுகள் வருமாறு:–

### ஆட்டம்- 5

**வீனஸ் விளையாட்டுக் கழகம்**
**எதிர்**
**கழுகுகள் விளையாட்டுக் கழகம்**



நந்தகோபன்

முதலில் துடுப்பெடுத்தாடிய வீனஸ் அணி 9.2 பந்துப் பரிமாற்றத்தில் சகல இலக்குகளையும் இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சாருஜன் 17 ஓட்டங்களையும் , பிரதீப் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கழுகுகள் அணி சார்பாக நந்தகோபன் 5 இலக்குகளையும், முரளி 1, கோகுலன் 2 இலக்குகளையும் , திவாகர் 1 இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கழுகுகள் அணி 7.3 பந்துப் பரிமாற்றத்தில் 3இலக்குகளை மாத்திரம் இழந்து 66 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது.

இதில் முரளி 28 ஓட்டங்களையும், திவாகர் 16 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் வீனஸ் அணி சார்பாக தெய்வேந்திரன், விநோதீபன், நிசாந்தன் ஆகியோர் ஒவ்வொரு இலக்கைக் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக கழுகுகள் அணி வீரன் நந்தகோபன் தெரிவுசெய்யப்பட்டார்.

### ஆட்டம்-6

**வல்வெட்டித்துறை ஒற்றுமை விளையாட்டுக் கழகம்**
**எதிர்**
**தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம்**



சுஜீபன்

முதலில் துடுப்பெடுத்தாடிய வல்வெட்டித்துறை ஒற்றுமை அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சுஜீபன் 20 ஓட்டங்களையும், ரவி 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் தொண்டமானாறு ஒற்றுமை அணி சார்பாக மணிவண்ணன் 2 இலக்குகளையும், யோகராஜ், குகனேஸ், தனுசன் ஆகியோர் ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தொண்டைமானாறு ஒற்றுமை அணி 8.5 பந்துப் பரிமரற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 53 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இதில் குகனேஸ் 14 ஓட்டங்களையும், சுரேன் 14 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் வல்வெட்டித்துறை ஒற்றுமை அணி சார்பாக சுஜீபன், பிரதீபன் ஆகியோர் தலா 3 இலக்குகளையும், சஜீபன் , ரவி ஆகியோர் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக வல்வெட்டித்துறை ஒற்றுமை அணி வீரர் சுஜீபன் தெரிவு செய்யப்பட்டார்.

### ஆட்டம்-7

**விநாயகர் விளையாட்டுக் கழகம்**
**எதிர்**
**உதயசூரியன் விளையாட்டுக் கழகம்**



காந்தன்

முதலில் துடுப்பெடுத்தாடிய விநாயகர் அணி 10 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ரஜீபன் 15 ஓட்டங்களையும்,ஜொனி 9 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். உதயசூரியன் அணி சார்பாக கிரிராம், சுஜிந்தன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், நிரோஜன் ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.


பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய உதயசூரியன் அணி 5.5 பந்துப் பரிமாற்றத்தில் 2 இலக்குகளை இழந்து 46 ஓட்டங்களைப் பெற்று வெற்றியை சுவீகரித்தது.

இதில் காந்தன் 18 ஓட்டங்களையும், டிலக்சன் 14 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் விநாயகர் அணி சார்பாக பவிராஜ், ஜொனி ஆகியோர் ஒவ்வொரு இலக்கினைக் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகனாக உதயசூரியன் அணியைச் சேர்ந்த காந்தன் தெரிவுசெய்யப்பட்டார்.

### ஆட்டம்-8

**ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம்**
**எதிர்**
**வல்வை விளையாட்டுக் கழகம்**



ரஞ்சித்

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீமுருகன் அணி 10 பந்துப் பரிமாற்றத்தில் 8 இலக்குகளை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றது.

இந்த அணி சார்பாக உமா 15 ஓட்டங்களையும் திருபரன் 9 ஓட்டங்களையும் பெற்றார். பந்துவீச்சில் வல்வை அணி சார்பாக ஜெகன் 3 இலக்குகளையும், சிறி, கபிலன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், பார்த்தீபன் 1 இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வல்வை அணி 8 பந்துப் பரிமாற்றத்தில் 4 இலக்குகளை இழந்து 59 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. இதில் ரஞ்சித் 35 ஓட்டங்களையும் தீபன் [illegible] பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் ஸ்ரீமுருகன் அணி சார்பாக சுபா 2 [illegible] கைப்பற்றினார்.

இதில் ஆட்டநாயகனாக வல்வை அணியின் ரஞ்சித் தெரிவு செய்யப்பட்டார். (ங-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கே இப்படி; அங்கே அப்படி!



இலங்கை, ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான நான்காவது ஒருநாள் சர்வதேசப் போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்டது. எனினும் இது குறித்து இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்த்தன அதிருப்தி வெளியிட்டுள்ளார். அத்தோடு இது குறித்து தனது ஆட்சேபத்தை சர்வதேசக் கிரிக்கெட் சபையிடம் உத்தியோகபூர்வமாக எழுத்து மூலமும் தெரிவிக்கவுள்ளதாகவும் அறிவித்துள்ளார்.

சிட்னியில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 50 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 222 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. பதிலளித்தாடிய இலங்கை அணி 3.2 பந்துப் பரிமாற்றங்களில் இலக்குகள் இழப்பின்றி 14 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டது.

தொடர்ச்சியான மழை காரணமாகப் போட்டி நீண்ட நேரம் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இறுதியில் போட்டியை மீண்டும் ஆரம்பிப்பதற்குரிய தயார்நிலையில் மைதானம் காணப்படவில்லை எனத் தெரிவித்துப் போட்டி கைவிடப்படுவதாக நடுவர்கள் அறிவித்தனர்.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்த மஹேல ஜெயவர்த்தன,

''பல்லேகலயில் நியூசிலாந்து அணிக்கெதிராக மூன்று மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற போட்டியொன்றில் மழை காரணமாக இதைவிட மோசமாக மைதானம் காணப்பட்டது. எனினும் அதற்கு மத்தியிலும் போட்டி தொடர்ந்தும் நடந்தது. ஆனால் சிட்னியில் அந்தளவு தூரம் மோசமான நிலை காணப்படவில்லை. இருந்தபோதிலும் போட்டி கைவிடப்பட்டுள்ளது. இவ்வாறு ஒரே சூழ்நிலையில் வெவ்வேறான நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுவது குறித்து விளக்கம் கோரியே சர்வதேசக் கிரிக்கெட் சபைக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைக்கவுள்ளேன்.

இலங்கையில் மழைக் காலங்களின்போது மைதானம் ஒட்டுமொத்தமாக விரிப்புக்களைக் கொண்டு மூடப்படுகின்றது.

ஆனால் ஆஸ்திரேலியா போன்ற கிரிக்கெட்டிலும் தொழில்நுட்பத்திலும் முன்னேறிய நாடுகளில் ஏன் இவ்வாறு மைதானத்தை பாதுகாப்பதில்லை என்பது எனக்கு ஆச்சரியத்தை அளிக்கின்றது''-என்றார். (ந)

# நடுவர்களின் முடிவுகள்



## சாதகமாக அமையவில்லை — புலம்புகிறார் குக்

''நடுவர்களின் முடிவை மறுபரிசீலனை செய்யும் முறை இல்லாததால் எங்களுக்குச் சாதகமாக முடிவு அமையவில்லை'' என்று இங்கிலாந்து அணியின் அணித்தலைவர் அலஸ்ரயர் குக் குற்றம் சாட்டியுள்ளார்.

ராஞ்சியில் நடந்த இந்தியாவுக்கெதிரான 3 ஆவது ஒருநாள் போட்டியில் ஏற்பட்ட தோல்வி குறித்து இங்கிலாந்து அணியின் அலஸ்டயர் குக் கருத்து தெரிவிக்கையில்,

இங்கிலாந்து அணி பெற்ற 155 ஓட்டங்கள் என்ற இலக்கு இந்த ஆடுகளத்துக்கு போதுமானதல்ல.

இவ்வாறு சொற்ப ஓட்டங்களுக்குள் எங்களை வீழ்த்திய இந்திய அணியைப் பாராட்டத்தான் வேண்டும். அவர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள்.

எனினும் போட்டியின் போது நடுவர்களின் முடிவை மறுபரிசீலனை முறை பயன்படுத்தப்படாததால் சில தவறான விளைவுகளை நாங்கள் சந்திக்க வேண்டியிருந்தது. அந்த முறை நடைமுறையில் இருந்திருந்தால் சிலவேளைகளில் ஆட்டத்தில் திருப்புமுனை ஏற்பட்டிருக்கலாம். நாங்கள் நல்ல முடிவைப் பெற வேண்டுமானால் இந்திய அணியின் இலக்குகளை ஆரம்பத்திலேயே வீழ்த்தியிருக்க வேண்டும்.

எங்கள் வீரர்கள் எவரும் அடித்து ஆடுகையில் ஆட்டம் இழக்கவில்லை. தடுத்தாடும் போதே இலக்கை இழந்தனர். எங்கள் அணியினரிடம் திறமை உள்ளது. அதனை நாங்கள் சரியாக பயன்படுத்தவில்லை. அடுத்த போட்டியில் ஒருங்கிணைந்து சிறப்பாக ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றி பெறுவோம்''-என்றார். (ந)



# சறுக்கினார் சாய்னா

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில், மலேசிய பகிரங்க பட்மின்ரன் தொடர் நடைபெற்று வருகிறது.

இதில் மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் உலகத் தரவரிசையில் இரண்டாம் இடத்திலுள்ள இந்தியாவின் சாய்னா 12 ஆவது இடத்தில் இருக்கும் சீன நாட்டைச் சேர்ந்த தைபேயின் யிங்டாயை சந்தித்தார்.

இதன் முதல் செற்றை 20:22 என்று சாய்னா போராடித் தோற்றார். தொடர்ந்து இரண்டாவது செற்றிலும் ஏமாற்றிய சாய்னா 14:21 என்று இழந்தார். இதனால் இறுதிக்குச் செல்லும் வாய்ப்பை இழந்தார். (ந)

# ஏலத்தில் பனேசர்



ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் 6ஆவது சீசனுக்கான வீரர்கள் ஏலம் பெப்ரவரி 4ஆம் திகதி சென்னையில் நடைபெறவுள்ளது.

இதில் இங்கிலாந்து அணியின் முன்னணி சுழற்பந்து வீரரான மொண்டி பனேசர் வீரர்களுக்கான ஏலப் பட்டியலில் இடம் பெற்றுள் ளார்.

இங்கிலாந்து கவுண்டி கிளப்பான சசக்ஸ் அணியில் அவர் ஆடி வருகிறார். அந்த கிளப் தற்போது பனேசருக்கு அனுமதி வழங்கியதால் அவர் ஏலத்தில் இடம் பெறுவதில் இருந்த சிக்கல் நீங்கியது.

சமீபத்தில் நடந்த இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற பனேசரின் பந்து வீச்சு முக்கிய காரணமாக இருந்தது. இவரின் பந்து வீச்சு இந்திய அணிக்கு அதிகளவில் நெருக்கடி கொடுத்தது. இதனாலேயே இவர் ஏலத்தில் இடம்பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷரபோவா, ஜோகோவிச் காலிறுதிக்கு முன்னேற்றம்



ஜோகோவிச்



ஷரபோவா

ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் தொடரின் காலிறுதிக்கு ரஷ்யாவின் மரியா ஷரபோவா, செர்பியாவின் நோவக் ஜோகோவிச் உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்கள் முன்னேறியுள்ளனர்.

ஆஸ்திரேலிய பகிரங்க கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் தொடர் மெல்போர்ணில் நடைபெற்று வருகின்றது. இதன் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றில், உலகின் 'நம்பர்-2' வீராங்கனையான ஷரபோவா, பெல்ஜியத்தின் கிறிஸ்டின் பிளிப்கென்சை 6:1, 6:0 என்ற நேர் செற்களில் சுலபமாக வீழ்த்தினார். இந்த முறை 4 சுற்றுப் போட்டிகளில் வெறும் 5'கேம்களை' மட்டும் இழந்த ஷரபோவா, காலிறுதிக்கு முன்னேறி சாதனை படைத்தார். முன்னதாக ஜேர்மனியின் ஸ்டெபி கிராப் (1989), அமெரிக்காவின் மோனிகா செலஸ் (1991, 1993) ஆகியோர் தலா 8 'கேம்' இழந்து காலிறுதிக்கு தகுதி பெற்றனர் என்பதே சாதனையாக இருந்து வந்தது. ஒட்டுமொத்த கிராண்ட்ஸ்லாம் வரலாற்றில், பிரான்சின் மேரி பயர்ஸ், பிரெஞ்ச் பகிரங்க தொடரின் (1994) வெறும் 4 'கேம்களை' மட்டும் இழந்து காலிறுதிக்கு முன்னேறி சாதனை படைத்திருந்தார்.

மற்றொரு ஆட்டத்தில் போலந்தின் ரத்வன்ஸ்கா, செர்பியாவின் இவானோவிச்சை 6:2, 6:4 என்ற நேர் செற்களில் வீழ்த்தினார். சீனாவின் லீ நா, ஜேர்மனியின் ஜூலியாவை 7:6, 6:1 என்ற நேர் செற்களில் வீழ்த்தி, காலிறுதிக்குத் தகுதி பெற்றார். ஜேர்மனியின் கெர்பர், ரஷ்யாவின் எகடரினா மகரோவாவிடம் 5:7, 4:6 என்ற நேர் செற்களில் தோல்வியடைந்தார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு 4 ஆவது சுற்றில், உலகின் 'நம்பர்-1' வீரரான நோவக் ஜோகோவிச், சுவிட்சர்லாந்தின் ஸ்டானிஸ்லாஸ் வாவ்ரின்காவை சந்தித்தார். முதல் செற்றை வாவ்ரின்கா 6:1 எனக் கைப்பற்றினார். பின் எழுச்சி கண்ட ஜோகோவிச், அடுத்த இரண்டு செற்றையும் 7:5, 6:4 என தன்வசப்படுத்தி, பதிலடி கொடுத்தார். 'டை- பிரேக்கர்' வரை நீடித்த 4 ஆவது செற்றை வாவ்ரின்கா 7:6 என வென்றார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் 5 ஆவது செற்றில், இருவரும் மாறி மாறி புள்ளிகளை எடுக்க, போட்டியில் விறுவிறுப்பு ஏற்பட்டது. ஒரு கட்டத்தில் ஜோகோவிச் அசத்தி, 12:10 என அந்தச் சுற்றைத் தனதாக்கினார். சுமார் 5 மணி நேரம் நீடித்த இந்தப் போட்டியில் ஜோகோவிச் 1:6, 7:5, 6:4, 6:7, 12:10 என்ற செற் கணக்கில் போராடி வெற்றி பெற்று, காலிறுதிக்கு முன்னேறினார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவின் நான்காவது சுற்றில் ஸ்பெயினின் டேவிட் பெரர், ஜப்பானின் கெய்நிஷ்கோரியை சந்தித்தார். இதில் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய பெரர் 6:2, 6:1, 6:4 என்ற நேர் செற்களில் நிஷ் கோரியை வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதி பெற்றார்.



பெரர்

ஸ்பெயினின் நிகோலஸ் அல்மார்கோ, செர்பியாவின் ஜான்கோ டிப்சர்விச்சை சந்தித்தார். இதன் முதல் செற்றை 6:2 என நிகோலஸ் கைப்பற்றினார். இரண்டாவது செற்றில் 5:2 என நிகோலஸ் முன்னிலை வகித்த போது டிப்சர்விச் காயம் காரணமாக பாதியில் விலகினார். இதையடுத்து நிகோலஸ் காலிறுதிக்கு முன்னேறினார். மற்றொரு போட்டியில் தென்னாபிரிக்காவின் கெவின் அண்டர்சன், செக் குடியரசின் தோமஸ் பெர்டிக்கிடம் 3:6, 2:6, 6:7 என்ற நேர் செற்களில் தோல்வியடைந்து வெளியேறினார்.

கலப்பு இரட்டையர் பிரிவின் முதல் சுற்றில் இந்தியாவின் மகேஷ் பூபதி, ரஷ்யாவின் நாடியா பெட்ரோவா ஜோடி, நெதர்லாந்தின் ஜுயான் ஜுலியன், ஆஸ்திரேலியாவின் அனஸ்தாஸியா ஜோடியை 6:4, 6:2 என்ற நேர் செற்களில் வீழ்த்தி, இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றது. (நு)

# இந்தியா முதலிடம்

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் பங்குபற்றும் அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

ராஞ்சியில் நடந்த இங்கிலாந்துக்கெதிரான 3ஆவது ஒரு நாள் போட்டியில் இந்திய அணி 7 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்மூலம் இந்திய அணி ஒருநாள் போட்டி தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இதுவரை காலமும் 3ஆவது இடத்தில் இருந்த இந்திய அணி 119 புள்ளிகளைப் பெற்று முதலிடத்துக்கு முன்னேறியது. இங்கிலாந்து அணி 118 புள்ளிகளுடன் தொடர்ந்து 2 ஆவது இடத்தில் உள்ளது.

நியூஸிலாந்துக்கெதிரான ஆட்டத்தில் தோற்றதால் தென்னாபிரிக்கா 116 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்துக்கு பின்தங்கியது.

இலங்கை 4 ஆவது இடத்திலும், ஆஸ்திரேலியா 5ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 6 ஆவது இடத்திலும், மேற்கிந்தியத் தீவுகள் 7 ஆவது இடத்திலும், பங்களாதேஷ் 8 ஆவது இடத்திலும், நியூஸிலாந்து 9 ஆவது இடத்திலும் உள்ளன. (நு)



**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில் அருகாமையில் ஐந்து பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0213211321,0779989574

(25871)

**முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சைக்கான இறுதி வழி காட்டல் கருத்தரங்கு**

யாழ்.பிரபல வளவாளர்கள்
காலம் - புதன் (23/1)
வியாழன் (24/1)
காலை 9.00 - 2.30 வரை
இடம் - யாழ்ப்பாணம்
மத்திய கல்லூரி தம்பர் மண்டபம்.
வழங்கப்படும் கையேடுகளுக்கும், வசதிகளுக்குமாக ரூபா 300 அறவிடப்படும்.
ஒழுங்கமைப்பு
யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் வட்டம்.

(28590)(6.711)

**விளம்பர வடிவமைப்பாளர்**
(Graphic Designer)
உடன் தேவை
பிற்பகல் 3 மணியிலிருந்து 8 1/2 மணித்தியாலம் வேலை செய்யக்கூடிய முன் அனுபவம் உள்ள ஆண்கள் மட்டும் உங்களது சுயவிவரக்கோவையுடன் இன்று நேரில் வரவும்.

**அலுவலக உதவியாளர் தேவை**
சாவகச்சேரியில் இயங்கும் Gateway உதயன் பணிமனைக்கு

**அலுவலக உதவியாளர் தேவை**
கல்வித் தகைமை O/L சித்தி.
இன்று நேரில் வரவும்.

பொதுமுகாமையாளர், உதயன் பணிமனை.
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.